

தமிழரசு
1.11.1992 ரூ.1



# இந்த இதழில்...


சிவகங்கைச் சீமையிலே ... 2

உலகச் சிக்கன நாள் ... 9

தொழில் வளர்ச்சியில் வியத்தகு முன்னேற்றம் ... 11

நல்லுறவை வளர்க்கும் சார்க் நாடுகள் கலை விழா ... 15

ஏழை எளியோருக்கு முதல்வர் உதவி ... 17

செய்திகள்... செய்திகள்... செய்திகள் ... 18

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ... 19

தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகப் பணிகள் ... 21

நேரு வழி நடப்போம்! ... 23

திருக்கோயில் திருப்பணிகள் ... 24

வயிற்றுப்போக்கு நோயைத் தடுக்கத் தமிழக அரசு நடவடிக்கை ... 26

மாணவர் பக்கம் ... 27


நூல் நயம் ... 28

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா பாடல்கள் ... 29

டாக்டர் புரட்சித் தலைவி பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் ... 33

சாதனைகள்புரியும் தமிழ்நாடு காவல்துறை ... 35

மத்திய ரிசர்வ் போலீஸ் படைப் பிரிவு விழாவில் மாண்புமிகு முதல்வர் ... 46

வீரமங்கை வேலுநாச்சியார்


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

ஐப்பசித் திங்கள் - 16

மலர்:23 இதழ்:9

1-11-1992

நான்காம் அட்டை சொல்லும் செய்தி:

# சிவகங்கைச் சீமையிலே

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்-சிவகங்கையில் உள்ள ஆயுதக் காவல் படைத் திடலில், தமிழ்நாடு கனிம நிறுவன கிராஃபைட் சுரங்கப் பணி தொடக்க விழா, கண்ணதாசன் மணிமண்டபத் திறப்பு விழா, அரசு திட்டப் பணிகள் தொடக்க விழா, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஆகியவை 21.10.92 அன்று மாலை மிகச் சிறப்பாக நடைபெற்றன.

இதற்காகத் தனி விமானம் மூலம் வருகைதந்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அன்று காலை 11.30 மணியளவில் மதுரை விமான நிலையத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களாலும், வாரியத் தலைவர்களாலும், அரசு உயர் அதிகாரிகள்- காவல் துறை உயர் அதிகாரிகள் ஆகியோராலும் மகிழ்வோடு வரவேற்கப்பட்டார்.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ்.ஆதிசேஷய்யா, இ.ஆ.ப., மதுரை மாநகராட்சி ஆணையர் திரு. டேவிதார், மதுரை நகரக் காவல்துறை ஆணையாளர் திரு. பாலச்சந்திரன், மதுரை இராஜாஜி மருத்துவமனை டீன் திரு. வீரபாகு ஆகியோரும் மாண்புமிகு முதல்வர் அவர்களை வரவேற்றனர்.

பல்லாயிரக்கணக்கில்- ஆண்களும் பெண்களுமாக விமான நிலையத்தில் கூடியிருந்தவர்களும் உற்சாகமான வாழ்த்து முழக்கத்தோடு மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்புடன் வரவேற்றார்கள்.

மாண்புமிகு முதல்வரின் வருகையையொட்டி மதுரையில் ஆங்காங்கே வகை வகையான வரவேற்பு வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன.

நகரிலிருந்த தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் போன்ற ஆன்றோர்களின் திருவுருவச் சிலைகளெல்லாம் மாலையிட்டும், மலர்க் கோல வளைவுகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

ஆண்டின் பெரும்பாலான காலம் மணல் பரப்பாகவே காணப்படும் வைகையாற்றிலும் தண்ணீர் கரைபுரண்டோடியது.

**மதுரையிலிருந்து சிவகங்கை நோக்கி...**

சிறிது நேர ஓய்வுக்குப் பின்னர் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், கார் மூலம் ஒரு மணியளவில் சிவகங்கை நோக்கிப் பயணமானார்.

வீதியின் இருமருங்கிலும் ஏராளமான பொதுமக்கள் சாரிசாரியாக நின்றிருந்து மாண்புமிகு முதல்வர் அவர்களை வாழ்த்தொலி எழுப்பியும், பாண்டிய நாட்டுக்கே உரிய வண்ணம் தாரை, தப்பட்டை, கொம்பு கொண்டு முழக்கியும் வரவேற்றார்கள்.

வெயிலையும் பொருட்படுத்தாமல் அம்மக்கள் நின்றிருப்பதைப் பார்த்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஆங்காங்கே அம்மக்கள் வழங்கிய மாலைகளை- சால்வைகளை- பூரண கும்ப வரவேற்பை- ஆரத்தித் தட்டு வரவேற்பைக் காரினின்றும் இறங்கி ஏற்றுக் கொண்டார்கள்.

மேலூர், மலம்பட்டி வழியே- சிவகங்கை செல்லும் 70 கி.மீ சாலையில், கார்களின் அணிவகுப்பு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. வழிநெடுகிலும் வரவேற்பு வண்ணச் சுவரொட்டிகளும், வரவேற்பு வளைவுகளும், பல நிறக்



கொடித் தோரணங்களும் அணி செய்து கொண்டிருந்தன.

சில மைல்களுக்கப்பால், சாலையின் வலதுபுறத்தில்- மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைக்கவிருக்கும் கிராஃபைட் சுரங்கப் பணிக்கான விரிவான இடம் காணப்பட்டது.

கோமளிப்பட்டி, தென்னம்பட்டி மக்களின் வரவேற்புப் பதாகையையொட்டியிருந்த தமிழ்நாடு கனிம நிறுவனத்தாரின் அறிவிப்புப் பலகையில்- 'திட்டம் துவங்கப்பட்ட நாள் 1.8.92, திட்டப்பணி நிறைவு பெறுவதாகக் கருதப்படும் நாள் 31.1.1994, திட்ட முதலீடு ரூ.22 கோடி' என்பன போன்ற குறிப்புகள் காணப்பட்டன.

**சிவகங்கைச் சீமையிலே...**

சிவகங்கையில், மருதுபாண்டியர் நகரில் இருந்த பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் வண்ண விளக்குகளாலும், பலநிறக் கொடித் தோரணங்களாலும், பாங்குற அழகுபடுத்தப்பட்டிருந்தது.

அதையடுத்தாற்போலச் சிறிது தூரத்தில் இருந்த 'வேலுநாச்சியார் விருந்தினர் மாளிகை'யின் நுழைவு வாயிலில் அமைக்கப்பட்டிருந்த வரவேற்புப் பதாகையில் 'காவியத் தலைவியே வருக' என்ற வாசகங்கள் வண்ண மலர்களால் காட்சி தந்தன.

அதற்குக் கொஞ்ச தூரத்தில் உள்ள ஆயுதக் காவல் படைத் திடலில்தான் விசாலமான விழா மேடையும், அதைத் தொடர்ந்து மாநாட்டுக்கு அமைப்பது போலப் பல இலட்சம் பேர் அமரத்தக்க விரிவான- தட்டுப்பந்தலும் போடப்பட்டிருந்தது. நுழைவு வாயிலில் தஞ்சாவூர் பாணி கீற்றுக் கோபுரங்கள் இரண்டு நிமிர்ந்து நின்றன.

மேடைக்குச் செல்லும் வழியில் மலர்கள் பரப்பப்பட்டிருந்தன. இருமருங்கிலும், மாண்புமிகு முதல்வர் அவர்களை வரவேற்கச் சிவகங்கைச் சிறுமியர் முகத்தில் முறுவலும், கரத்தில் பூத்தட்டுமாகப் பூரிப்போடு நின்றிருந்தனர்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்- காமராஜர்- இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வாரியங்களின் தலைவர்கள், காவல்துறை உயர் அதிகாரிகள், அரசு உயர் அதிகாரிகள், நாடாளுமன்ற- சட்டமன்ற உறுப்பினர்கள்- இலட்சோபலட்சம் பொதுமக்கள் ஆகியோர் வருகை தந்திருந்தார்கள்.

ரோஜா, கனகாம்பரம், செவ்வந்தி, முல்லை, மல்லிகை, வாடாமல்லி போன்ற மலர்களால் கண்ணைக் கவரும் விதத்தில் அழகுற அமைக்கப்பட்டிருந்த விழா மேடையில்- அறிஞர் அண்ணா, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா, டாக்டர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் படங்கள் வைக்கப்பட்டிருந்தன.

விழா தொடங்குமுன், பாண்டியன் போக்குவரத்துக் கழக இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. 4 மணியளவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகை புரிந்தார்; பொது மக்கள் வாழ்த்தொலி மண்ணதிரச் செய்தது. மேடைக்கு வந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், நாலாபுறமும் அலைமோதிய மக்களைப் பார்த்து மகிழ்வோடு கையசைத்தார்.

விழா நிகழ்ச்சிகளைச் செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. க.கணேசன், இ.ஆ.ப. அவர்கள் தொகுத்து வழங்கினார்.

**பொதுப்பணித்துறை அமைச்சர்**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் தம்முடைய வரவேற்புரையில் - ''வாடிக் கிடக்கும் நம்முடைய பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திற்கு வளம்சேர்க்க, வாராது வந்த மாமணியாக வந்திருக்கின்ற மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களை, மாவட்ட மக்கள் சார்பில் வரவேற்பதில் மகிழ்கிறேன். இந்த மாவட்டம் தொழில்வளம் பெறவேண்டும்; மாவட்ட மக்களுக்கெல்லாம் வேலை வாய்ப்புக் கிட்டவேண்டும் என்கிற உயர்ந்த நோக்கத்துடனேயே இன்றைக்கு கிராஃபைட் சுரங்கப்பணி முதலான பல தொழில்கள் இங்கே துவக்கி வைக்கப்படுகின்றன. இனி இந்த மாவட்டம் உள்ளபடியே பசும்-பொன் மாவட்டம் ஆகிவிடும்!'' என்று குறிப்பிட்டார்.

**திட்ட விளக்க உரை**

திட்ட விளக்கவுரையாற்றிய - தமிழ்நாடு கனிம நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர், திரு. ஏ.என். தியானேஸ்வரன், இ.ஆ.ப. அவர்கள் - ''கால்டுவெல், இராமநாதபுரத்தைப் பாலைவனபூமி என்று அப்போது எழுதினார்; அப்படிப்பட்ட பகுதியில்தான் இன்று கிராஃபைட் சுரங்கம் தோண்டப்படவிருக்கின்றது; இன்னும் ஆயிரம் ஆண்டுகள் போனால் வைரமாக மாறக்கூடியது இந்த கிராஃபைட். மன்னர் சேதுபதி, வேலுநாச்சியார் முத்துராமலிங்கத் தேவர் போன்றவர்களால் வீரம் மட்டுமே விளையும் நிலமாக இருந்த இந்த பூமி, இனி மாண்புமிகு முதல்வர் அவர்களால்



வீரமும் விவேகமும் பல்வகை வளமும் விளையும் பூமியாக மாறும்'' என்றார்.

**தொடக்க விழாக்கள்**

அதன்பின் - மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் - கிராஃபைட் சுரங்கப்பணி, அரசு திட்டப் பணிகள் ஆகியவற்றைத் தொடங்கி வைத்தார். 52 புதிய பேருந்து வழித்தடங்கள் தொடங்கி வைக்கப்பட்டன. கண்ணதாசன் மணி மண்டபம் திறந்து வைக்கப் பட்டது. பல்வேறு அரசு வளர்ச்சிப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

**வாழ்த்துரைகள்**

தமிழக அரசின் தொழில்துறை முதன்மைச் செயலர், திரு. சி. இராமச்சந்திரன், இ.ஆ.ப., சிவ கங்கைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கரு. முருகானந்தம், சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. ப. சிதம்பரம், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர், திருமதி புலவர் ஆர். இந்திரகுமாரி, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன், மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. கோ. விசுவநாதன், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு, மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ.செங்கோட்டையன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் வாழ்த்துரை, கவிதை நடையிலேயே அமைந்திருந்தது.

**தலைமையுரை:**

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ் செழியன் அவர்கள் விழாத் தலை மையுரையாற்றினார். இது வீரம் செறிந்த மண், தமிழ்மணம் கமழ்ந் தமண்; புரட்சிக் கவிஞர் பாரதி தாசனார்-

''வெள்ளம்போல் தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம்; அன்னார்
உள்ளத்தால் ஒருவரே மற்(று)
உடலினால் பரலாய்க் காண்பர்;
கள்ளத்தால் நெருங் கொணாதே
எனவையம் கலங்கக் கண்டு
துள்ளும்நாள் எந்நாள்? உள்ளம்
சொக்கும்நாள் எந்த நாளோ?''

- என்று கேட்டார்; அது இந்த நாள் என்று கூறுகிற அளவிற்கு இங்கே இவ்விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; வாளெடுத்து வேலுநாச்சியார் உலவிய இம்மண் ணுக்கு, செங் கோலெடுத்து ஆட்சி செலுத்தும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வருகை தந்து பெருமை செய்திருக்கிறார்'' என்று அப்போது அவர் குறிப்பிட்டார்.

**விழாப் பேருரை**

இதன்பின் - மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விழாப் பேருரை ஆற்றினார்.

அதனையடுத்து - பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், இராம நாதபுரம் மற்றும் காமராசர் மாவட் டங்களைச் சேர்ந்த நலிந்த பிரிவின ருக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

## திட்டப் பணிகள்!

மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால், 21.10.92 அன்று, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத் தைச் சேர்ந்த சிவகங்கையில் தொடங்கி வைக்கப்பட்ட திட்டங்கள்- அரசு நலப்பணிகள் குறித்த விவ ரங்கள் வருமாறு:

★ ரூ.22 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் கிராஃபைட் சுரங்கத் திட்டம்.

★ ரூ.5.30 கோடி செலவில் புதி தாகக் கட்டப்பட்டுள்ள உபமின் நிலையங்கள் மற்றும் அலுவலகக் கட்டடங்கள்.

★ ஊரக வளர்ச்சித் துறையில் பள்ளிக் கட்டடங்கள், தொகுப்பு வீடுகள், ஜீவன்தாரா கிணறுகள் ரூ.5.09 கோடி செலவில்.

★ ரூ.4.35 கோடி செலவில் குடி நீர்த் திட்டங்கள்.

★ சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் காரைக் குடியில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரி யத்தின் மூலமாக 1.53 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான குடியிருப் புகள்.

★ சிவகங்கை நகரில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக 86 இலட்சம் ரூபாய் செலவில் புதிய குடியிருப்புகள்.

★ 2.34 கோடி ரூபாய் செலவில் ஊரக வளர்ச்சித் திட்டங்கள்-

★ 61 இலட்சம் ரூபாய் செலவில் வறட்சி நிவாரணப் பணிகள்.

★ கிராமப்புறச் சாலைகளை ரூ.3.89 கோடி செலவில் மேம்படுத் துதல்.

★ 'கவியரசு கண்ணதாசன் மணி மண்டபம் ரூ.55 இலட்சம் செலவில்.

★ பொதுப்பணித்துறை மூலம் அணைக்கட்டுகள், அரசு கட்ட டங்கள் ரூ.2.75 கோடி செலவில்.

★ காரைக்குடி நகராட்சியில் ரூ.24 இலட்சம் செலவில் வணிக வளாகம்.

★ 50 புதிய பேருந்து வழித் தடங்கள்.

★ 6.53 கோடி ரூபாய் செலவில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 2,448 பணிகள்.

★ சமுதாயத்தின் நலிந்த பிரிவின ருக்குப் பயன்தரத் தக்க வகையில் 3 கோடி ரூபாய் செலவில் நலத் திட் டங்கள்.

★ பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், இராமநாதபுரம், காமராசர் மாவட்டங்களிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனுச் செய்த 1,500 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள்.

- மேலும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், ரூ.3,586.64 இலட்சம் மதிப்பீட்டி லான பின்கண்ட 5 திட்டங்களுக்கும் கால்கோள் நாட்டித் துவக்கி வைத்தார்.

**துறையின் பெயர் திட்டத்தின் பெயர் மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்)**

**கால்கோள் நாட்டுதல் மற்றும் துவக்கி வைத்தல்**

1. தமிழ்நாடு கனிம நிறுவனம்/ கிராஃபைட் திட்டம் ரூ. 2200.00

2. ஊரக வளர்ச்சித்துறை (வேலைகள்) 887.44

3. தமிழ்நாடு நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை 389.20

4. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் (வீடுகள்) 86.00

5. காரைக்குடி நகராட்சி - அங்காடி வளாகம் கட்டுதல் 24.00

மொத்தம் 3,586.64

அதேபோல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ரூ.2279.60 இலட்சம் மதிப்பீட்டிலான பின் கண்ட 8 திட்டங்களைத் திறந்து வைத்தார்கள்.

1. ஊரக வளர்ச்சித்துறை - பள்ளிக் கட்டடங்கள் - தொகுப்பு வீடுகள் - ஜீவன்தாரா கிணறுகள் முதலியன ரூ. 509.83

2. தமிழ்நாடு மின்சார வாரியம் - துணை மின் நிலையம் ரூ. 530.05

3. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் - குடிநீர் வழங்கும் திட்டம் ரூ. 435.34

4. பொதுப்பணித்துறை - பல்வகை மேம்பாட்டுத் திட்டங்கள் ரூ. 330.64

5. மருதுபாண்டியர், கட்டபொம்மன், நேசமணி போக்குவரத்துக் கழகங்கள் - புதிய பேருந்துகள் இயக்குதல் ரூ. 300.00

6. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் - எல்.எம்.டி. திட்டம் வீடுகள் கட்டும் திட்டம் ரூ. 153.87

7. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் - கிட்டங்கி திறப்பு விழா ரூ. 11.00

8. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை - புதிய பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி திறப்பு ரூ. 7.97

மொத்தம் 2279.60

இவை தவிர - மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ரூ.292.10 இலட்சம் மதிப்பீட்டிலான 12 வகையான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

1. இராமநாதபுரம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி ரூ. 100.00
2. ஊரக வளர்ச்சித்துறை - நலத் திட்டங்கள் ரூ. 67.72
3. வருவாய்த்துறை ரூ. 34.43
4. சமூகநலத்துறை - நலத் திட்டங்கள் ரூ. 32.00
5. கூட்டுறவுத்துறை - விவசாயி களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல் ரூ. 30.00
6. வேளாண்மைத்துறை - வேளாண் கருவிகள் வாங்க மானியம் ரூ. 11.86
7. சமூக நலத்துறை - நலத்திட்ட உதவி ரூ. 5.87
8. சிறுசேமிப்புத்துறை - பரிசு வழங்குதல் ரூ. 3.81
9. மாவட்டத் தொழில் மையம் - மின்னழுத்தக் குறைவு ஈட்டு மானியம் ரூ. 3.05
10. தாட்கோ - நலத்திட்ட உதவி ரூ. 3.04
11. ஆதிதிராவிடர் நலத்துறை - உதவி மானியம் ரூ. 0.16
12. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை - நலத் திட்டங்கள் ரூ. 0.16

மொத்தம் 292.10

**சுருக்கம்**

ரூ. இலட்சத்தில்

1. கால்கோள் விழா ரூ.3586.64
2. திறப்பு விழா ரூ. 79.60
3. நலத்திட்ட உதவிகள் வழங்குதல் ரூ.292.10

மொத்தம் 6,158.34

ரூ.22 கோடி செலவிலான கிராஃபைட் சுரங்கம் வெட்டும் பணிகளையும் முதல் அமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தொடங்கிவைத்தார். கவிஞர் கண்ணதாசன் மணி மண்டபத்தையும் திறந்து வைத்தார்.

**- நிகழ்ச்சித் தொகுப்பு: 'முடிகொண்டான்'.**

## புதுடெல்லியில் தமிழகக் கலைக் குழுவிற்குப் பரிசு

**மதங்களிடையே ஒற்றுமையை வலியுத்தும் வகையில் ''பூல்வாலோங்கி சாயர்'' என்று அழைக்கப்படும் மலர்ப் பேரணி விழா 11.10.1992 அன்று மேதகு குடியரசுத் துணைத் தலைவர் தலைமையில் நடைபெற்றது.**

**செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு இவ்விழாவில் கலந்து கொண்ட தமிழகக் கரகாட்டக் குழுவினரின் கலைநிகழ்ச்சி நடந்தது. மேலும் இந்து, முஸ்லிம், கிறித்துவ மத ஒற்றுமையை விளக்கும் வகையிலான விசிறிகள் இரண்டும் இவ்விழாவில் தமிழ்நாடு அரசின் சார்பில் எடுத்துச் செல்லப் பட்டது.**

**மேதகு குடியரசுத் துணைத் தலைவர், டெல்லி துணைநிலை ஆளுநர் மற்றும் ஆயிரக் கணக்கான பொதுமக்கள் முன்னிலையில் நடை பெற்ற பேரணியில் மேற்படி கலைநிகழ்ச்சி நடத்தப்பட்டது. மேலும் வண்ண விசிறிகளும் பேரணியில் எடுத்துச் செல்லப்பட்டன.**

**இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கான தேர்வில் தமிழ்நாட்டைச் சேர்ந்த கலைக்குழு அளித்த கலைநிகழ்ச்சி சிறந்தது என்று தேர்ந் தெடுக்கப்பட்டு, பரிசுக்குரியது என்றும் அறிவிக் கப்பட்டது. மேதகு இந்தியக் குடியரசுத்துணைத் தலைவர் தமிழக அணிக்குச் சிறந்த கலைக்குழு வினருக்கான பரிசினை வழங்கினார்.**



ஜனநாயகத்தில்

# ஓர் அரசைக் குறைகூறுவது விமர்சனம் செய்வது தவறல்ல; ஆனால், அவை ஆக்கபூர்வமானதாக இருக்கவேண்டும் என்பதே நம் எதிர்பார்ப்பு!

– சிவகங்கைச் சீமையில் முதல்வர் உரை

**ச**ங்க காலம் முதல், வீர வரலாறு தொடர்ந்து வரும் வெற்றிச்சீமை, இந்த சிவகங்கைச் சீமை. மாமன்னர்கள் மருது சகோதரர்களும், மானங்காத்த மாவீரர்களும், சீறிவரும் புலியை முறத்தால் துரத்திய மறக்குல மாதரசிகளும், மாபெரும் புலவர்களும் வாழ்ந்த மண் இந்த மண்! திராவிட இயக்கச் சீர்திருத்தச் செம்மல்களைத் தந்ததும் இந்த மண்! திராவிட இயக்க வெற்றி மாநாடுகளைக் கண்டதும் இந்த மண்! இந்த மண் சிவந்திருக்கிறது. காரணம் என்ன என்று நான் எண்ணிப் பார்க்கிறேன். தாயகத்தின் விடுதலைக்காகவும், திராவிட இயக்கத்தைக் காப்பதற்காகவும், செந்தமிழ்ச் சிங்கங்கள் சிந்திய செங்குருதி தந்த செம்மைதான் இந்த மண்ணின் சிவப்புக்குக் காரணமாக இருக்க வேண்டும், என்று உணர்ந்தேன்.

தமிழக வரலாற்றில் பசும்பொன்னால் பொறிக்கத்தக்கத் திருப்பெயர், முத்துராமலிங்கத் தேவர்! அந்தப் பெருமகனின் பெயரைத் தாங்கி இருக்கிற, புகழுக்குரிய பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில், வேலும், வாளும் விளையாடிய இப்பகுதியில், மருதிருவர் புகழ் பாடும் சிவகங்கை நகரில், வீரத்தின் விளை நிலங்களாகிய உங்கள் அனைவரையும் சந்திப்பதில், பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தில், தமிழ் கூறும் நல்லுலகில், எல்லா இடங்களிலும், 'தேவர்' என்று குறிப்பிட்டால், முத்துராமலிங்க தேவர்தான். என்று எவரும் உணர்ந்து கொள்ளும் அளவுக்குக் கொள்கைக் கோபுரமாய் உயர்ந்து நிற்பவர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள்.

**புகழ் சேர்த்தவர்!**

சத்தியத்தின் ,நிலைக்களமாய், சான்றாண்மையின் பிறப்பிடமாய், தேசியம், தெய்வீகம், செந்தமிழ் என்ற மூன்றும், ஓர் உருவாய்ப் பிறந்து வந்தது போல் வந்த அந்த வரலாற்று நாயகருக்கு அவர் பெயரால் மாவட்டம் அமைத்து, மாபெரும் புகழ் சேர்த்தவர். பொன்மனச் செம்மல் நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

'பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்' என்ற பெயரில், புரட்சித் தலைவர் அவர்களால் அமைக்கப்பட்ட இந்த மாவட்டத்துக்குப் 'பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்' என்று,



இடைக்கால அரசு ஒன்று பெயர் வைத்தது. தேவர் திருமகன் என்றாலே அவர்தான் என்றாலும், பெயர் விளங்கத்தானே பெயர் வைக்கிறோம். அந்தப் பெய்ரையே மறைத்து விட்டால் எப்படி?

வாழையடி வாழையென வருகிற தமிழ்ச் சமுதாயம் அந்தத் திருப்பெயரை மறந்துவிடக் கூடாதே என்பதற்காக, உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், ஆட்சிப்பொறுப்பை ஏற்றதும், ''பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்'' என்ற பெயர் மாற்றம் செய்ய உத்தரவிட்டேன். 'முத்துராமலிங்கம்' என்னும் திருப்பெயர் மீது, பெயர் மாற்றம் செய்த பெருமக்களுக்கு என்ன கோபமோ தெரியவில்லை - மறைத்துவிட்டார்கள். ஊரையே கபளீகரம் செய்ய வல்லவர்கள், முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பெயரையே கபளீகரம் செய்ததில் வியப்பில்லை அல்லவா? நாட்டுக்கும், மொழிக்கும், நாளெல்லாம் உழைத்த பெருமக்களின் திருநாமம். நாவில் என்றும் நடமாட வேண்டும் என்பதே. நாட்டுமக்களின் விருப்பம். அந்த விருப்பத்தின் செயலாக்கம் தான் இந்தப் பெயர் மாற்றம்!

**நெஞ்சம் வணங்கும் பூமி**

எவ்வளவு பெரிய இலட்சியவாதிகள் வாழ்ந்த மண் இந்த மண் என்று நினைக்கையில், என் நெஞ்சம் இந்தப் பூமியை வணங்குகிறது. சிவகங்கைச் சீமை என்றாலே, அது வீரத்தின் விளை நிலம் என்று, பள்ளி மாணவரும் விளங்கிக் கொள்ளும் அளவுக்கு, இந்த மண்ணில், வீரத்தின் விதைகள் ஊன்றப்பட்டிருக்கின்றன.

ஆங்கிலேயர் ஆதிக்கத்தை எதிர்த்து, அடிமை இந்தியாவில் கேட்ட முதற்குரல்கள், தெற்கேதான் தோன்றின. மருது பாண்டியர்கள். மாவீரன் புலித்தேவன், வீரபாண்டியக் கட்டபொம்மன், இவர்களின் குரல்கள் சுதந்திரத்தின் முதற் குரல்கள், அந்த மகத்தான வீரர்களின் வரிசையில் இடம்பெற்ற, மருது சகோரர்களைப் பற்றி, இந்த மண்ணில் நின்று கொண்டிருக்கிற நான், நினைக்காமல் இருக்க முடியுமா?

மாசு மருவற்ற மறவர்குல மாணிக்கங்கள், மருது சகோதரர்கள், விடுதலைக்குப் போரிட்ட வீரத்துக்காக மட்டுமல்ல; தஞ்சமடைந்த ஊமைத் துரையைத் தலைபோனாலும் காப்போம் என்னும் தர்ம சிந்தனைக்காகவும், நம் நெஞ்சில் பெரிய மருதும், சின்னமருதும், நீங்கா இடம் பெறுகிறார்கள். இந்த அறப்பண்பும், மான உணர்வும், இந்தியாவில் அன்றைக்கு ஒரு சில அரசர்களுக்காவது இருந்தால், பாரதம் 19-ஆம் நூற்றாண்டிலேயே சுதந்திரம் அடைந்திருக்கும். என்ன செய்வது? எல்லோரும் அப்படி இல்லையே! இன்றையச் சூழ்நிலைகூட அதுதானே!

இலட்சியத்தை முன் வைத்து, வீறு நடை போடும் அரசுகளைக் காட்டிக் கொடுப்பதும், போகிற போக்கிலே சேற்றை அள்ளி வீசுவதும், கொள்கையில்லாத சில குழப்பவாதிகளின் கூடப்பிறந்த குணமாகத்தானே இருக்கிறது! இருந்தாலும், சூழ்ச்சி தன்னை, வஞ்சகம் தன்னை, பொறாமை தன்னைத் தொகை தொகையாய், எதிர் நிறுத்தித், தூள் தூளாக்கும் மறச்சிந்தை கொண்ட நீங்கள், இன்றைக்கு எனக்கு இருப்பதைப் போலவே, அன்று மக்கள், மருது சகோதரர்களுக்கு மாபெரும் அரணாய் இருந்தார்கள்.

மருது சகோதரர்களின் ஆட்சியை வரலாறு வாழ்த்துகிறது. வீரத்தால் மட்டுமல்ல, நிர்வாகச் சிறப்பாலும் நீடு புகழ் பெற்றவர்கள் மருது பாண்டியர்.

இயல்பாகவே பின் தங்கிய பகுதியாக இருக்கிற இந்தச் சீமையில், அன்ன சத்திரம்வைத்து, ஆருயிர் மக்களைக் காத்தவர்கள் அவர்கள். காளையார் கோயில், குன்றக்குடி, சிவகங்கை, திருப்பத்தூர், திருக்கோஷ்டியூர், மானாமதுரை, முத்தனேந்தல் போன்ற இடங்களில், அவர்கள் அமைத்த அன்ன சத்திரங்கள், நன்றியுணர்வுமிக்க மக்களால், இன்றும் நினைவு கூரப்படுகின்றன. அதே பணியைத்தான், இன்று உங்களது அரசு, உங்கள் அன்பையே பெரிதாக எண்ணும், உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மூலம் நிறைவேற்றுகிறது!

காலம் மாறலாம். கடைப்பிடிக்கின்ற ஆட்கள் மாறலாம். ஆனால் நல்ல தத்துவங்கள் நம்மிடையே நிலைக்கின்றன. நல்லவர்களால் நாளும் தொடரப்படுகின்றன.

அன்று, 1801 அக்டோபர் முதல்நாளில், அசுரத் தனமான படை பலத்தால், மூர்க்கத்தனத்தால், ஆங்கிலேயர்கள், சிவகங்கைச் சீமையைப் பிடித்த போதும், மருது பாண்டியர்களைப் பிடிக்க முடியவில்லை; சூழ்ச்சியாலேயே ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ளத் தெரிந்த வெள்ளையர்கள், எவரும் எப்போதும் நினைத்துப் பார்த்திராத, கொடுமையான தந்திரத்தைக் கையாண்டார்கள்.

பொன்னுக்கும் பொருளுக்கும் ஆசைப்பட்ட

ஒரு கயவனால், சின்ன மருது காட்டிக் கொடுக்கப்பட்டுச் சிறைப்பட்டார். பெரிய மருதை எப்படிப் பிடிப்பது என்று திட்டமிட்ட வெள்ளையர், ஓர் அறிவிப்பைச் செய்தார்கள். ''10 நாட்களுக்குள், பெரிய மருது தங்களிடம் வந்து சரணடையாவிட்டால், அவரது அன்புக்கும், அளவற்ற ஈடுபாட்டுக்கும் உரிய, காளீஸ்வரர் கோயில் கொண்டிருக்கும் காளையார் கோயில் இடித்துத் தள்ளப்படும்'' என்பதுதான் அந்த அறிவிப்பு.

வெள்ளையர் தந்திரம் பலித்தது. தன்னைத் தந்தாவது ஆலயத்தைக் காக்கவேண்டும் என்னும் தியாக உணர்வில், பெரிய மருது தன்னைத்தானே வெள்ளையரிடம் ஒப்படைத்தார்.

1801-ஆம் ஆண்டு, இதே அக்டோபர் மாதம் 27-ஆம் நாளில், பெரிய மருது திருப்பத்தூரில் தூக்கிலிடப்பட்டார். அதற்கு மூன்று நாள் முன்பே, சின்ன மருது தூக்கில் போடப்பட்டார்.

ஆலயம் காக்க, தெய்வ உணர்வை மங்காது வளர்க்க, பாரம்பரிய மிக்க கலைச் சின்னங்களைப் பாதுகாக்க, என்ன விலை தரலாம் என்றால் தன்னையே விலையாகத் தரலாம் என்னும் தத்துவத்தை நிலைநாட்டியவர் பெரிய மருது. ஆகவேதான், இந்த மண்ணில் வாழும் மக்கள், இன்றைக்கும் 'மருது' என்னும் பெயர் சூட்டி மகிழ்கிறார்கள்.

அன்று பெரிய மருது போதித்த தத்துவத்தைத்தான், இன்று உங்கள் அரசு, உங்கள் சகோதரியின் தலைமையிலான அரசு, செயல்படுத்தி வருகிறது. கோயில் விளங்க குடிமக்கள் விளங்குகிறார்கள், என்பதுதானே, தமிழ்த்தாய் தந்த தத்துவம். அந்தத் தத்துவத்தின் செயற்பாடுதான், தமிழக அரசின் ஆலய மேம்பாட்டுத் திட்டம்.

**நலத்திட்ட உதவிகள்**

ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த 16 மாத காலத்தில், ஏழை, எளிய மக்களுக்காக, நலிவுற்ற பிரிவினருக்காக, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, உங்கள் அரசு ஆற்றியுள்ள அரும் பணிகளை அறிந்தவர்கள் நீங்கள். மாவட்டந்தோறும் மக்களிடமிருந்து கோரிக்கைகளைப் பெற்று, தகுதியுள்ள அனைவரையும், தலைமைச் செயலகத்துக்கு, அரசாங்கச் செலவில் வரவழைத்து, பல்வேறு திட்டங்களின் கீழ் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு, நலத்திட்ட உதவிகளை, கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புக்கு அரசு வழங்கி வருகிறது.

இந்தியாவிலேயே முன்னோடித் திட்டமாக மருத்துவ முகாம்கள் நடத்தும் திட்டம், தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்படுகிறது. மருத்துவமனைகளுக்கு நோயாளிகள் வருவது தவிர, மருத்துவர்களே மக்களைச் சந்தித்து நோயை அறிந்து, அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் மகத்தான திட்டமாக, இத்திட்டம் ஏழை எளியோரைக் கவர்ந்துள்ளது.

தமிழகத்தில் வாழும் ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற விவசாயிகளுக்கும், நகரங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை எளியவர்களுக்கும், இலவச சேலை - வேட்டி வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி உள்ளோம். வருகின்ற ஆண்டும் இலவச சேலை வேட்டி, உங்களுக்குக் கிடைக்கும்; கண்டிப்பாகப் பொங்கல் தினத்திற்கு முன்பே கிடைக்கும்.

இவ்வாறு ஒவ்வொரு துறையிலும், புதுமைகளைப் படைக்கும் அரசாக, உங்கள் அரசு செயல்பட்டு வருவதை, நீங்கள் காண்கின்றீர்கள். சமுதாயத்தின் எல்லாத் தரப்பினருக்கும் உரிய உதவிகளை வழங்க, அவர்களைப் பாதுகாக்க, இந்த அரசு என்றுமே தயங்கியதில்லை. உங்கள் சகோதரியாகிய நான், கை நிறைய உதவிகளையும், மனம் நிறையத் திட்டங்களையும் சுமந்து வந்து, உங்கள் முன் இன்று நிற்கிறேன்.



**ரூபாய் 62 கோடிக்கான திட்டங்கள்**

இன்று உங்களைக் காண வந்திருக்கின்ற நான், உங்கள் மாவட்ட வளர்ச்சிக்காக, ஒன்றல்ல, இரண்டல்ல, 62 கோடி ரூபாய்க்கான திட்டங்களோடு வந்திருக்கிறேன். பல்வேறு துறைகளின் மூலம், இப்பகுதி மக்களுக்குப் பயனளிக்கும் திட்டங்கள் இவைகள்.

இப்பகுதி மக்கள் நீண்ட நாட்களாக ஆவலுடன் எதிர்பார்த்து இருந்த, சிவகங்கை கிராபைட் திட்டப்பணி, இன்று முதல் தொடங்குகிறது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 1970-ஆம் ஆண்டிலேயே, சிவகங்கைப் பகுதியில் தரமான கிராபைட் படிமங்கள் இருக்கின்றன என்று கண்டுபிடிக்கப் பட்டும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான், இத்திட்டத்தைப் பரிசீலனை செய்து முடிவெடுக்க, 477 ஏக்கர் பட்டா நிலத்தை ஆர்ஜிதம் செய்து, 423 ஏக்கர் அரசு புறம்போக்குகளையும் சேர்த்து ஆக மொத்தம் 900 ஏக்கர் நிலம், 'டாமின்' நிறுவனத்திடம் 1984-ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டது.

(தொடர்ச்சி 41. ஆம் பக்கம் பார்க்க)



# உலகச் சிக்கன நாள்

## மாண்புமிகு நிதி அமைச்சர்
## டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்

**ஆ**ண்டுதோறும், அக்டோபர் 30-ஆம் நாளை, உலகச் சிக்கன நாளாகக் கொண்டாடும் நிகழ்ச்சி, இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களிலும் நடைபெற்று வருகின்றது. அக்டோபர் திங்கள் இறுதியில், உலகச் சிக்கன நாளைக் கொண்டாடிச் சிக்கனப் பழக்கத்தையும், சேமிப்புத் தன்மையையும், உலக மக்களிடையே சீரிய முறையில் ஏற்படுத்த வேண்டும் என்பது, 1924-ஆம் ஆண்டில், இத்தாலி நாட்டு மிலான் நகரில் கூடிய, உலகச் சேமிப்பு வங்கிகளின் பேராளர்கள் எடுத்த முடிவாகும்.

சிக்கனம், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும், ஒவ்வொரு நாட்டிற்கும் சேமிப்பைத்தரும்; சேமிப்பு, சீரான வசதிகளைப் பெருக்கும்; சீரான வசதிகள், செம்மையான வாழ்வை உருவாக்கும்; செம்மையான வாழ்வு, நல்ல மனநிறைவை அளிக்கும்; மனநிறைவு, மட்டற்ற மகிழ்ச்சியை உண்டாக்கும்.

'வாழ்க்கையின் மிகப்பெரிய சாதனை, என்றென்றும் மகிழ்ச்சியோடு இருத்தல்' என்று மேனாட்டுப் பேரறிஞர் ஒருவர் குறிப்பிட்டார். 'சிக்கனம் வீட்டைக் காக்கும்; சேமிப்பு நாட்டைக் காக்கும்' என்பது பழமொழி. ஒருவர், ஊதாரித்தனமாகச் செலவு செய்துவிட்டு, வாழ்க்கையில் உழலவும் கூடாது; கருமித்தனத்தைக் கடைப்பிடித்து, வாழ்க்கையில் கலங்கவும் கூடாது. தேவையானவற்றிற்கு மட்டுமே, தேவையான அளவுக்குச் செலவிடப் பழகுவது, என்பது சிக்கன நெறிமுறையாகும்.

100-க்கு 85 பேர்களிடத்தில், ஏழ்மை - வறுமை - இல்லாமை - போதாமை போன்ற நெருக்கடி நிலைமைகள் தாண்டவமாடும் நமது நாட்டில், ஓரளவுக்கு அக்கொடுமைகளிலிருந்து விடுபட, ஒவ்வொருவருக்கும் சிக்கன வாழ்வுதான் பெரிதும் கைகொடுக்க வல்லதாகும். சிக்கனத்தின் மூலம் கிடைக்கும் சேமிப்பு, தேவைகளை நிறைவேற்றும் என்பது மட்டுமல்லாமல், எதிர்பாராமல் நேரிடும் தொல்லைகளையும், துயரங்களையும் சமாளிக்கவும் பெரிதும் பயன்படும்.

'பணம் பத்தும் செய்யும்', 'பணம் பாதாளம் வரை செல்லும்', 'பணந்தான் எப்போதும் பேசும்', 'பணம் இல்லாதவன் அம்பில்லாத வில்', 'பணந்தான் பணத்தைக் கொண்டுவரும்' என்பது போன்ற பழமொழிகள், ஒவ்வொருவருடைய இருப்பிலும் பணம் இருக்க வேண்டியதன் இன்றியமையாமையை உணர்த்துகின்றன.

'பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்,
பொருளல்ல தில்லை பொருள்'

- என்பது வள்ளுவர் வாக்கு.

ஏழை எளியவர்களாக வாழும் கீழ்த்தர, நடுத்தர வகுப்பு மக்களுக்குப் பெருந்துணையாக அமைவன, சிக்கன வாழ்வும், சேமிப்பு முறையுந்தான். ஒவ்வொருவருக்கும் வருமானம் தேங்கித் தேங்கி நின்று, நகர்ந்து நகர்ந்து, மெல்ல மெல்லத்தான் வரும்; ஆனால் செலவினமோ அவ்வப்போது நாலுகால் பாய்ச்சலில் பறந்து சென்று கொண்டே இருக்கும்.

ஒவ்வொரு குடும்பத்திலும், எதிர்பாராத பெருஞ் செலவினங்கள், பிள்ளைகளின் படிப்புக்குச் செலவிடுதல் - வாழ்க்கை வசதிகளுக்குச் செலவு செய்தல் - திருமணங்களை நடத்துதல் - கொடிய நோய் நொடிகளைத் தீர்த்தல் ஆபத்திலிருந்து மீளுதல் ஆகியவற்றைப் பொறுத்துத் திடீர் திடீரென்று ஏற்படவே செய்யும். இப்படிப்பட்ட எதிர்பாராத செலவினங்களை ஈடுகட்ட, ஒவ்வொருவரும், தமக்குக் கிடைக்கின்ற வருமானத்தில் ஒரு பகுதியைச், சேமிப்புக் கணக்கில் சேர்த்து வைக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்படுகிறது.

மக்கள் அனைவரும் கடினமாக உழைக்க வேண்டும்; பெரும்பொருள் ஈட்டவேண்டும்; சிக்கனமாகச் செலவு செய்ய வேண்டும்; சிறுகச் சிறுக சேமிக்க வேண்டும் என்ற உணர்வை, உலகோர்க்கு ஊட்டுவதற்காகவே, 'உலகச் சிக்கன நாள்' கொண்டாடப்படுகிறது.

இந்தியாவில், முதல் சேமிப்பு வங்கி, 1833-ஆம் ஆண்டு கல்கத்தாவில் தோற்றுவிக்கப்பட்டது. இரண்டாவது சேமிப்பு வங்கி, 1834-ஆம் ஆண்டு சென்னையில் தோன்றிற்று. சேமிப்பு வங்கி நிறுவுதல் என்பது, படிப்படியாக வளர்ந்து, இந்தியா முழுவதும் இன்று, 1,40,000-க்கு மேற்பட்ட அஞ்சலகங்களிலும், தமிழ்நாட்டில் 12,000-க்கு மேற்பட்ட அஞ்சலகங்களிலும் சேமிப்பு வங்கிகள் பணியாற்றி வருகின்றன. மக்கள் தாங்கள் சேமிக்கும் பணத்தை, எளிதாக வைப்பு நிதியாகப்



கல்வி

**மக்கள் உடலுக்கு உணவு எத்தகையதோ, அத்தகையது மக்கள் அறிவிற்குக் கல்வி.**

**—தமிழ்த்தென்றல் திரு.வி.க.**

போட்டுவைக்கவும், அது வட்டியோடு வளர்ந்து நிற்கவும், தேவைப்படும்போது அதனைப் பெற்றுக் கொள்ளவும், இந்தச் சேமிப்பு வங்கிகள் பெருந் துணை புரிகின்றன. மக்களின் வருவாய்த்தன்மை -சேமிப்பின் அளவு - தேவைப்படும் காலம் ஆகியவற்றைப் பொறுத்து மத்திய- மாநில அரசுகளால் கூட்டாக நடத்தப்படும் சிறுசேமிப்பு இயக்கம், பதினொருவகையான சேமிப்பு முறை களை நாட்டுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

எடுத்துக்காட்டாக, இந்திரா சேமிப்புப் பத்திரம், கிசான் சேமிப்புப் பத்திரம் ஆகியவற்றில் முதலீடு செய்யும் முதலீட்டாளருக்கு, 5 ஆண்டுகளில் சேமிப்பு வைப்புத்தொகை, இரண்டு மடங்கா கிறது. ஒருவர் கிசான் சேமிப்புப் பத்திரத்தில் ரூ.5,000 முதலீடு செய்தால், 5 ஆண்டுகள் கழித்து அவருக்கு ரூ.10,000 திருப்பித்தரப்படு கிறது. அதோடு அவருக்கு ஊக்கத்தொகையாக ரூ.50-லிருந்து ரூ.100 வரை முதலிலேயே தரப் படுகிறது. அவரை அறிமுகப்படுத்துகிற முகவருக்கு ரூ.100 ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. ரூ.500 பெறுமானமுள்ள பத்து பரிசுக் கூப் பன்கள் முதலீட்டாளருக்கு அளிக்கப்படுகின்றன. பரிசுச் சீட்டுக் குலுக்கலில் வெற்றி பெறுபவர் களுக்கு மாருதி கார் 1, ஸ்கூட்டர் 1, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி 2, குளிர்பதனப் பெட்டி 3, 4 கிராம் தங்க நாணயம் 5, தையல் இயந்திரம் 10, கைக்கடிகாரம் 30, சுவர்க்கடி காரம் 300 என்ற வகையில் 352 பரிசுகள் வழங்கப்படுகின்றன. சிறுசேமிப்பு நிதியை வெற்றி கரமாகத் திரட்டித்தருகின்ற மாவட்டங்களுக்கு, நலப்பணிகளுக்குப் பயன்படுத்த, ரூ.75 இலட்சம் வரையில், ஊக்கத்தொகையாக வழங்கப்படு கின்றது. மேலும் மாநில அரசுக்கு, மாநிலத்தில் ஆண்டுதோறும் சேர்க்கப்படும் சிறுசேமிப்பு நிதியிலிருந்து, 100-க்கு 75 சதவிகிதம் என்ற வகையில், குறைந்த வட்டியில், நீண்ட காலத் தவணையில், கடனுதவி வழங்கப்படுகிறது.

சிறுசேமிப்பு இயக்கமானது, முதலீட்டாளர் - முகவர் - மாவட்ட ஆட்சியகம் - மாநில அரசு ஆகிய அனைவர்க்கும் நல்ல முறையிலே பயன்படு வதாகும். இதனால் யாருக்கும் எந்தவிதமான இன்னலோ, இழப்போ கிடையாது.

சிக்கன வாழ்வுக்கு ஊக்கந்தந்து வரும் சிறு சேமிப்பு இயக்கம், ஆண்டுக்கு ஆண்டு மக்களின் அன்பையும், ஆதரவையும், நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்று வருகிறது. 1972-73-இல் சிறுசேமிப்பு மூலம் நிகர இருப்பு ரூ.20 கோடியே 27 இலட்சம் கிடைத்தது. அதிலிருந்து தமிழக மாநில அரசுக்கு ரூ.13 கோடியே 38 இலட்சம் கடனுதவி கிடைத்தது. 1991-92-ஆம் ஆண்டில் ரூ.584 கோடியே 69 இலட்சம் நிகர இருப்பு ஏற்பட்டது. அதிலிருந்து ரூ.349 கோடியே 75 இலட்சம் மாநில அரசுக்குக் கடனுதவியாகக் கிடைத்தது.

இத்தகைய கடனுதவி மாநில அரசின் கடுமை யான நிதிப்பற்றாக்குறையை, ஓரளவுக்கு ஈடுகட்டு வதற்குப் பெரிதும் பயன்பட்டுவருகிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தமிழக மாநில ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து, நாட்டின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும், மக்களின் நலத்திட்டங்களையும் நிறைவேற்றி வருவதில் முனைப்புள்ளத்தோடு பாடுபட்டு வருகிறார்கள். மக்களின் எதிர்பார்ப்போ மிக அதிகமாக இருந்து கொண்டுவருகிறது. அரசின் வரி வருமானமும், வரியில்லா வருமானமும் குறைந்த அளவில் இருந்துவரும் நிலையில், செல வினங்கள் பல்வேறு வகைகளில் பெருகிக் கொண்டே போகின்றன. அதனால் நிதிப்பற்றாக்குறை மத்திய அரசைப் பொறுத்தும், மாநில அரசுகளைப் பொறுத்தும் பெருகிக் கொண்டே இருக்கிறது. 1992-93-ஆம் ஆண்டு இறுதியில், தமிழக அரசைப் பொறுத்து, ரூ.800 கோடி அளவிற்கு, நிதிப்பற்றாக்குறை ஏற்படும் என்று எதிர்பார்க் கப்படுகிறது. வீட்டுக்கும் நாட்டுக்கும் பயன்படு கின்ற வகையில் அமைந்துள்ள சிறுசேமிப்பு வங்கிகளில், மக்கள் இந்த ஆண்டு ரூ.1000 கோடி அளவுக்கு, நிகர வைப்புத்தொகை ஏற்படு கின்ற முறையில் கடமையுணர்வோடு முதலீடு செய்வார்களேயானால், அதன்மூலம் தமிழக அரசுக்கு ரூ.750 கோடிக்குக் கடனுதவி கிடைக்கப் பெறும். அப்படிக் கிடைக்கும் வாய்ப்பு ஏற் பட்டால், 1993-94-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில், புது வரிபோட வேண்டிய அவசியம் ஏற்படாமல் போகும். அந்த நிலை பொதுமக்களுக்கு நலம் பயப்பதாக அமையும்.

'வருமுன் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்'

- என்பது வள்ளுவர் வாக்கு.

வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்கள், இழப் புகள், தொல்லைகள், துயரங்கள் ஆகியவற்றி லிருந்து காக்க வல்லது, சேமிப்புத் தொகைதான், சேமிப்பை வெற்றிகரமாக ஆக்கிக்காட்டுவது சிக்கன உணர்வு; அந்தச் சிக்கன உணர்வு, எல் லோர்க்கும் ஏற்பட, இந்த உலகச் சிக்கன நாள் பயன்படுகிறது.

மக்கள் சிறுகச் சிறுகச் சேர்த்துப், பெரு வாழ்வு வாழ வழி வகுப்பார்களாக!




# தொழில் வளர்ச்சியில் வியத்தகு முன்னேற்றம்

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழகத்தில் முதல்மைச்சராகப் பொறுப்பேற்றவுடன், தொழில் வளர்ச்சியடைந்த மாநிலங்களில் முதலிடத்தை, தமிழகம் அடைவதற்குத் தேவையான அனைத்து வழிமுறைகளையும் எடுக்கப் போவதாக உறுதி அளித்தார்.

தொழில் முன்னேற்றத்திற்குரிய வாய்ப்பு மற்றும் பிரச்சினைகள் குறித்தும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரிவாக விவாதித்தார். இதன் தொடர்பாக, மாநிலத்தில் தொழில்களை வளர்ப்பதற்குப் புதிய தொழில் கொள்கை உருவாகியது. தொழில்கள் வளர்ச்சிக்கு இது மிகவும் வழிகோலும் எனத் தொழில் அதிபர்கள் பாராட்டினர்.

**புதிய தொழில் கொள்கை**

கவர்ச்சிகரமான சலுகைகளையும், வரிச் சலுகைகளையும் வழங்குவது - தொழில்கள் வளர்வதற்கான அடிப்படை வசதிகளை முன்னுரிமை அடிப்படையில் உருவாக்குவது - தாய் நிறுவனங்களைப்போல மாநிலத்தில் பெரிய முதலீடுகளை உருவாக்குவது - புதிய முதலீடுகளை ஊக்குவிப்பது - தொழில் உறவுகள் பற்றிய கொள்கைகளை வகுத்து, தொழிலாளர் நலத்தை வளப்படுத்துவது - நலிந்த தொழிற்சாலைகளைச் சீரமைப்பது - பொது நிறுவனங்களைச் செம்மைப் படுத்திட நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது - சிறு தொழில்களை வளர்ப்பதற்குப் புதிய உத்வேகத்தை உருவாக்குவது - நீண்டகால வளர்ச்சிக்கு - புதிய கனிமக் கொள்கையை வகுத்துக் கொள்ளுவது என்கிற வகையில் புதிய தொழில் கொள்கையை முதல்வர் அவர்கள் வகுத்து இந்நாட்டிற்கு வழங்கினார்.

தொழில் வளர்ச்சியை உருவாக்குவதற்குக் கால அவகாசம் தேவைப்பட்டாலும் பதினைந்தே மாதங்களில் புதிய தொழில் கொள்கையின் மூலம் தமிழகம் தொழில் துறையில் குறிப்பிடத்தக்க ஏற்றத்தைப் பெற்றிருக்கிறது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் புதிய தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கும் விரிவாக்குவதற்கும் மிகக் கவர்ச்சிகரமான சலுகைகளை அறிவித்திருக்கிறார். நாட்டிலேயே அனைவரையும் கவரக்கூடிய சலுகைகளை வழங்கும் மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது என்றால் மிகையாகாது. தொழிலில் மிகவும் பிற்பட்ட 31 வட்டங்களில் 20 இலட்சம் ரூபாய் முதலீட்டில் உள்ள தொழில்களுக்கு 20 சதவிகிதம் மானியமாகவும், தொழிலில் மிகவும் பிற்பட்ட 82 வட்டங்களில் ரூபாய்

15 இலட்சம் மூலதனத்தில் உள்ள தொழில்களுக்கு 15 சதவிகிதம் மானியமும் வழங்குவது - மின் அணுத் தொழிற்சாலைகளுக்குக் கூடுதலான உதவித்தொகை வழங்குவது - தொழில் முதலீட்டு உதவித் தொகை வழங்குவதற்கான தொழிற்சாலைகளைத் தேர்ந்தெடுப்பது - 30 சதவிகிதப் பெண்கள் பணிபுரிகின்ற நிறுவனங்களுக்கு 5 சதவிகித உதவித் தொகை வழங்குவது - மின் சக்திப் பெருக்கு இயந்திரங்கள் தயாரிப்பு நிறுவனங்களுக்கு 15 சதவிகிதத் தொகை அளிப்பது - மிகப் பெரிய திட்டங்களுக்குச் சிறப்பு ஊக்கத் தொகை வழங்குவது என்கின்ற வகையில் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ரூபாய் 50 கோடி முதல் 100 கோடி வரை முதலீடு செய்யப்பட்ட திட்டங்களுக்குச் சலுகைத் தொகை ரூ.25 இலட்சமும், ரூ.100 கோடி முதல் ரூ.200 கோடி வரை முதலீடு செய்யப்பட்ட திட்டங்களுக்கு ரூ.50 இலட்சம் உதவித் தொகையும், ரூ.200 கோடிக்கு மேல் முதலீடு செய்யப்பட்ட திட்டங்களுக்கு உதவித்தெகை ரூபாய் ஒரு கோடி வழங்குவது என்றும், பின்தங்கிய மிகவும் பின்தங்கிய வட்டங்களில் விற்பனை வரி 9 ஆண்டுகளுக்குத் தள்ளுபடி செய்தும், பிற பகுதிகளில் உள்ள தொழில்களுக்கு 5 ஆண்டுகளுக்கு விற்பனை வரி தள்ளுபடி செய்வது என்றும், மிகப்பெரிய தொழிற்கூடங்களுக்கு விற்பனை வரித் தள்ளுபடி சிறப்புத் திட்டமாக அமல்படுத்துவது என்றும், ரூ.50 கோடி முதல் ரூ.100 கோடி வரை முதலீடு செய்யும் தொழிற்சாலைகளுக்கு, 5 ஆண்டு விற்பனை வரி விலக்கு அல்லது 10 ஆண்டுக்கு விற்பனை வரித் தள்ளுபடி செய்வதென்றும், ரூ.100 கோடி முதல் 300 கோடி வரை முதலீடு செய்யும் தொழிற்சாலைகளுக்கு 6 ஆண்டுகளுக்கு விற்பனை வரி விலக்கு அல்லது 12 ஆண்டுகளுக்கு வரி வசூல் தள்ளி வைப்பு செய்வதென்றும், ரூ.300 கோடிக்கு மேல் முதலீடு செய்யப்பட்டுள்ள தொழிற்சாலைக்கு 7 ஆண்டுகளுக்கு வரி விலக்கு அல்லது 14 ஆண்டிற்கு வரிவசூல் தள்ளிவைப்பது என்றும், தொழிற்கூடங்களுக்கு 3 ஆண்டுகளுக்கு மின்கட்டணம் விலக்கு அளிப்பதென்றும், அரசால் உருவாக்கப்பட்டுள்ள, தொழிற்பேட்டைகளில், தொழிற்கூடங்கள் கட்டுவதற்காக வாங்கப்படும் நிலங்களுக்குப் பத்திர வரியிலிருந்து முழு விலக்கு அளிப்பது, மின் இயக்கித் தயாரிப்புத் தொழிற்கூடங்களுக்கு மின் கட்டணச் சலுகை வழங்குவதென்றும் அரசு ஆணையிட்டு, தொழில் வளர்ப்போர்க்கு, ஊக்கத்தை உருவாக்கித்தொழில்வளர்ச்சியைத் தமிழகம் கண்டு கொண்டிருக்கிறது.

**தொழில் வளர அடிப்படை வசதி**

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொழிற்சாலைகளை உருவாக்குவதில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த திட்டத்தை வழங்கினார். சாலைகளையும், புதிய நீர் விநியோகமும் விரைந்து உருவாக்கப்பட்டதன் மூலம் தொழில் வளர்ச்சியில் நல்ல விளைவுகள்



நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டால் தான் செல்வத்தை உண்டாக்க முடியும் என்பதை நாம் எல்லோரும் நினைவில் கொள்ள வேண்டும்.

ஏற்படத் தொடங்கியுள்ளன. இதன் மூலம் ஏற்பட்டுள்ள விளைவு நிறைவுடையதாகவும் உள்ளதோடு, மின்வெட்டே இல்லாத நிலையும் ஏற்பட்டுள்ளது. தொழில் வளர்ச்சிக்கான அடிப்படைத் திட்டங்களை நிறைவேற்ற புதிய கழகத்தை உருவாக்குவதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுதியளித்ததையொட்டி, "தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம்" உருவாக்கப்பட்டு திருநெல்வேலி மாவட்டத்தில் கங்கைகொண்டான், பெரியார் மாவட்டத்தில் பெருந்துறை, தருமபுரி மாவட்டத்தில் பர்கூர், திண்டுக்கல்-அண்ணாமாவட்டத்தில் நிலக்கோட்டை ஆகிய நான்கு புதிய மையங்களில் மேம்பாட்டுப் பணிகள் வேகமாக நடைபெறுகின்றன. இந்த நான்கு வளர்ச்சி மையங்களிலும் ரூ.125 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. மேலும், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் புதிய வளர்ச்சி மையம் ஒன்றும் மிகப் பெரிய அளவில் உருவாக்கப்பட உள்ளது. திருப்பூரில் ரூ.200 கோடி மதிப்பீட்டில் பனியன் உற்பத்தித் தொழில்களை உருவாக்க சிறப்புத் திட்டம் ஒன்றினைத் தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம்" செயல்படுத்தத் திட்டம் வகுத்துள்ளது. இதற்கான நிதி 'அடிப்படை வசதிகள் குத்தகை நிதி நிறுவனத்திடமிருந்து' பெறப்படும்.

ஜெயங்கொண்டத்தில் மின் சக்தியை உருவாக்குவதற்காக, கூட்டுறவு முறையில், நிலக்கரிச் சுரங்கம் உருவாக்கும் பணி வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கான திட்ட அறிக்கை உலகில் முன்னணியில் நிற்கும் நிறுவனத்திடம் கேட்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அடிப்படைக் கொள்கைகளை இந்நிறுவனம் வழங்கும். அரசு இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுத்து மாநிலத்தில் தொழில் வளர்ச்சியில் மேம்பாட்டை உருவாக்கும்.

இந்திய சிங்கப்பூர் வர்த்தக மையத்தை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதற்கு, அலுவலர்கள் குழு ஒன்று சிங்கப்பூர் சென்று புதிய முதலீடுகள் தமிழகத்தில் செய்வது குறித்து விரிவான கருத்துப் பரிமாற்றங்களை உருவாக்க இருக்கிறது. இத்தகு வியாபார மையத்திற்கு, சென்னைக்கு அருகிலுள்ள சோலிங்கநல்லூரில் 700 எக்டேர் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்தை மேம்பாடு செய்-

வதற்கான தொடக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**மிகப் பெரிய முதலீடுகள்**

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகப்பெரிய முதலீட்டில் தாய்த் தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு மிக முக்கியத்துவம் தந்துள்ளார். தமிழ்நாட்டில் மத்திய அரசின் முதலீடுகள், மிகக் குறைந்துள்ளது என்பதை அனைவரும் மிக நன்றாக அறிவார்கள். மத்திய அரசின் மூலதனம் 1969-இல் 10 சதவிகிதமாக இருந்தது 1989-இல் 5.2 சதவிகிதமாகக் குறைந்துவிட்டது. தமிழ்நாடு மத்திய அரசின் முதலீட்டில் ஒரு பெரிய தொழிற்சாலையைக் கூட நீண்டகாலமாகக் காணமுடியவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களின் இடைவிடாத முயற்சியால் ரூ.2000 கோடி முதலீட்டில் ஆரோமேட்டிக் தொழிற்சாலைக்கு ஒப்புதல் பெறப்பட்டது. இது கடந்த 20 ஆண்டுகளில் மிகப் பெரிய சாதனையாகும். இத்தொழிற்சாலை மூலமாகப் பல்வேறு சிறு தொழிற்சாலைகள் உருவாகவும், 70,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவும் வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது.

தமிழ்நாடு மோட்டார் பாகங்கள் உற்பத்திக் கேந்திரமாகத் திகழ்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூ.675 கோடி முதலீட்டில், ஓசூரில் அசோக் லேலண்ட் அமைக்க இருக்கும் புதிய தொழிற்சாலைக்கு அனைத்து வசதிகளையும் உருவாக்கித் தருவதற்கு நடவடிக்கை மேற்கொண்டதன் மூலம் மோட்டார் உற்பத்தித் தொழிலுக்குப் புதிய உத்வேகத்தை உருவாக்கித் தந்திருக்கிறார். சேலத்தில், கேதான் சூப்பர் மேக் நிறுவனத்தால் ரூ.250 கோடி செலவில் மேக்னஸைட் தொழிற்சாலை, ரூ.500 கோடி செலவில், தமிழ்நாடு செய்தித்தாள் உற்பத்தித் தொழிற்சாலை விரிவாக்கத் திட்டம் ஆகியவற்றை உருவாக்கித் தந்ததன் மூலம் தமிழகத்தில் 10 ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றப்படாமல் இருந்த திட்டங்கள் ஓராண்டில் நிறைவேற்றப்பட்டிருப்பது மிகப் பெருமைக்குரியதாகும்.

**தொழில்கள் தொடங்க புதிய முதலீடுகள்**


தொழிற்சாலைகள் பொருட்களை உற்பத்தி செய்ய தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. ரூ.100 கோடி முதலீட்டில் தொடங்கப்பட்டுள்ள 3 திட்டங்கள் உற்பத்தியைத் தொடங்கி விட்டன. ரூ. 40 கோடி முதலீட்டில் தொடங்கப்பட்டுள்ள ஆர்.ஆர்.மிடி.பாம் லிட். கம்பெனி நடப்பாண்டிற்குள் உற்பத்தியைத் தொடங்க உள்ளது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் சேலம் இரும்பு ஸ்டீல் கம்பெனி நிறுவனம், அலுமினிய உருட்டுத் தகடு தயாரிப்புத் தொழிற்சாலை, தஞ்சை மாவட்டத்தில் வீடியோ தொழிற்சாலை ஆகிய மூன்று தொழிற்சாலைகள் ரூ.350 கோடி மூலதனத்தில் உருவாக்கப்பட இருக்கிறது. மேலும் 9 பெரிய திட்டங்கள் சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்திலும், எல்காட் நிறுவனத்திலும் பரிசீலனையில் உள்ளது. புதிய தொழில்களுக்கு வழிகாட்டுவதற்கு வழிகாட்டி நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் புதிய முதலீடுகளைத் தமிழகத்தில் உருவாக்க வழிகாணப்பட்டு வருகிறது. புதிய தொழில் நுட்பங்களையும் அயல் நாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகளையும் இந்நிறுவனம் கண்டெடுக்கும். வெளிநாட்டு மூலதனங்களைப் பெறுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சிறு தொழில் வளர்ச்சிக் கழகமும், தொழில் முதலீட்டுக் கழகமும், 1991-92-ஆம் ஆண்டில் இலக்கினைஎய்தியிருக்கிறது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ரூ.161 கோடியும், சிறு தொழில் வாணிபக் கழகம் ரூ.41 கோடியும் எய்துள்ளது. 1992-93- ஆம் ஆண்டில் தொழில் முன்னேற்றக் கழகம் ரூ.180 கோடியும், சிறு தொழில் முதலீட்டுக் கழகம் ரூ.50 கோடியும் வழங்கத் திட்டமிட்டுள்ளது. திருநெல்வேலி, தஞ்சை, நாகை, தென்னார்க்காடு, செங்கை ஆகிய மாவட்டங்களில் புதிதாகச் சர்க்கரை ஆலை தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

5 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளை நவீனப்படுத்தவும், விரிவாக்கம் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தொழில் உறவுகள், தொழிலாளர் நலன், நலிவுற்ற தொழிற்கூடங்கள் மேம்பாடு ஆகியவை பேணப்பட்டு வருகிறது. நீண்டகாலமாக மூடிக்கிடந்த பின்னி ஆலை தொடங்கப்பட்டதன் மூலம் 7,000 தொழிலாளர்கள் மீண்டும் வேலைவாய்ப்புப் பெற்றார்கள். கடந்த காலத்திய கடுமையான பிரச்சினைக்கு முடிவு காண்கின்ற வகையில் ரூ.120 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. முதல்வரின் தனி முயற்சி காரணமாக, 3,000 வேலையாட்கள் பணிபுரியும் ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி மீண்டும் திறக்கப்பட்டது. இதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பணிபுரியும் தொழிலாளர்கள் நன்றியினைத் தெரிவிக்கிறார்கள். பல்லாண்டாய் மூடிக்கிடந்த இந்தத் தொழிற்சாலை திறக்கப்பட்டு இப்போது உற்பத்தியைத் தொடங்கியிருக்கிறது.

மனிதனுடைய கை, மூளை ஆகியவற்றின் விரிந்த வளர்ச்சியே கருவிகள். கருவி மூலமாக உங்கள் கைத்திறனையும், மூளைத் திறனையும் பெருக்காவிட்டால் உங்களுடைய ஆற்றலும் வளராமல் சுருங்கிக் கெடும்.



# புதிய திட்டங்களும் நிதியும்!

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவின் பேரில், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள் தலைமையில், வேளாண்மை உற்பத்தி ஆணையர், சிறப்புச் செயலர், தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் உற்பத்தியாளர் இணையத்தின் தலைவர் மற்றும் அதன் நிர்வாக இயக்குநர் ஆகியோர் கொண்ட குழு, குஜராத் மாநிலத்திலுள்ள தேசிய பால் பெருக்கு வாரியத்திற்குச் சென்று அதன் தலைவர் மற்றும் நிர்வாகக் குழுவினரைச் சந்தித்து தமிழகத்தில் வேளாண்மைத் துறைக்கும் அதனைச் சார்ந்துள்ள துறைகளுக்கும், புதிய திட்டங்களும், அதற்குரிய நிதிகளையும் பெற்று வருவதற்குச் சென்றனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் நல்லாசியுடன் சென்ற இக்குழு, தேசிய பால் பெருக்கு வாரியத்தின் நிர்வாகத்தினரைச் சந்தித்து, இரு தரப்பினரும் கூட்டுக்கூட்டம் நடத்தியதன் பயனாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்ட திட்டங்களுக்கும் அதற்குரிய நிதி ஒதுக்கீட்டிற்கும், தேசிய பால் பெருக்கு வாரியம் மாண்புமிகு முதல்வரின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு ரூ.103 கோடியை வழங்குவதற்கு ஒப்புதல் அளித்து, முன்பணமாக அளித்த ரூபாய் ஒரு கோடியே 53 இலட்சத்திற்குரிய காசோலையை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப.கிருஷ்ணன் அவர்கள் 25.9.1992 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

**சிறுதொழில்கள்**

சிறுதொழில் அதிபர்களுடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நீண்ட கலந்துரையாடல் நிகழ்த்தியதன் மூலம் புதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

பொதுத்துறை நிறுவனங்கள், சிறுதொழில் நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய தொகையை முப்பது நாட்களுக்குள்ளாக செலுத்தவேண்டும் என்றும், அரசுச் செயலர் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள குழுவிற்குப் புதிய அதிகாரங்கள் வழங்கப்பட்டு நலிவுற்ற சிறிய தொழில்கள் மீண்டும் உயிர்பெறவும், ரூ.70 கோடி திட்டத்தில் ஜப்பானைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றின் மூலம் புதிய தொழிற்பேட்டைகள் தொடங்கவும், புதிய தொழில் நுட்பங்களை உருவாக்குவதற்கு ஒரு முதலீட்டு நிறுவனம் உருவாக்கப்படவும், திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் படிப்படியாகக் குறித்த காலத்தில் உதவித் தொகையை வழங்கவும் திட்டங்கள் வகுக்கப்பட்டு விரைவாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1991-92-இல் 15,400 தொழிற்கூடங்கள் பதிவு செய்யத்திட்டமிடப்பட்டு, 17,422 புதிய தொழிற்கூடங்கள் பதிவு செய்யப்பட்டன. கடந்த 6 திங்களில் 11,900 புதிய தொழிற்கூடங்கள் பதிவு செய்யப்பட்டன. நடப்பு ஆண்டில் 20,100 தொழிற்கூடங்கள் பதிவு செய்யப்படும். தொழில் நுட்ப மேம்பாட்டுப் பணிகள் ஓராண்டில் மிக விரைவுபடுத்தப்பட்டு வருகிறது.

**கனிம வள வளர்ச்சிக் கொள்கை**

சுற்றுப்புறச் சூழலைக் கருத்தில் கொண்டு கனிமச் செல்வத்தை முறையாக வளர்ப்பதற்காக கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறது. கிரானைட், லிக்னைட், சுண்ணாம்புக்கல் ஆகிய கனிமங்கள் இக்குறிக்கோளைக் கருத்தில் கொண்டு வெட்டி எடுக்கப்படும்.

கருங்கற்கள் தொடர்பாக, புதிய கொள்கை வகுக்கப்பட்டு கடந்த 3 திங்களில் தமிழ்நாடு கனிம நிறுவனம் 19,000 கன அடி கற்களை ஏற்றுமதி செய்வதற்கு அங்கீரித்துள்ளது. இப்புதிய கொள்கை செயல் ஆக்கப்படுவதற்கு முன்னர் மாதம் ஒன்றுக்கு 5000 கன அடி கற்கள் மட்டுமே வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. வரையறுக்கப்பட்ட முன்னேற்றத்தினை, புதிய கொள்கையின் மூலம் கிரானைட் தொழிலுக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது.

1991-92-இல் தமிழ்நாடு கனிம நிறுவனம் குறிப்பிடத்தக்க லாபத்தை ஈட்டியிருக்கிறது. சிவகங்கையில் கிரா:பைட்தொழிற்சாலை உருவாக்குவதற்காக நடவடிக்கை எடுத்துள்ளது. பல்லாண்டாய் இத்திட்டம் நிறைவேற்றப்படாமலே இருந்ததென்பது குறிப்பிடத்தக்கதாகும். சிவகங்கையில் கிரா:பைட் தொழிலில் புதிய தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட்டு மிகவும் உயர்ந்த தூய்மையான கிரா:பைட்தயாரிக்கப்பட இருக்கிறது. தொழிலில் பின்தங்கிய அந்தப் பகுதியில் பல தொழிற்கூடங்கள் உருவாகுவதற்கு வழிவகை காணப்பட்டிருக்கிறது.

கடந்த 15 திங்களாய் மிகவும் பொருளாதாரப் பிரச்சினையில் நாடு இருந்த போதிலும், தொழில் வளர்ச்சிக்குத் தமிழகத்தில் மிகவும் தீவிரமான அக்கறை காட்டப்பட்டு வருகிறது. புதிய முதலீட்டிற்கு தமிழகத்தில் புதிய கவர்ச்சி எழுந்துள்ளது. மிகுந்த செயல்திறன் மிக்க மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையில் புதிய தொழிற் கொள்கை வகுத்து தொழில் வளர்ச்சியில் மிகச் சிறந்த மேன்மையை நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது.

**(16.10.92 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொழில்துறை குறித்து ஆய்வு செய்த பின் வெளியிட்ட அறிக்கை).**




# நல்லுறவை வளர்க்கும் சார்க் நாடுகள் கலை விழா

மறைந்த முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் 1989-இல் இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற சார்க் (SAARC) மாநாட்டின்போது, தெற்காசிய நாடுகளில் கலை விழாக்களை நடத்த வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டார். இந்தக்கருத்தின் அடிப்படையில் இந்தியா பொறுப்பேற்று நடத்தும் 'சார்க்' நாடுகளின் முதலாம் தெற்காசியக் கலைவிழா, மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு., பி.வி. நரசிம்மராவ் அவர்களால் அக்டோபர் திங்கள் 9-ஆம் நாள் புதுடெல்லியிலுள்ள தீன் மூர்த்தி பவனில் தொடங்கி வைக்கப்பட்டது. தொடக்க விழா நிகழ்ச்சிகளில் இந்தியா, வங்காளம், பூடான், நேபாளம், மாலத்தீவு, பாகிஸ்தான், இலங்கை ஆகிய சார்க் நாடுகள் ஏழும் பங்கு பெற்றன.

சார்க் நாடுகள் உறவோடு இணைந்து பரிவோடு உலக அமைதியை நிலைப்படுத்தவும், நல்லுறவை வலுப்படுத்தவும் உருவாக்கும் செயற்பாடுகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் வழங்க வேண்டும் என்பதில் இந்திய அரசு காட்டிவரும் ஈடுபாட்டைப் பறை சாற்றுவதாக இந்தக் கலைவிழா பதினாறு நாட்கள் பயனுற நடைபெற்றது.

இந்தக்கலைவிழா டெல்லி, சண்டிகார் ஆகிய இடங்களிலும், ஆந்திரப்பிரதேசம், அஸ்ஸாம், குஜராத், ஹரியானா, இமாசலப்பிரதேசம், கர்நாடகம், கேரளா, மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரம், மணிப்பூர், ஒரிசா, இராஜஸ்தான், தமிழ்நாடு, உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் முப்பது நகரங்களிலும் நடைபெற்றது.

இதன் நிறைவு விழா அக்டோபர் மாதம் 24-ஆம் தேதி திருவனந்தபுரத்தில் நடந்தது.

இந்த கலைவிழாவின் தேசிய அமைப்புக் குழுவில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உறுப்பினராக இருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கலைவிழா தமிழ்நாட்டில் அக்டோபர் மாதம் 18,19,20 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெற்றது. தமிழ்நாடு அரசும் இந்திய கலைப் பண்பாட்டு மையமும் இணைந்து நடத்திய இந்தச் சிறப்புமிகு கலைவிழாவினை மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் அக்டோபர் திங்கள் 18-ஆம் நாள் சென்னையில் மியூசிக் அகாடெமியில் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார்.

வங்கதேசம் (Bangladesh), பூடான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் நாட்டுப்புறக் கலைக் குழுக்கள் இந்த 3 நாள் கலை நிகழ்ச்சியில் இடம் பெற்றன.

தொடக்க நாளான 18-ஆம் தேதி 14 பேர் கொண்ட வங்கதேசக் கலைக்குழுவின் கலை நிகழ்ச்சியும், 19-ஆம் தேதி 25 உறுப்பினர்களைக் கொண்ட பூடான் நாட்டுக் கலைக் குழுவின் கலை நிகழ்ச்சியும், கடைசி நாளான 20-ஆம் தேதி 19 உறுப்பினர்களைக் கொண்ட பாகிஸ்தான் நாட்டினரின் கலைநிகழ்ச்சியும் நடைபெற்றன.

தொடக்க விழா மாண்புமிகு கல்வி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. வங்கதேச கலைக் குழுவினரை, சென்னை சரசாலய பரத நாட்டியக் குழுவினர் புஷ்பாஞ்சலி நடனமாடி வரவேற்றது அற்புதமாக இருந்தது.

அடுத்து, வங்க தேசத்தின் புகழ்பெற்ற நாட்டுப்புற நடனத்தை அந்நாட்டு வழக்கப்படி வங்கதேச கலைக்குழுவினர் ஆண்களும் பெண்களுமாகச் சேர்ந்து மிக அருமையாக ஆடினார்கள்.

'Expectation' என்ற நடனம் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து வங்கக் கவி இரவீந்திரநாத் தாகூர் அவர்களின் கவிதைத் தொகுப்பிலிருந்து இனிமையான பாடலொன்றுக்கு நடனமாடி அனைவரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தினார்கள்.

அடுத்து, பாம்பாட்டி நடனம். இதில், பாம்பாட்டி மகுடி ஊதிக் கொண்டே பாம்பைத் தேடும்





காட்சி அற்புதமாகவும் அழகாகவும் இருந்தது.

இதைத் தொடர்ந்து வங்கதேசக் கலைஞர்களின் 'நாங்கோர் செரியா' எனப்படும் பழங்குடி நடனம் (Folk Dance) நடைபெற்றது. மீனவர்கள் படகில் சென்று கடல் அலைகளின் சப்தத்திற்கு ஏற்ப ஆண்களுடன் பெண்களும் சேர்ந்து மிக எளிமையான உடைகளோடு அற்புதமாக ஆடி அவையோரின் பாராட்டைப் பெற்றனர்.

அடுத்து நடைபெற்ற வங்க தேசத்தில் பிரசித்திப் பெற்ற விழாக்கால நடனமான 'சட்கா' நடனம் (Chatka Dance), Kula Dance, கல்யாண நடனம் (Wedding Dance) போன்ற நாட்டுப்புற நடனங்கள் வங்க தேசத்தின் கிராம மக்களின் வாழ்க்கைத்தரத்தையும், சுற்றுச் சூழலையும் எடுத்துரைப்பதாக இருந்தது கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

கலை நிகழ்ச்சியின் இறுதியாக வங்காள தேசத்தின் விடுதலை வேள்விக்கு வித்திட்ட வங்கக் கவி காஜி நஸ்ரூல் இஸ்லாம் அவர்கள் இயற்றிய கவிதைக்கான நாட்டியம், கண்களுக்கு விருந்தாக இருந்தது. வங்க தேசத்தின் விடுதலைக்காகப் போராடும் ஆண்களும், பெண்களும் எவ்வாறு தம் கடமைகளைச் செய்தனர் என்பதைச் சித்திரித்துக் காட்டினார்கள்.

சென்னை கலாச்சேத்திரா மாணவிகளின் பரத நாட்டிய நிகழ்ச்சியோடு முதல்நாள் 'சார்க்' கலைவிழா இனிதே நடந்து முடிந்தது.

சார்க் கலை விழாவின் இரண்டாம் நாளான 19.10.'92 அன்று, 25 கலைஞர்களைக் கொண்ட பூடான் நாட்டின் கலைவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் கூட்டுறவு , அன்பு , ஒற்றுமை ஆகியவற்றைப் பறைசாற்றும் 'போதிமரக் கொம்பு' என்ற வரவேற்புப் பாடலும், தாண்டவக் கூத்து, இடுகாட்டு நடனம், Mask Dance போன்ற நாட்டுப்புற நடனங்களும், ஒப்பனை பாட்டிசை நிகழ்ச்சிகளும் கண்ணைக் கவருபவைகளாக இருந்து அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றது குறிப்பிடத்தக்கது.

மூன்று நாள் கலைவிழாவின் இறுதி நாளான 20-ஆம் தேதியன்று, 19 கலைஞர்களைக் கொண்ட பாகிஸ்தான் நாட்டின் கலைவிழா சிறப்பாகவும் எளிய முறையிலும் நடந்தது. பாகிஸ்தானின் கவினார்ந்த நாட்டுப்புற நடனமாகிய கலாஷ் சாரல் குழுவினரின் நடனம், பாங்கரா, பவுலோ, ஜட்கா போன்ற நடனங்களும் கண்ணுக்கு விருந்தாகவும் நினைவில் நீங்கா இடம் பெறுபவையாகவும் இருந்தது பாராட்டுக்குரியதாகும்.

பலதரப்பட்ட மக்களையும், வாழ்க்கைத் தரத்தையும், பண்பாட்டையும் கொண்ட நாடுகளை ஒன்றோடு ஒன்று இணைக்கப் பயன்படுவது கலை ஒன்றே ஆகும். பக்கத்து நாடுகள் ஒத்துழைப்புடனும், சமாதானத்துடன் வாழவும், ஒரு நாட்டு மக்கள் இன்னொரு நாட்டு மக்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளவும் இத்தகைய கலைவிழாக்கள் பெரிதும் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை!

. நிகழ்ச்சித் தொகுப்பு:ஜே.சி.



# ஏழை எளியோருக்கு முதல்வர் உதவி



பெரியார் மாவட்டத்தைச் சார்ந்த 522 மனுதாரர்களுக்கு 32 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

பெரியார் மாவட்டத்திலிருந்து மனு கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 522 நபர்களைத் தேர்ந்தெடுத்து, அரசுச் செலவில் வாகனங்களில் சென்னைக்கு அழைத்து வந்து அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 12.10.92 அன்று பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாவட்டத்தின் கணிப்பொறி (Computer) தொழில் தொடங்க 3 நபர்களுக்கு ரூ.72,150-ம், இதரத் தொழில் தொடங்க 6 பேர்களுக்குக் கடன் மற்றும் மானியத் தொகையாக ரூ.1,25,000-மும், தாட்கோ மூலம் 3 நபர்களுக்கு ஆட்டோ ரிக்ஷா வாங்க ரூ.1,80,000-மும், கூட்டுறவுத்துறை மூலம் டிராக்டர் வாங்க ஒருவருக்கு ரூ.2,00,000 கடனுதவியும், கறவை மாடுகள் வாங்க 5 நபர்களுக்கு ரூ.18,500-ம், 6 நபர்களுக்குப் பண்ணை சாராக் கடனாக ரூ.1,20,000-மும், வேளாண்மைத்துறை மூலமாக 3 பேர்களுக்குத் தெளிப்பு நீர்ப்பாசனக் கருவி, கைத்தெளிப்பான்கள் வாங்க ரூ.35,300 கடனுதவியும், கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் தேனீ வளர்ப்புப் பெட்டிகள் 9 பேர்களுக்கும் வழங்கப்பட்டது.

கலப்புத் திருமண நிதியுதவி 3 பேர்களுக்கும், விதவை மகள் திருமண நிதியுதவி 5 பேர்களுக்கும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவி 5 பெண்களுக்கும், 4 பேர்களுக்குக் காதொலிக் கருவிகளும், உடல் ஊனமுற்றோர் சுயவேலைவாய்ப்பு மானியம் இருவருக்கும், முடி திருத்தகம் அமைக்க 5 பேர்களுக்குக் கடனுதவியும், சலவைப்பெட்டிகள் 5 பேர்களுக்கும், சவரப் பெட்டி 5 பேர்களுக்கும், இலவச வீட்டுமனைப் பட்டா 72 பேர்களுக்கும், விதவை உதவித்தொகை 10 நபர்களுக்கும், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் இருவருக்கு உதவித்தொகையும், நலிந்தோர் குடும்ப நல உதவி 10 பேர்களுக்கும், விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் இரண்டு நபர்களுக்கு ரூ.20,000 உதவித் தொகையும், தீவிர சுகாதாரத் திட்டத்தின்கீழ் வீடுகளில் கழிப்பிடம் கட்டியுள்ள 5 நபர்களுக்கு அரசு மானியமும், இருதய அறுவைச் சிகிச்சைக்காக 6 நபர்களுக்கு ரூ.23,000 உதவித்தொகையும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 36 பேர்களுக்குக் கறவை எருமைகள் வாங்க ரூ.2,11,800 கடனுதவியும், வெள்ளாடு வளர்க்க 20 பேர்களுக்கு ரூ.40,000 கடனுதவியும், செம்மறியாடுகள் வளர்க்க 18 பேர்களுக்கு ரூ.1,48,600 கடனுதவியும், செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழிலுக்கென 30 பேர்களுக்கு ரூ.5,32,000 கடனுதவியும் வழங்கப்பட்டன.

மொத்தம் 522 நபர்களுக்கு ரூ.32,00,000 (ரூபாய் முப்பத்திரண்டு இலட்சம் மட்டும்) பெறுமானமுள்ள நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வழங்கினார். இதில் 407 பேர் பெண்களாவர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், பெண்ணாடத்தைச் சேர்ந்த நவநீதம்-மேகராஜ் தம்பதியினரின் குழந்தைக்கு ராமச்சந்திரன் என்றும், மும்தாஜ்பேகம்-ராமச்சந்திரன் தம்பதியினரின் குழந்தைக்கு ராஜலட்சுமி என்றும் பெயர் சூட்டினார்.

### காந்தி கிராமப் பல்கலைக்கழக வேந்தர் தேர்வு

காந்தி கிராமப் பல்கலைக்கழக வேந்தராக, குடியரசுத் துணைத் தலைவர் திரு. கே.ஆர். நாராயணன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஏற்கெனவே, இந்தப் பதவியை குடியரசுத் துணைத் தலைவராக இருந்த காலத்தில் திரு. சங்கர் தயாள் சர்மா அவர்களும், திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களும் வகித்துள்ளார்கள்.

### தமிழ்நாட்டில் விவசாயத்துறையை மேம்படுத்த தேசிய பால்வள நிறுவனம் ரூ.103 கோடி நிதியுதவி

தமிழ்நாட்டில் விவசாயிகளும், பொதுமக்களும் பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, தேசிய பால்வள மேம்பாட்டு நிறுவனம் தமிழ்நாட்டுக்கு ரூ.103 கோடி வழங்க இசைந்திருக்கிறது.

**தமிழக விவசாயத்துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் ஓர் உயர் மட்டக்குழு அண்மையில் குஜராத் மாநிலம் ஆனந்த் சென்றிருந்தபோது இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியது.**

**இந்த ஒப்பந்தத்தின்படி முதல் தவணையாக 1.53 கோடி ரூபாய் தேசிய பால்வள நிறுவனத்தால் தமிழக அரசுக்கு வழங்கப்பட்டது. தேசிய பால்வள மேம்பாட்டு நிறுவனத்திடமிருந்து இவ்வளவு பெரிய தொகை பெறப்படுவது இதுவே முதல் முறையாகும்.**

**எண்ணெய் வித்துக்கள்:** **இந்தத் திட்டத்தின் முதல் கட்டமாக தீவிர எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டம் ரூ.40 கோடி செலவில் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டம் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்., வடஆர்க்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை-சம்புவராயர், தென்னார்காடு ஆகிய மாவட்டங்கள் ஒரு பகுதியாகவும் திருச்சி, தஞ்சாவூர், சேலம், தருமபுரி, கோயம்புத்தூர், பெரியார் ஆகிய மாவட்டங்கள் இன்னொரு பகுதியாக பிரிக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.**

**இந்த 2 பகுதிகளிலும் தனித்தனியாக தலைமை இடங்கள் அமைத்து ஆயிரம் சங்கங்கள் ஏற்படுத்தப்படும். இதன்மூலம் விவசாயிகளுக்கு விதைகள் வழங்கப்படும்.**

**விவசாயிகள் உற்பத்தி செய்யும் எண்ணெய் வித்துக்களைக் கூட்டுறவு சங்கங்களே வாங்கி, எண்ணெய் பிழிந்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்யும். இந்தத் திட்டத்தின் மூலம் சுமார் 3 இலட்சம் விவசாயிகள் பயன்பெறுவார்கள்.**

## செய்திகள்... செய்திகள்... செய்திகள்...

**காய்கறி, பழங்கள்:**

**அடுத்து, ரூ.45 கோடி செலவில் காய்கறி மற்றும் பழங்கள் வாங்கி விநியோகிப்பதற்கான திட்டம் செயல்படுத்தப்படும். இதன்படி விவசாயிகளிடமிருந்து காய்கறிகள், பூக்கள், பழங்கள் போன்றவற்றை அரசே நேரடியாக வாங்கி சுத்தப்படுத்தி நியாயமான விலையில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யும். இதற்கென மாதவரத்தில் ஒரு நவீன சுத்திகரிப்புப் பண்ணை அமைக்கப்படும். இந்தத் திட்டம் இந்த நிதியாண்டிற்குள் (1992-93) செயல்படத் தொடங்கும்.**

### விவசாயிகளுக்கு மானியம் வழங்கும் திட்டம் 1992 இறுதிவரை நீட்டிப்பு

**விவசாயிகளுக்கு மானியம் வழங்கும் திட்டம் இந்த ஆண்டு (1992) இறுதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.**

**விவசாயிகள் உரம், விதை, பூச்சிமருந்து போன்றவை வாங்குவதற்காக அரசு வழங்கிவந்த மானியம் 1992 செப்டம்பர் மாதம் 30-ஆம் தேதியுடன் முடிவடைவதாக இருந்தது. இதை மேலும் சிறிதுகாலம் நீட்டிக்குமாறு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டதற்கிணங்க இந்த மானியம் இந்த ஆண்டு இறுதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் 31-12-1992 வரை மானியம் பெற்றுக் கொள்ளலாம். இந்தத் தகவலை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப.கிருஷ்ணன் அவர்கள் சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.**

## எய்ட்ஸ் நோய்: ஓர் எச்சரிக்கை!

இந்த நூற்றாண்டுக்குள் அதாவது 2000-வது ஆண்டுக்குள், 80 இலட்சம் பெண்களும், ஒரு கோடி குழந்தைகளும் எயிட்ஸ் நோய்க் கிருமியால் பாதிக்கப்படுவார்கள் என்று கூறுகிறது உலகச் சுகாதார நிறுவனம்.

எயிட்ஸ் நோய்க் கிருமிகளால், தற்போது உலகம் முழுவதும் பாதிக் கப்பட்டவர்கள் எத்தனைப் பேர் தெரியுமா? ஒரு கோடிப் பேர்!

இவர்களில் 30 இலட்சம் பேர் பெண்கள் 10 இலட்சம் பேர் குழந்தைகள் என்று இந்தக் கணிப்பு கூறுகிறது.

எயிட்ஸ் நோய்க் கிருமிகள், பெண்களிடமிருந்து ஆண்டுகளுக்குத் தொற்றுவது குறைவு என்றும், ஆண் களிடமிருந்து பெண்களுக்கு இந்தக் கிருமிகள் அதிகமாகத் தொற்றுகிறது என்றும் ஆய்வு மூலமாகத் தெரிய வருகிறது.

பசும்பொன்

இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி:

# முத்துராமலிங்கத்தேவர்

'வள்ளலார்' என்ற சொல் எப்படி வடலூர் இராமலிங்க அடிகளாரை மட்டுமே குறிக்கிறதோ, 'பெரியார்' என்ற சொல் எப்படி ஈரோட்டு இராமசாமிப் பெரியாரை மட்டுமே குறிக்கிறதோ, 'அண்ணா' என்ற சொல் எப்படி காஞ்சி தந்த அறிஞர் அண்ணாவை மட்டுமே குறிக்கிறதோ - அதேபோலத் 'தேவர்' என்ற சொல் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களை மட்டுமே குறிப்பிடுவதாகிவிட்டது.

தென்பாண்டி மண்டலத்தில் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களின் தன்னேரில்லாத் தலைமகனாகவும், நாட்டு விடுதலைப் போராட்டத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவராகவும் இருந்தவர்தான் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்; *30.10.1908*-இல் பிறந்த அவர் மறைந்த நாள் *30.10.1963* ஆகும்.

நலிந்து கிடக்கும் மக்களின் வாழ்விலே நம்பிக்கை ஒளி ஊட்டவும், நாட்டு விடுதலைக்காகவும் தம் வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட அந்த வைர நெஞ்சனின் பெற்றோர்- உக்கிர பாண்டியத்தேவர், இந்திராணி அம்மையார் ஆகியோராவர். இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பசும்பொன் என்ற சிற்றூர் இவர் பிறந்த ஊர்.

இவர் பிறந்த இரண்டு மூன்று திங்கள்களிலேயே தாயார் இந்திராணி அம்மையார் இறந்து போனார். அதன் பிறகு இவரைப் பாராட்டிச் சீராட்டி வளர்த்தவர் பாட்டியார் இராணி அம்மையார் ஆவார்.

இவருக்குப் பாலூட்டி வளர்த்த பெருமை ஒரு முஸ்லீம் தாய்க்கும் உண்டு.

சிறுவன் முத்துராமலிங்கத்தின் கல்விக்கண் திறந்தவர்கள் முதலில் கிறித்துவப் பாதிரிமார்களேயாவர்; அதன் பிந்திய காலப் பள்ளிப் படிப்பு - கமுதியிலும், பசுமலை உயர்நிலைப் பள்ளியிலும், மதுரை ஐக்கியக் கிறித்தவ உயர்நிலைப் பள்ளியிலும் மாறிமாறிச் சில காலம் தொடர்ந்தது. பத்தாம் வகுப்புப் படிப்போ இராமநாதபுரம் அரசர் உயர்நிலைப்பள்ளியில்.

இந்தக் காலகட்டத்தில் - ஊரெங்கும் பரவிய பிளேக் நோய் காரணமாக, படித்தது போதுமென்று ஊருக்கு அழைத்துச் செல்லப்பட்டார் இளைஞர் முத்துராமலிங்கம். தவமிருந்து பெற்றெடுத்த ஒரே மகன் என்பது தான் இதற்கு முக்கியக் காரணமாகும். அதற்குமேல் இவர் படித்ததெல்லாம் அனுபவப் படிப்புத் தானே தவிர, பள்ளிப் படிப்பல்ல!

சோதிடம், வான சாஸ்திரம், மருத்துவம் ஆகியவைகூட இவருக்குக் கைவந்த கலை ஆயிற்று. ஆங்கிலத்திலும் தமிழிலும் வாதாடுமளவுக்குத் திறமை வாய்க்கப் பெற்றார். சாயல்குடியில் *23.6.1933* அன்று நடைபெற்ற சுவாமி விவேகானந்தர் தொடர்பான விழா ஒன்றில் தான் முதன்முதலாக மேடையேறிப் பேசினார். 'மேதை இவர்' என்று அன்று முதலே மக்கட் கூட்டத்தால் மனதாரப் போற்றிப் புகழப்பட்டார், தேவர்.

நாளடைவில், மற்ற மாநிலங்களில் மட்டுமல்ல; இலங்கை, பர்மா போன்ற நாடுகளிலிருந்தெல்லாம் இவருக்கு அழைப்பு வந்தது. அந்நாட்டு மக்களெல்லாம் தேவர் திருமகனின் தேசிய உணர்வுமிக்க - சமய மணங்கமழுகின்ற - தமிழினிமை மாறாத அருவி போன்ற சொற்பெருக்கில் திளைத்துச் சொக்கிப் போனார்கள்.

ஆங்கிலேயரின் வாய்ப்பூட்டுச் சட்டத்தால் கொடுமைப்படுத்தப்பட்ட பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரைத் தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள் 'தேசியம் காத்த செம்மல்' எனக் கூறிச் சிறப்பித்தார்.

தான் சார்ந்திருந்த காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று ஆட்சியில் அமரப் பெரும்பாடுபட்ட இவரைத் தீரர் சத்தியமூர்த்தி 'காங்கிரஸ் காத்தான்' என்று குறிப்பிட்டு இறும்பூதெய்தினார்.

வட இந்திய மக்கள், நேதாஜியோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த இவரைத் 'தென்னாட்டு போஸ்' என்றார்கள்.

பர்மியக் குடியரசுத் தலைவரோ 'இவர் ஓர் இந்து சமயப் புத்த மேதை' என்றார்.

சர்க்கரைப் பந்தலிலே தேன் மழை பெய்தாற்போலச் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றும் திறம் மிக்க தேவர் - 'வேதாந்த பாஸ்கர', 'பிரவசன கேசரி', 'சன்மார்க்க சண்டமாருதம்' என்றெல்லாம் போற்றப்பட்டார்.

கடைசிவரை திருமணமே செய்து கொள்ளாமல் - நாடு, மொழி, மக்கள் என்றே வாழ்ந்த பெருமையாளர் இவர். ஆனால், இதன் காரணமாகவே சேது நாட்டுக்குப் பெருமை சேர்த்த இவருடைய மரபு, இவரையடுத்துச் செழிக்காமல் பட்டுப் போயிற்று.

தெய்வ பக்தி மிக்கவரான தேவர் தீண்டாமைக் கொடுமையைச் சாடினார்; சாதி சமய ஏற்றத்தாழ்வுகள் மாற்றப்பட வேண்டுமெனப் பாடுபட்டார். 'அரிசன மக்களின் ஆலயப் பிரவேசம்' பற்றி அண்ணல் காந்தியடிகளால் அறிவிக்கப்பட்ட போது, மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்குள் அரிசனங்களோடு திரு. வைத்தியனாதய்யர் நுழைவதாக ஏற்பாடு; ஆனால் - 'அது நடக்காது' என்கிற அச்சுறுத்தல் நிலை அன்று அங்கே உருவாயிற்று. பிறகு அன்றைய முதலமைச்சர் மூதறிஞர் ராஜாஜி ஆலோசனையின் பேரில், தேவர் திருமகன் துணையோடுதான் அன்று மதுரை

யம்பதியில் ஆலயப் பிரவேசம் அமைதியான முறையிலே நடத்தப் பட்டது.

தமக்குச் சொந்தமாக இருந்த பத்தாயிரம் பனைமரங்களையும் மரமேறிப் பிழைப்பு நடத்தும் ஏழை எளிய மக்களுக்கே இனாமாக உரிமையாக்கியவர் தேவர்; இது மட்டுமல்ல. இவர் தந்தை உக்கிர பாண்டியத்தேவர் காலத்தில் காமாட்சி நாடார் குடும்பத்தாருக் கும் இவர்கள் குடும்பத்திற்கும் இடையிலிருந்த நட்புறவு நேர்த்தி மிக்கதாகும்.

அரிசனங்களின் முன்னேற்றத் திற்கான அரும்பணிகள் பல ஆற்றிய சிறப்புக்கும் உரியவரான இவர் அவர்களில் சிலருக்குக் குறைந்த குத்தகைக்கும், பலருக்குக் குத்தகை இல்லாமலுமே தமது பெரும்பகுதி விளை நிலத்தைக் கொடுத்தார்.

அரிசனச் சிறார்கள் பலர் இவர் வீட்டிலேயே குருகுல வாசமிருந்து எல்லா நலங்களும் பெற்று உயர்ந் ததும் உண்டு.

★ தந்தை பெரியார் அவர்களாலேயே பெரியார் என்று பாராட்டப்பட்டவர் பசும்பொன் முத்து ராமலிங்கத்தேவர். பி.கே. மூக்கையாத் தேவர் பொன்விழா மலரில், தந்தை பெரியார் அவர்கள் எழுதியுள்ள கட்டுரையொன்றில்- 'பெருமைமிக்க பெரியார் முத்துராமலிங்கத்தேவர்' என்று குறிப் பிட்டிருக்கிறார்.

★ தேவருக்கு நாம் செய்யும் ஒரே கடமை- அவரு டைய ஆத்மா சாந்தியடைய நாம் எடுத்துக் கொள்ளும் ஒரே பணி- தேவருடைய உள்ளத்தில் உறைந்து கிடந்த எண்ணங்களை நிறைவேற்றுவது தான்.

—அறிஞர் அண்ணா

★ பசும்பொன் தேவர் பேசினால், தமிழன்னையே பேசுவதாக நான் நம்புகிறேன். தேவரின் திரு வாயில் அமர்ந்து கொண்டு என் தமிழ்த்தாயே அவர்மூலம் பேசுகிறாள் என்றே எண்ணுகிறேன்!

—தமிழ்த்தென்றல் திரு.வி.க.

**குற்றப் பரம்பரைச் சட்டம்**

மறவர் குல மாணிக்கமாகிய முத்துராமலிங்கத் தேவர் முன் னின்று செய்த பெரும் பணிகளிலே ஒன்று - ஆங்கில ஆட்சியில் அறிமுக மாகி, அதற்குப் பிறகும் தொடர்ந்து அமலில் இருந்த பிரமலைக் கள் ளர்கள் மீதான குற்றப் பரம்பரைச் சட்டத்தை அரசு திரும்பப் பெறச் செய்ததேயாகும்.

தேவரினத்தவர், தினசரி காவல் நிலையத்திற்குப்போய், 'எங்கே சென்றும் எக்குற்றமும் இழைக்க வில்லை' எனக் கட்டைவிரல் ரேகை வைத்து வர வேண்டுமென்பதே அச்சட்டம்; ''இந்த இழிநிலையை மாற்றாவிட்டால் நாங்கள் எங்கள் கட்டைவிரலையே வெட்டிக் கொள்ளு வோம்; அப்புறம் எப்படி உங்களால் ரேகை வாங்கமுடியும்?'' என்று அன்று கர்ஜித்தது இந்தப் பசும் பொன் சிங்கம். அரசால் எதிர்த்து நிற்க இயலவில்லை. அச்சட்டம் அவர் பலம் அறிந்தபின் கைவிடப் பட்டது. பின்தங்கிய வகுப்பினர் இதனால் பெருமை பெற்றார்கள்; தேவரைக் குலதெய்வமாகவே கொண்டாடினார்கள்.

காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து பிரஜா சோஷலிஸ்ட் என் றோர் இயக்கத்தை ஆரம்பித்த ஜெயப்பிரகாசர் அவர்களும் முத்து ராமலிங்கத் தேவரிடத்திலே பெரு மதிப்புக் கொண்டிருந்தார்.

தொழிற்சங்கங்களுக்கும் தலைமை தாங்கி, வெற்றி கண்டவரும் ஆவார் தேவர்.

இரண்டாம் உலகப் போர் தொடங்கிய பின்னர், இவருக்கும் நேதாஜிக்கும் இடைப்பட்ட தொடர் புகள் அரசால் கண்காணிக்கப் பட்டன. அதன் விளைவு - அஞ்சா நெஞ்சன் முத்துராமலிங்கத்தேவர் கைதானார். முடிவாக 1945 செப்டம்பர் 5-ஆம் நாள் விடுதலை செய்யப்பட்டார்.

அதற்கடுத்த சில மாதங்களி லேயே சென்னை சட்டப்பேரவைப் பொதுத் தேர்தல் வந்தது.

தொடர்ந்த சிறைவாசத்தால் உடல்நிலை பெரிதும் பாதிக்கப் பட்டிருந்த போதிலும், தனது மன வலிமையை மாற்றார் உணர வேண்டும் என்கிற நோக்கோடு அத்தேர்தலில் போட்டியிட்டார் பசும்பொன்தேவர். எதிர்த்து நிற் பார் யாருமில்லை; எனவே போட்டி யின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நாளடைவில் - தேவர் பெரு மகனாரை ஆன்மீகம் ஆட்கொண் டது. சிறந்த முருக பக்தரானார் இவர். திருப்புகழ் தேவாரம், திருவாசகம், திருமந்திரமெல்லாம் இவருடைய சொற்பொழிவினி டையே சுவை சேர்த்திடலாயின.

1962-இல் 55-ஆம் வயதடைந்த அந்த வீரத் திருமகனின் யாக்கை, வெப்பு நோயால் பாதிக்கப்பட்டது. அந்த நிலையில் வந்த நாடாளு மன்றத் தேர்தலிலும், அருப்புக் கோட்டைத் தொகுதியிலே போட்டி யிட்டார் தேவர். நோயின் கடுமை காரணமாகத் தொகுதிக்குள் ஒரு முறைகூட சென்று பிரச்சாரம் செய்ய முடியாத நிலை; அந்நிலை யிலும் அவரே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

ஆனால் - டில்லி மாநகர் சென்று பதவிப் பிரமாணம் எடுக்கக் கூட உடல்நிலை இடம் தரவில்லை; முடிவில் - 1963 அக்டோபர் 30-ஆம் நாள் அதிகாலை 5 மணி யளவில், மனிதர்களால் வெல்ல முடியாத அந்த மாவீரனை மரணம் வெற்றி கொண்டுவிட்டது. தென் பாண்டிச்சீமையே தேம்பியழுதது.

- பி.எல். ராஜேந்திரன்.

# தர்மபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகப் பணிகள்

இந்தியாவில் மக்கட் தொகைப் பெருக்கம், இந்தியப் பொருளாதார முன்னேற்றத்திற்கு மாபெரும் தடையாக உள்ளது. எனவே, முன்னேற்றத்திற்கான முதற்படி விவசாயத்துறை என எண்ணி விவசாயத்தில் பசுமைப் புரட்சி ஏற்படுத்தி, உணவுப் பொருள் உற்பத்தியை அதிகரிப்பதில் ஒரு பங்கு வகித்தாலும், தொழில் வளர்ச்சியின் மூலம் ஒரு மாபெரும் சாதனையை ஏற்படுத்தினாலொழிய வறுமைக் கோட்டிற்குக் கீழ்வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இயலாது.

ஆகவே, மிகவும் பின் தங்கியுள்ள மாவட்டங்களில் உள்ள உபயோகப் படுத்தப்படாத இயற்கை வளங்களை அறிவியல் மற்றும் தொழில் நுட்பப் பட்டதாரிகளைக் கொண்டு கண்டறிந்து, அவர்கள் மூலம் பின் தங்கிய மாவட்டங்களில் தொழில்களை ஏற்படுத்தி முன்னேற்றமடையச் செய்ய வேண்டும் என்ற குறிக்கோளுடன், மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையின் மூலம் 'தேசிய அறிவியல் மற்றும் தொழில் நுட்ப முனைவோர் குழு' 1982-இல் அமைக்கப்பட்டது.

திட்டக் குழுவின் பரிந்துரையின் படி இந்தியா முழுவதிலும் இருந்து 13 மாவட்டங்கள் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகத் தேர்ந்து எடுக்கப்பட்டன. இதில் தருமபுரி மாவட்டம் ஒன்றாகும். இச்சிறப்புத் திட்டத்திற்கு 'அறிவியல் மற்றும் தொழில் நுட்ப முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்' எனப் பெயரிடப் பட்டது. தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம் மூலம் 1985-86-ஆம் ஆண்டு முதல் மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு தருமபுரி மாவட்டத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தருமபுரி மாவட்டத்தில் சுய தொழில் அமைக்க அனைத்து உதவிகளையும் இம்மாவட்ட வளர்ச்சிக் கழக 'STED' (Science and Technology Entrepreneurship Development Project) பிரிவு செய்து வருகிறது.

இப்பிரிவு இதுவரை 24 தொழில் முனைவோர் விழிப்புணர்ச்சி முகாம்கள் நடத்தி, அவற்றின் மூலம் 2,177 அறிவியல், பொறியியல் பட்டதாரிகள் மற்றும் தொழில் நுட்பக் கல்வி பயின்றவர்களை இனங்கண்டு, அவர்களுக்கு இத் திட்டத்தில் செயல்பாட்டினையும், இதரத் தொழில் துறை நிறுவனங்களின் பணிகளையும் உதவிகளையும் விளக்கிக் கூறியுள்ளது.

இப்பிரிவு, இம்மாவட்டத்தில் 321 புதிய தொழில்கள் தொடங்குவதற்கான சாத்தியக் கூறு - தொழில் திட்ட அறிக்கைகளைத் தயார் செய்து வைத்துள்ளது.

183 தொழில் முனைவோர்கள் தொழில் திட்ட அறிக்கை தயாரிக்கவும் இது உதவி செய்துள்ளது. 129 நபர்களின் திட்டங்களைப் பரிசீலனை செய்து, நிதி நிறுவனங்களுக்குப் பரிந்துரை செய்து, அவர்களுடன் தொடர்பு கொள்ள இணைப்புப் பாலமாகச் செயல்பட்டு உள்ளது. இதில் 84 பேர் உற்பத்தியைத் தொடங்கிட அனைத்து உதவிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ், மாவட்ட முழுமைக்கும் இரு பெரும் தொழில் கருத்தரங்குகள் மற்றும் மூன்று தொழில் முனைவோர் பயிற்சித் திட்ட வகுப்புகள் செவ்வனே நடத்தப்பட்டுள்ளன.

தொழில் முனைவோரின் ஊக்கத்திற்காகவும், உதவிக்காகவும் 'STED NEWS' என்ற இதழ், மூன்று மாதத்திற்கு ஒரு முறை வெளியிடப் படுகிறது. இதுவரை 18 இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**'மொத்த வேலை வாய்ப்பினை உருவாக்கும் பயிற்சித் திட்டம்'**

இந்திய அரசு, இந்திய அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையின் மூலம் மொத்த வேலை வாய்ப்பினை உருவாக்கும் திட்டம்' என்ற புதிய திட்டத்தை, தருமபுரி மாவட்டத்தில் 1990-91-ஆம் ஆண்டு அறிமுகம் செய்தது. திறன் வளர்க்கும் பல்வேறு பயிற்சிகளை அளித்து, அவற்றின் மூலம் சுய வேலைவாய்ப்பையோ அல்லது தொழில் பயிற்சி அளித்த நிறுவனங்களில் பணியில் அமர்த்தவோ செய்வதே இத்திட்டம்.


1990-91-ஆம் ஆண்டு மூன்று துறைகளில் பயிற்சிகள் அளிக்கப் பட்டன:

1. தையல் பயிற்சி
2. பட்டு நூற்புப் பயிற்சி
3. அச்சகப் பயிற்சி.

**தையல் பயிற்சி**

தையல் கலையில் திறனை வளர்த்துக் கொள்ளும் அடிப்படையில் இப்பயிற்சிக்காக 25 கிராமப் புற மகளிர் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாவட்டச் சமூகநல அலுவலர் மற்றும் தருமபுரி தையல் மகளிர் மேம்பாட்டுக் குடிசைக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் உதவியுடன் 6 மாதங்கள் பயிற்சி அளிக்கப்பட்டது.

பா. வேங்கடசாமி,
மேலாண்மை இயக்குநர்
தருமபுரி மாவட்ட
வளர்ச்சிக் கழகம்
தருமபுரி



மொத்த வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், கைமுறைக் காகிதம் தயாரிக்கப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

தையல் பயிற்சி முடிவடைந்த உடன், தையல் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாகத் தொடர்ந்து வேலை வாய்ப்புப் பெறுவதற்காகச் சேர்க்கப்பட்டனர். இதனால் இத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றவர்கள், இச்சங்கத்தின் மூலம் ஆண்டிற்கு ரூ.3,000 முதல் ரூ.4,000 வரை வருமானம் பெற வேலை வாய்ப்புப் பெறுகின்றனர். இது தவிர, வெளியிடத்திலிருந்தும் தையல் வேலை மூலம் வருமானம் பெறுகின்றனர். தைப்புத் துணி ஏற்றுமதியாளர்களிடமிருந்து, இத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றவர்கள், தையல் வேலை பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**பட்டு நூற்புப் பயிற்சி**

பட்டு நூற்பில் திறனை வளர்த்துக் கொண்டு வேலை வாய்ப்புப் பெற மொரப்பூர் ஊராட்சி ஒன்றியம் கருத்தான்குளம் கிராமத்தில் அமைந்துள்ள பட்டு நூற்பு மையத்தில் 21 கிராமப்புறத் தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு 11.8.90முதல் 10.2.92 வரைஇத் திட்டத்தின் மூலம் 6 மாதப் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சி பட்டு வளர்ச்சித்துறைமற்றும் கோவை வடக்கு சர்வோதயச் சங்கம் ஆகியவற்றின் உதவியுடன் நடத்தப் பட்டது. பயிற்சி மையத்தைத் தற்போது கோவை வடக்குச் சர்வோதய சங்கம் ஏற்று நடத்தி வருகிறது. இத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றவர்கள் இந்த மையத்திலேயே தொடர்ந்து வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள்.

**அச்சகப் பயிற்சி**

அச்சு கோத்தல், அச்சடித்தல், பைண்டிங், ஸ்கிரீன் பிரிண்டிங் ஆகியவற்றில் திறமை வளர்த்துக் கொண்டு வேலை வாய்ப்புப் பெற தருமபுரி மகளிர் எழுதுபொருள் தயாரிப்புத் தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் 7.1.91 முதல் 6.4.91 வரை 24 மகளிருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்றவர்கள் அனைவரும் இச்சங்கத்திலேயே உறுப்பினராகச் சேர்க்கப்பட்டு தொடர்ந்து வேலை வாய்ப்புப் பெற்று வருகின்றனர்.

**மொத்த வேலை வாய்ப்புத் திட்டம் (1991-92)**

பயிற்சி பெற விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்கள் நேர்முகத் தேர்வு மூலம் தேர்வுக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பயிற்சிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. பயிற்சிகள் முடிந்ததும் பயிற்சி பெறும் நிறுவனங்களிலேயே தொடர்ந்து வேலை வாய்ப்புப் பெற அல்லது சொந்தமாகத் தொழில் அமைத்துக்கொள்ள ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

விஞ்ஞானத் தொழில் நுட்பம் மூலம் அதிக அளவில் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத் தென் வட்டாரக் கருத்தரங்கம் 29.9.92 அன்று தருமபுரியில் நடைபெற்றது. மத்திய விஞ்ஞானத் தொழில் நுட்பத் துறை இணை அமைச்சர் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் இக்கூட்டத்தைத் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றினார்.


தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பப் பிரிவின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட தொழில் நிறுவனங்கள் தயாரிக்கும் பொருட்களைக் கொண்டு கண்காட்சி ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது.

தருமபுரி மாவட்டத்தில் தொழில் தொடங்க விரும்பும் அறிவியல் மற்றும் தொழில் பயிற்சி பயின்றவர்கள், தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் அவர்களைச் சந்தித்து விவரம் பெறலாம்.

# நேரு வழி நடப்போம்

அட்டை சொல்லும் கவிதை:

**கவிஞர் பி.வி. கிரி**





நேரு மாமா பிறந்தநாளில்
நெஞ்சம் உயர்த்துவோம்
'யாரும்நம்மில் அடிமையில்லை'
என்று கூறுவோம்!

நாளைஉலகம் நமதுகையில்
நடை பயிலுவோம்
வேளைவந்தால் நாட்டைக்காக்கும்
வீரம் கொள்ளுவோம்!


நமதுநாடு நமதுமக்கள்
நாளும் போற்றுவோம்
சமத்துவமாய் வாழ்வோமென்று
சபதம் செய்குவோம்!

ஊனமுற்ற யாவருக்கும்
உதவி செய்குவோம்
காணுகின்ற உயிர்களிடம்
கருணை காட்டுவோம்!



'நல்லநூல்கள் நல்லநண்பர்'
என்று சொல்லுவோம்
வல்லவராய் விளங்கும்வண்ணம்
வாழ்ந்து காட்டுவோம்!

உலகம்போற்றும் நேருவழியில்
உவந்து செல்லுவோம்
திலகம்போல நாடுதிகழ
தினமும் உழைப்போம்!





# திருக்கோயில் திருப்பணிகள்

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களின் நிர்வாகத்தைச் சீரமைக்கவும், மேம்படுத்தவும், புதிய சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு, மாநில அளவில் தமிழ்நாடு 'திருக்கோயில் நிர்வாக வாரியம்' என்ற அமைப்பும் மாவட்ட அளவில் 'மாவட்டக் குழுக்கள்' என்ற அமைப்பும் உருவாக்கப்பட்டு, திருக்கோயில் நிர்வாகத்தில் புதிய சகாப்தத்தைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது. மாநில அளவில் அமைந்துள்ள தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரியத்தில் அரசு அலுவலர்களும், சமூகத்தில் பல துறைகளில் திறமைமிக்க சான்றோர்களும் உறுப்பினர்களாகத் திகழ்கிறார்கள்.

**திருக்கோயில் நிர்வாக வாரியம்**

திருக்கோயில் நிர்வாக வாரியம் 2 கூட்டங்களை நடத்தி, 225 தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. முதல் கூட்டத்தில், 47 திருக்கோயில்களுக்குத் திருப்பணி மற்றும் கட்டுமானப் பணி ரூ.94.29 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும், தொழில் நுட்ப அனுமதியும் வாரியம் வழங்கியுள்ளது. மேலும் 33 திருக்கோயில்களுக்கு ரூ.136 இலட்சத்திற்கான ஒப்பந்த அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இரண்டாவது வாரியக் கூட்டத்தில் 32 திருக்கோயில்களில் ரூ.169.44 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 12 திருக்கோயில்களில் ரூ.141 இலட்சத்திற்கு ஒப்பந்த அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. 63 திருக்கோயில்களில் திருப்பணிகள் நடைபெறத் திருப்பணிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 131 திருக்கோயில்களுக்கு 1402-ஆம் பசலியில் ரூ.3,757 இலட்சத்திற்கு வரவு செலவுத் திட்டம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**மாவட்டக் குழுக்கள்**

திருக்கோயில் நிர்வாக வாரியத்தால் 17 மாவட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டு, ரூபாய் ஒரு இலட்சத்திற்குக் குறைவாக வருமானமுள்ள கோயில் நிர்வாகப் பொறுப்பு இக்குழுக்களிடம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 17 மாவட்டக் குழுக்கள் 61 கூட்டங்களை நடத்தியுள்ளது. இராமநாதபுரம் அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில் வடக்கு மற்றும் தெற்குக் கோபுரங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

மைலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் திருக்குளம் சீரமைப்புப் பணி நடைபெற்று முடியும் தறுவாயில் இருக்கிறது. இக்குளத்தில் சேருகின்ற நீரைச் சுத்தம் செய்வதற்கு, குளத்தில் நான்கு இடங்களில் சுழற்சி முறையில் சுத்தம் செய்யும் இயந்திரங்களை நிர்மாணிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் பணித்துள்ளார்கள்.

**வல்லுநர் குழு**

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மூலவர் விக்கிரகத்தைப் பாதுகாப்பதற்கு 'வல்லுநர் குழு' ஒன்றைத் தமிழக அரசு அமைக்க உத்தரவிட்டு, அந்தக் குழு அமைக்கப்பட்டு அரசுக்கு அறிக்கை தந்துள்ளது.

**புத்தொளிப் பயிற்சி**

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களில் ஏற்கெனவே பணியிலிருக்கின்ற அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகளுக்கு வேத ஆகமப் பயிற்சி மீண்டும் ஓர் ஆண்டுக் காலத்திற்கு அளிக்க மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் 10 மையங்களில் 500 அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகள் 'புத்தொளிப் பயிற்சி' மிகுந்த மகிழ்ச்சியோடு பெற்றுவருகிறார்கள்.

**வேத ஆகமக் கல்லூரி**

வேத ஆகமங்களைப் பயிற்றுவிக்கும் பள்ளிகள் பயிற்சி அளிப்பதை ஊக்கப்படுத்துவதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களால் வேத ஆகமக் கல்லூரி ஏற்படுத்தும் திட்டம் அறிவிக்கப்பட்டது. வேத ஆகமக் கல்லூரி ஒன்றினை அமைப்பதற்கான இடம் தேர்வு செய்வதற்காக அரசு வருவாய்த் துறைச் செயலர், வணிகவரி மற்றும் அறநிலையத் துறைச் செயலர், அறநிலையத்துறை ஆணையர் மற்றும் நிலச்சீர்திருத்த ஆணையர் ஆகியோரைக் கொண்ட உயர் மட்டக்குழு ஒன்றினை அமைக்க முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

**உலோக நோய்த் தடுப்பு மையம்**

திருவாரூரில் உள்ள உலோகத் திருமேனி பாதுகாப்பு மையத்தில் வைக்கப்பட்டுள்ள உலோகத் திருமேனிகளை 'உலோக நோய்' தாக்காமல் பாதுகாக்கக் குளிர்சாதன வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. இலண்டனில் இருந்து மீட்கப்பட்ட பத்தூர் அருள்மிகு நடராசர் திருமேனியைப் பாதுகாப்பாக வைக்க அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயிலில் திருப்பணி தொடங்கப்பட்டு, முடிவடையும் தறுவாயில் உள்ளது.

கன்னியாகுமரி தேவஸ்வம் திருக்கோயில்களைப் பராமரிப்பதற்காக அரசு மானியமாக ரூ.13.7 இலட்சம் ஆண்டு தோறும் வழங்கி

வருவது 1992-ஆம் ஆண்டிலிருந்து ரூ.10 இலட்சம் ஆண்டொன்றுக்குக் கூடுதலாக வழங்கப் படும்.

**எச்சரிக்கை மணி - பாதுகாப்புப் படை**

திருக்கோயில்களிலுள்ள நகை, உலோகத் திருமேனிகளைப் பாதுகாப்பதற்காக 337 திருக் கோயில்களில் 'எச்சரிக்கை மணி' பொருத்த நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தவிர திருக்கோயில்களில் நடைபெறும் திருட்டு மற்றும் சிலை உடைப்பு ஆகியவற்றைத் தடுக்க 'திருக் கோயில் பாதுகாப்புப்படை' அமைக்கப்பட்டு வருகிறது. இப்பாதுகாப்புப்படையில் 1000 காவலர்களும், 3000 ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களும், நியமனம் செய்யப்பட இருக்கிறார்கள். 2,552 கோயில்களில் இப்பாதுகாப்புப்படை அமைக்கப்படுகிறது.

**வருவாயை வசூலிக்க ஒரு கால பூசை நடத்த**

திருக்கோயில்களுக்குச் சேர வேண்டிய குத் தகைப் பாக்கியை வசூலிக்க ஐந்து வருவாய் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. மேலும், ஆறு வருவாய் நீதிமன்றங்கள் தொடங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. திருக்கோயில்களில் நிதி வசதி யின்மையால், ஒரு காலப் பூசை கூட நடத்த முடியாத திருக்கோயில்களில் பொதுமக்கள் நன்கொடை வழியாக ரூ.25,000 மூல நிதியாகக் கொண்டு, செயல்படுத்தவும், பொதுமக்கள் வழி யாக ரூ.25,000 திரட்ட முடியாத பகுதிகளில் ரூ.12,500-ஐ மாண்புமிகு முதல்வர் திருக் கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி யிலிருந்து வழங்குவது என உத்தரவிடப்பட்டு, இவ்வாண்டு 400 திருக்கோயில்களில் இத்திட்டம் செயல்படவிருக்கிறது.

திருக்கோயில் திருப்பணிகள் மற்றும் கட்டு மானப் பணிக்கு பொதுநலநிதி, மாண்புமிகு முதல்வர் திருக்கோயில் திருப்பணி நிதி, உபரி நிதி வசதியுள்ள மற்ற திருக்கோயில்கள் நிதியுதவி, பொதுமக்கள் நன்கொடை ஆகியவை மூலம் நடைபெற்று வருகின்றன. ஆகம விதியின்படி 12 ஆண்டிற்கு ஒருமுறை திருக்கோயில்களுக்குக் குடமுழுக்கு நடத்த வேண்டும் என்கிற வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 16 மங்களா சாசனம் பெற்ற திருக்கோயில்களுக்கும், 19 பாடல்கள் பெற்ற திருக்கோயில்களுக்கும், திருப்பணி செய்ய முடிவு செய்யப்பட்டு நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**திருக்கோயில்களில் திருப்பணி**

1.6.91 முதல் 30.6.92 முடிய 205 திருப் பணிகள் ரூ.1,085 இலட்சம் மதிப்பீட்டிலும், 247 பழுது பார்த்தல் மற்றும் இதரக் கட்டுமான வேலைகள் ரூ.656 இலட்சம் மதிப்பீட்டிலும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ரூ.535 இலட்சம் மதிப்பீட்டில் 387 திருப்பணிகள், ரூ.651 இலட்சம் மதிப்பீட்டில் 252 பழுதுபார்த்தல் மற்றும் கட்டுமான வேலைகள் நடத்துவதற்குத் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ரூ.134.29 இலட்சம் மதிப்பீட்டில் 35 திருப் பணிகளும், ரூ.49.26 இலட்சம் மதிப்பீட்டில் 5 பழுதுபார்த்தல் மற்றும் இதரக் கட்டுமானப் பணிகள் ஆகியவற்றிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ரூ.166.99 இலட்சம் மதிப்பீட்டில் 87 திருப்பணிகளும், ரூ.85.74 இலட்சம் மதிப்பீட்டில் 58 பழுதுபார்த்தல் மற்றும் கட்டுமான வேலைகளுக்கும் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

ரூ.93 இலட்சம் செலவில் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் வணிக வளாகம் கட்டப்பட்டிருக்கிறது. இருக்கன்குடி மாரியம்மன் திருக்கோயில், திருச்சி மலைக் கோட்டை தாயுமானவர் திருக்கோயில், சென்னை சித்தி புத்தி விநாயகர் திருக்கோயில் ஆகிய இடங்களில் வணிக வளாகம் கட்டும் பணி தொடங்கியுள்ளது.

**திருமண மண்டபங்கள்**

அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில் 2 திருமண மண்டபங்கள், திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் 2 திருமண மண்டபங்கள், பழனி தண்டாயுதபாணி திருக்கோயிலில் 3 திருமண மண்டபங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

திருமண மண்டபங்கள் கட்டுவதற்கான கோரிக்கைகள் பொதுமக்களிடமிருந்து வந்த வண்ண மிருக்கின்றன. இக்கோரிக்கைகளைப் பரிசீலித்து, தேவையான இடங்களில் திருமண மண்டபங்கள் கட்டுவதற்கான செயல் திட்டம் ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது.

**ஓய்வுத்தொகை உயர்வு**

திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஓதுவார்களுக்கு ஓய்வுத் தொகை ரூ.250-லிருந்து ரூ.300-க்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. இதைப் போன்று அர்ச்சகர்களுக்கும் ரூ.300 ஓய்வு ஊதியம் அளிக்க அரசாணை பிறப்பிக்கப்பட்டி ருக்கிறது. திருக்கோயில் பணியாளர்களுக்கு வழங் கப்பட்டு வந்த குடும்ப நல நிதி ரூ.20,000-லிருந்து ரூ.30,000- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**சம்பளப் பாக்கி**

திருக்கோயில்களில் நிதி வசதிக் குறைவால் மாதம் ரூ.400 வரை ஊதியம் பெறும் பணியாளர்களுக்கு, ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதியிலிருந்து பெறும் வட்டியிலிருந்து சம்பளப் பாக்கி கொடுக்க அனுமதி வழங்கப் பட்டிருக்கிறது. தற்போது 678 திருக்கோயில் களில் பணிபுரியும் 1,245 பணியாளர்களுக்கு ரூ.15.41 இலட்சம் சம்பளப் பாக்கியாக வழங்கப் பட இருக்கிறது.

(16.10.92 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் இந்து சமய அறநிலையத் துறையின் பணிகள் குறித்து ஆய்வு செய்தபோது பெறப்பட்ட தகவல் தொகுப்பு).

## ஓராண்டில் இந்து சமய அறநிலையத்துறையின் முன்னேற்றப் பணிகள்

# வயிற்றுப் போக்கு நோயைத் தடுக்க தமிழக அரசு நடவடிக்கை

கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறையைத் தொடர்ந்து அண்மையில் பெய்த பெருமழையின் விளைவாக, மாநிலத்தில் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., தென்னார்க்காடு, தருமபுரி, இராமநாதபுரம், தஞ்சாவூர் மாவட்டங்களில் சில இடங்களில் அசுத்தமான குடிநீரைப் பருகியதன் காரணமாக வயிற்றுப்போக்கு நோய் ஏற்பட்டிருக்கிறது. அதில் பெரும்பாலானோர் காலரா நோயால் பாதிக்கப்படவில்லை என மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மேலும், பொதுமக்கள் அதிகமாகக் கூடும் உள்ளூர்த் திருவிழாக்கள் மற்றும் கண்காட்சியின்போது கிணறுகள் போன்ற பாதுகாக்கப்படாத நீர் ஆதாரங்களிலிருந்து தண்ணீர் எடுத்துப்பருகுவதும் இந்நோய் தோன்ற் ஒரு காரணமாகும். இத்தகைய நோய் கண்டுள்ள குடியிருப்புகளிலுள்ள கிணற்றுக்குள் கழிவு நீர் மற்றும் வயல்களிலிருந்து அசுத்த நீர் கசிந்ததன் விளைவாக, கிணற்று நீர் கெட்டுப் போயிற்று. பொதுவாக வயிற்றுப்போக்கு இந்தக் காலங்களில் ஏற்படுவது வழக்கம்.

## தடுப்பு நடவடிக்கைகள்

இந்தப் பகுதிகளில் சுமார் 10 இலட்சம் நபர்களுக்குக் காலரா தடுப்பு ஊசிகள் போடப்பட்டுள்ளன. மேலும், 25 ஆயிரம் நீர் ஆதாரங்களில் குளோரின் சேர்க்கப்பட்டு பாதுகாப்புத் தரப்பட்டுள்ளது. வயிற்றுப்போக்கின் காரணமாக மரணம் நேராமல் தடுப்பதற்காக உப்பு கலந்த கரைசல் மற்றும் மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. வீடுகளில், குடிநீரில் குளோரின் கலக்க குளோரின் மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்ட குடியிருப்புகளில் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவத்துறை இயக்குநர் மற்றும் இணை இயக்குநர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அடிக்கடி சென்று நிலைமையைக் கண்காணித்து வருகிறார்கள். அனைத்துச் சுகாதார அலுவலர்களும் உஷார்ப் படுத்தப்பட்டுள்ளனர்.

போதுமான மருந்துகளும் குளோரின் மாத்திரைகளும் கையிருப்பில் உள்ளன.

## மக்கள் ஒத்துழைப்பு தேவை

இதுபோன்ற தடுப்புப் பணிகளில் பொதுச் சுகாதாரத் துறையோடு பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டும். சாப்பிடுவதற்கு முன்பும், இயற்கைக் கடன்களை முடித்த பிறகும் கைகளை நன்றாகக் கழுவவும். நல்ல சுகாதாரப் பழக்கங்களைக் கடைப்பிடித்தல், நன்றாகக் கொதிக்க வைத்து குளிர்ந்த தண்ணீரை மட்டுமே பருகுதல், புதிதாகச் சமைக்கப்பட்ட உணவு வகைகளையே சாப்பிடுதல், குளிர்ந்து போன உணவு வகைகள் மற்றும் ஈக்கள், புழுக்கள் மொய்த்த உணவுப் பண்டங்களைத் தவிர்த்தல், வயிற்றுப்போக்கு அல்லது வாந்தி ஏற்பட்டவுடன் மரணத்தைத் தவிர்க்க உடனடியாக அருகிலுள்ள சுகாதார மையம் அல்லது சுகாதாரப் பணியாளரை அணுகி உரிய மருத்துவ உதவி பெறுதல், வீட்டில் கிடைக்கும் பானங்கள் மற்றும் உப்பு கலந்த நீரைப் பருகுவதன் மூலம் வயிற்றுப்போக்குச் சாவுகளைத் தடுக்க முடியும் என்பதை அனைவருக்கும் தெரிவித்தல் போன்ற முறைகளைக் கையாண்டு, பொதுச் சுகாதாரத் துறைக்கு ஒத்துழைக்க வேண்டும்.

---

### ஐ.நா. விருது பெறும் இந்தியர்

மனிதக் குடியிருப்புக்களுக்கான ஐக்கிய நாடுகள் மையத்தின் விருதைப் (Habitat scroll of Honour) பெற இந்தியாவைச் சேர்ந்த பிரபல கட்டடக்கலை நிபுணர் திரு. லாரி பேக்கர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஏழை மக்களின் குடியிருப்புப் பிரச்சினையில் அக்கறை செலுத்துபவராகவும், மனிதக் குடியிருப்புக்களை மேம்படுத்துவதற்கான பணிகளிலும் சிறந்த சேவை புரிந்தவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

### இந்தியாவுக்குச் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

நமது நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இவ்வாண்டு அதிகரித்திருக்கிறது. இந்த ஆண்டு முதல் எட்டு மாதங்களில் மட்டும் 12 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இந்தியாவுக்கு வருகை புரிந்துள்ளனர். இதன் மூலம் அந்நியச் செலாவணியாக மட்டும் 2,383 கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது.

## தெரிந்து கொள்ளுங்கள்

இம்சாகர் என்ற பொருத்தமான பெயர் தாங்கி, பனி (ஹிம்) படர்ந்த ஜம்மு தாவியிலிருந்து கடல் (சாகர்) சூழ் குமரி முனைக்கு வரும் வாராந்திர இரயில், கடக்கும் தொலைவு 3,726 கி.மீ! நாட்டில் மிக நீண்ட தொலைவைக் கடக்கும் இரயில் இதுதான்!

★ 1991 மக்கள் தொகைக் கணக்குப்படி இந்திய கிராமங்களில் வசிப்போரின் எண்ணிக்கை 627.1 மில்லியன்.

★ இந்தியாவின் உயரமான மலைச் சிகரம் எதுவென்றால் எவரெஸ்ட் எனப் பட்டென்று பதில் வரும். ஆனால் K-2 சிகரமே இந்தியாவின் உயரமான மலைச் சிகரம் (8,611 மீ). உலகின் உயரமான சிகரம் என்ற பெருமை எவரெஸ்ட்டுக்குத்தான். அது நமது அண்டை நாடான நேபாளத்தில் உள்ளது. இந்திய எல்லைக்குள் உள்ள K-2 இரண்டாவது இடத்தையும், கஞ்சன் ஜங்கா (8,598 மீ) மூன்றாவது இடத்தையும் வகிக்கின்றன.

★ இந்தியாவிலிருந்து வியத்நாமிற்கு ஏற்றுமதி 12.87 மில்லியன் அமெரிக்க டாலர் (1991-92-ல்); அங்கிருந்து நமது இறக்குமதி 38.03 மில்லியன் அமெரிக்க டாலர். இங்கிருந்து இயந்திரங்கள், உபகரணங்கள், மின்னணுக் கருவிகள், மருந்துப் பொருட்கள், பருத்தி நூல், துணிகள் ஏற்றுமதியாகின்றன. அங்கிருந்து பட்டு, அரிசி, மரம் இறக்குமதியாகின்றன.

★ தேசியமயமாக்கப்பட்ட பின்னர் வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 8,000-லிருந்து 70,000-ஆக உயர்ந்துள்ளது.

—தூவானம்



## தம்பி, உன்னைத் தான்

—கோ. ஜெயச்சந்திரன்

தேகப் பயிற்சி தினமும் செய்!
திடமாய் நெஞ்சில் உறுதி வை!
காகம் போலக் கூடி இரு!
கடின உழைப்பால் லாபம் பெறு!

எதையும் தீர ஆய்ந்தே அறி!
ஏகும் தீய ஆசை முறி!
நிதமும் நீரில் சீராய்க் குளி!
நேர்த்தி யாக உண்மை விளி!

அளவாய் அறுசுவை உணவை உண்!
அகந்தை விடுத்தே இறைவனை எண்!
அளவாய்ப் பேசி அன்பைப் பெறு!
அமைதியில் என்றும் மகிழ்ச்சி உறு!



வெற்றி பெற...

நாம் கஷ்டப்பட்டு மனச்சாட்சிக்கு நியாயமாகப் பக்தி சிரத்தையுடன் உழைத்தாலன்றி வெற்றி பெற முடியாது.

—பண்டித நேரு

# நூல் நயம்

## உலகில் உள்ள வௌவால்கள்

**ஆசிரியர்:**
பேராசிரியர் கே.கே. ராஜன்

**வெளியீடு:**
சூடாமணி பிரசுரம்,
36-ஏ/7, கோவிந்தன் சாலை,
சென்னை-33.

பக்கம்:208 விலை:ரூ.40/-

உலகில் காணப்படும் விந்தையான பிராணிகளுள் வௌவாலும் ஒன்று. பாலூட்டிகள் இனத்தைச் சேர்ந்த இவற்றில் தான் எத்தனை வகைகள் உள்ளன!

வௌவால் இனத்தில் சைவமும் உண்டு. அசைவமும் உண்டு. 250 மைல் தூரம் வரை பறந்து செல்லும் இந்த வௌவால்களுக்கு, பாழடைந்த கோயில்கள், குகைகளே தஞ்சம் புகும் இடங்கள். இவை 20 ஆண்டுகளுக்கும் மேலும் உயிர் வாழ்கின்றனவாம்.

உலகில் காணப்படும் வௌவால் வகைகளையெல்லாம் பட்டியல் போட்டுக் காட்டி, அவை பற்றிய விந்தைச் செய்திகளைச் சுவைபடத் தருகிறார் நூலாசிரியர். ஏராளமான படங்களும் உள்ளன.

பள்ளி மாணவர்க்குப் பெரிதும் பயன்படும் நூல் இது.

—மறைமலை

## வள்ளுவத்தில் அறிவியல்

**ஆசிரியர்:** மருத்துவர் க. கோபால்

**வெளியீடு:**
வள்ளுவர் அறிவியல் மையம்,
கே.ஜி. மருத்துவமனை,
அரும்பாவூர்-621 103.

பக்கம்:112 விலை:ரூ.18/-

திருக்குறள் ஒரு 'கணிப்பான்' (கம்ப்யூட்டர்) போல எப்படி வடிவமைக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்நூல் வாயிலாக நிலை நிறுத்துகிறார் நூலாசிரியர்.

திருக்குறளில் பொதிந்துள்ள அறிவியல் உண்மைகளை வெளிப்படுத்தும் திறம் பாராட்டுதற்குரியது.

நான்கு பகுதிகளாகப் பகுத்துக் கொண்டு, வள்ளுவர் காட்டு அறிவியல் கோட்பாடுகளை ஆய்வுக் கண்ணோட்டத்துடன் அலசியிருப்பது நூலாசிரியரின் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுகிறது.

தொடக்கத்திலேயே அறிவைப் பகுத்திருக்கும் பாங்கு, ஆதிபகவன், உணவு, எண்ணெழுத்து ஆகியவற்றைக் கையாண்டிருக்கும் அழகு எல்லாம் சிந்தைக்கு விருந்தூட்டுவனவாக அமைந்துள்ளன. திருக்குறளாராய்ச்சி செய்யும் மாணவர்க்கு இது ஒரு கையேடாக விளங்கும்.

—பி.வி.கிரி

## மஞ்சள் இஞ்சி வெங்காயம் வெள்ளைப்பூண்டு வைத்தியம்

**ஆசிரியர்:** மயிலைத் தொண்டன்

**வெளியீடு:**
தமிழ்மணி பதிப்பகம்
107-ஏ, பெரியார் பாதை மேற்கு,
சென்னை-94.

பக்கம்:80 விலை:ரூ.10/-

அன்றாட வாழ்க்கையில் நாம் பயன்படுத்தும் பொருள்களே, நமக்கு மருந்தாகவும் பயன்படுகின்றன.

மஞ்சள், இஞ்சி, வெங்காயம், வெள்ளைப்பூண்டு இவை அன்றாடச் சமையலின் இன்றியமையாத பொருள்கள் இவற்றின் மருத்துவக் குணங்களை விளக்குகிறது இந்நூல். இல்லத்தரசிகளுக்கு இது ஒரு கையேடு.

## பகவான் பாபாவின் அருள்வாக்கு

**ஆசிரியர்:** எஸ். கோவிந்தராஜுலு

**வெளியீடு:**
பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக் குளம் மேற்கு வீதி,
சென்னை-600 004.

பக்கம்:112 விலை:ரூ.10/-

மேஜர் ஜெனரல் எஸ்.பி. மகாதேவன் அணிந்துரையுடன் கூடிய இந்த நூலில், பக்த கோடிகளைப் பரவசப் படுத்தும் வகையிலான செய்திகள் ஒரு பக்கத்திற்கு ஒன்று வீதம் தரப்பட்டுள்ளது.

'இதயமும் மனமும் பூட்டும் சாவியும் போன்றவை...' என்பது முதல் கட்டுரைத் தொடக்கம்; 'சேத்ரம் என்ற சொல்லுக்கு விளைநிலமென்ற வேறொரு பொருளும் உண்டு..' என்பது கடைசிக் கட்டுரையின் தொடக்கம்.

அந்தந்தக் கட்டுரையின் கீழும் அதன் தன் கருத்தோடு கூடிய 4 அடிக் கவிதைகள் ஒவ்வொன்று போடப்பட்டுள்ளது; மரபுக் கவிதையிலும் சேராமல் புதுக் கவிதையிலும் அவை சேராதிருப்பது மட்டுமே நமது குறை.

மற்றபடி- அட்டையும் செய்திகளும் பக்தர்களுக்கு அற்புதம்.

## உலகம் போற்றும் சாதனை புரிந்த சான்றோர்கள்

**ஆசிரியர்:** மயிலைத் தொண்டன்

**வெளியீடு:**
கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்,
92, கங்கை அம்மன் கோயில் தெரு,
சென்னை-600 026.

பக்கம்:112 விலை:ரூ.14/-

ஜார்ஜ் வாஷிங்டன் முதலாக- இரவீந்திரநாத் தாகூர் ஈறாக 33 ஆற்றலாளர்களின் வாழ்க்கை வரலாறு இந்தப் புத்தகத்தில் இரத்தினச் சுருக்கமாக எழுதப்பட்டுள்ளது. நான்கைந்து கட்டுரைகளில், படங்கள் போடப்பட்டுள்ளன.

இன்னின்ன துறையில் என்றில்லாமல்- பல்வேறு துறைகளிலும் சாதனை படைத்தோரின் சரித்திரச் சுருக்கத் தொகுப்பே இந்நூல்.

பொருளடக்கம் சேர்க்கப்பட்டிருந்தால், பொட்டுவைத்த நெற்றிபோல் இந்நூல் பொலிவுற்றிருக்கும்.

—'சோழராஜா'

## தமிழிலக்கியத்தில் மனையியல்

**ஆசிரியர்:** ஜான் ஆசீர்வாதம்

**வெளியீடு:**
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
சென்னை-600 003.

பக்கம்:80 விலை:ரூ.23/-

இல்லறமே நல்லறம் என்பார்கள். நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம் என்றும் பெரியவர்கள் சொல்லி வைத்தார்கள். அந்த வகையில் பண்டைக்காலத்தில் ~~வாழ்ந்த~~ தமிழ்ப் பெருங்குடி மக்கள் வாழ்ந்த வாழ்க்கை முறைகன்ள அழகாகத் தெளிவுபட எடுத்துக் கூறுகிறார் ஆசிரியர்.

'திருமணங்கள்' எனும் முதல் கட்டுரையில் திருமண வகைகளைக் கூறி, அவற்றை விளக்கும் அருமை படித்து மகிழ்தற்குரியது.

இதேபோல, உறவுமுறைகள், சிறு குடும்பங்கள், கர்ப்பிணிக்குச் சடங்குகள், குழந்தை பிறந்ததும் சடங்குகள், குழந்தை வளர்ப்பு, தாய்ப்பால், புலால் உணவு, சைவ உணவு, விருந்தோம்பல் ஆகிய கட்டுரைகளும் இலக்கிய மேற்கோள்களுடன், அக்கால வாழ்க்கை முறையைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

---

★ சமயம் சமயம் என்று நான்
எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள
மாட்டேன்; சமயத்தின் பெயரால்
செய்யப்படும் கொடுமைகளை
அறவே ஏலேன்.

—காந்தியடிகள்

தமிழ் வளர்த்த பெரியார்:



# குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா பாடல்கள்

"ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் சிறுவரே
நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகிறார்!"



– இந்தப் புகழ் வாய்ந்த பாடலை எழுதியவர் யார்? அவர்தான் 'குழந்தைக் கவிஞர்' என்று குவலயமெல்லாம் போற்றும் அழ. வள்ளியப்பா அவர்கள்.

எப்போதும் மலர்ந்த முகம், இதழில் புன்சிரிப்பு, மழலைப் பேச்சு, எளிய உடை இவற்றின் மொத்தத் திருஉருதான் அழ. வள்ளியப்பா.

வள்ளியப்பா அவர்கள் குழந்தைகளோடு குழந்தையாக, தம் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தார். அவரைச் சுற்றி எப்போதும் மலர்களைப் போல மழலைச் செல்வங்கள் சூழ்ந்து கொண்டே இருக்கும். அவர்களோடு கொஞ்சிக் குலவி மகிழ்வதே அவரது சிறந்த பொழுதுபோக்கு.

அவரது சிந்தனையெல்லாம் குழந்தைகளுக்குப் பாடல்கள் எழுதுவது, கதைகள் சொல்வது, குழந்தை இலக்கியம் வளரப் பாடுபடுவது...! இப்படி அவர் நாளெல்லாம் உழைத்தார்.

1950-இல், குழந்தை எழுத்தாளர் சங்கம் தோற்றுவித்து, அதைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து, அதன்மூலம் ஏராளமான எழுத்தாளர்கள் உருவாக வழிவகுத்தார். பாரதிதாசன் பரம்பரை போல, வள்ளியப்பா பரம்பரை என்று சொல்லத் தக்க வகையிலே, அவரைக் குருவாக ஏற்றுக் குழந்தை இலக்கியம் படைப்பவர்கள் இன்று ஏராளம்.

குழந்தை இலக்கிய மாநாடுகளை நடத்தி, குழந்தை இலக்கியத் தொண்டர்களைச் சிறப்பித்தவர். தாம் பரிசுப் போட்டிகளில் கலந்து கொள்ளாமல், தம்மோடு இருப்பவர்களைக் கலந்து கொள்ளச் செய்து ஊக்கந்தந்தவர்.

**நவம்பர் - 7 குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் பிறந்த நாள். அதையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.**

கள்ளமில்லாத வெள்ளை உள்ளம் குழந்தை உள்ளம் என்பார்கள். வள்ளியப்பாவும் கள்ளமில்லாதவர். எல்லாவற்றையுமே வெளிப்படையாகப் பேசுவார். யாரையும் குறை சொல்ல மாட்டார். எல்லாரையும் நிறைவாகப் பேசுவார். திறமை மிக்கவரைப் பாராட்டுவார்; உற்சாகமூட்டுவார்.

அன்பு, அடக்கம், பொறுமை இம்மூன்றும் இவரது மூலதனங்கள்.

"குழந்தைகள் இன்பமே எனது இன்பம் – அவர்களுக்குத் தொண்டு செய்வதே என் முக்கியக் குறிக்கோள்" என்று முழங்கியவர் அவர்.

இத்தகு அருமையும் பெருமையும் மிக்க வள்ளியப்பா, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள இராயவரத்தில், 1922-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 7-ந் தேதி பிறந்தார். பெற்றோர் அழகப்பா-உமையாள் ஆச்சி.

இவரும் ஏடு தூக்கிப் பள்ளி சென்றார். சிறுவயதில் பெற்றோர்கள் கொடுத்த காசில் தின்பண்டம் வாங்கித் தின்னாமல், புத்தகங்கள் வாங்கிப் படித்தார். நூல்கள் வாங்க வாங்க அதுவே ஒரு குட்டி நூலகமாகக் காட்சியளித்தது. பாரதிமேல் மோகம் கொண்டு பாரதி வாலிபர் சங்கம் அமைத்து, பாரதி பாடல்களைப் பரப்பினார்.

1940-இல் திரு. வை. கோவிந்தன், வள்ளியப்பாவைச் சென்னைக்கு அழைத்து வந்தார். சென்னையில், தான் நடத்தி வந்த 'சக்தி' அலுவலகத்தில் பொருளாளராக நியமித்தார். அங்கு 'சக்தி' இதழின் ஆசிரியர் திரு. தி.ஜ.ர. நட்பு இவருக்குக் கிடைத்தது. தி.ஜ.ர.வைத் தம் குருவாக ஏற்றார்.

1941-இல் இந்தியன் வங்கிப் பணியில் சேர்ந்தார். 1944-இல் திருமணம் நடைபெற்றது. இதே ஆண்டில், இவரது 'மலரும் உள்ளம்' கவிதைத் தொகுதி சிறிய அளவில் வெளிவந்தது. இதுவே இவரது முதல் நூல். பிறகு 1954-இல் இது பெரிய அளவில் மலர்ந்தது.

பாலர் மலர், டமாரம், சங்கு ஆகிய சிறுவர்கள் இதழை நடத்தியவர். 1951-இல் 'பூஞ்சோலை' திங்களிதழின் சிறப்பாசிரியராகப் பணியாற்றினார்.

மூதறிஞர் இராஜாஜி, தமிழ்த் தென்றல் திரு.வி.க. ஆகியோருடன் தொடர்பு கொண்டு தமிழ்ப் பணியாற்றினார். தம்முடைய 13-ஆம் வயதிலிருந்தே கவிதை எழுதத் தொடங்கிய குழந்தைக் கவிஞர், 60 நூல்கள் எழுதியுள்ளார். தமிழக மற்றும் மத்திய அரசின் பரிசுகள் பெற்ற இவர், தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் பலவேறு பதவிகளை வகித்தவர். 1966-இல் அச் சங்கத் தலைவராக இருந்தார்.

இவர் எழுதிய 'நம் நதிகள்' எனும் தென்னாட்டு ஆறுகளைப் பற்றிய நூல், 14 மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. தெலுங்கில் இவர் பாடல் தொகுப்பும் வெளிவந்துள்ளது.

தென் மொழிகள் புக் டிரஸ்ட்டில் பணியாற்றியவர். மதுரை காமராசர் பல்கலைக் கழகம், 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' பட்டம் வழங்கியுள்ளது.

குழந்தைக் கவிஞர் இறுதியாகப் பணியாற்றிய குழந்தைப் பத்திரிகை 'கோகுலம்'. அதை முழுக்க முழுக்க, குழந்தைகளுக்கென்றே தயாரித்த பெருமை இவரையே சாரும்.

இவர் பலரைப் பற்றி நூல்கள் எழுதி னார். ஆனால், பலர் இவரைப் பற்றி நூல்கள் எழுதிப் பெருமை பெற்றார்கள்.

டாக்டர் பூவண்ணன் எழுதிய 'வள்ளியப்பா வாழ்க்கை வரலாறு,' திரு. கதி. கணேசன் எழுதிய 'குழந்தை இலக்கியத்தில் வள்ளியப்பா ஒரு வழி காட்டி,' திரு. வே. கிருட்டிணசாமி எழுதிய 'குழந்தைக் கவிஞரின் இலக்கியத் திறன்' ஆகியவை குறிப்பிடத்தக்கவை யாகும். சென்னை மற்றும் கேரளப் பல் கலைக் கழகங்களில் இவரது கவிதைகளை ஆய்வு செய்து, டாக்டர் மற்றும் எம்ஃபில் பட்டம் பெற்றுள்ளதையும் இங்குக் குறிப் பிட வேண்டும்.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா வின் பாடல்கள் அவரைப் போலவே எளிமையும், இனிமையும் கொண்டவை; சொல்லும் பொருளும் இணைந்தே வருவன; சந்தம் தேன் சிந்தும் மலராகக் காட்சியளிக்கும். நடை பயிலும் குழந்தை முதல், நரைமுடிக் கிழவர் வரை தட்டுத் தடங்கலின்றி பாடிப்பாடி மகிழலாம். அந்த அளவுக்கு அவரது பாடல்கள் இயல்பாகவே அமைந்திருப்பதுதான் அதற்குக் காரணம்.

கண்ணனைப் பற்றி ஒரு பாட்டு.

'கண்ணன் எங்கள் கண்ணனாம்
கார்மேக வண்ணனாம்.

வெண்ணெய் உண்ட கண்ணனாம்
மண்ணை உண்ட கண்ணனாம்
குழலி னாலே மாடுகள்
கூடச் செய்த கண்ணனாம்'

- என்று கண்ணனின் தன்மைகளைக் கூறிக்கொண்டே போய் இறுதியில்,

'நல்ல வர்க்கே அருளுவான்
நாங்கள் போற்றும் கண்ணனாம்'



- என்று முடிக்கிறார். இறைவன் நல்ல வர்களுக்கு மட்டும்தான் நன்மை செய் வார் என்பதை ஒரே வரியில் அழகாக எடுத்துக் காட்டுகிறார் கவிஞர்.

'நெல்லுக்குள்ளே அரிசி இருக்கு,
சொல்லாதே!
நெருப்புக்குள்ளே சூடு இருக்கு,
சொல்லாதே!
சொல்லுக்குள்ளே பொருள் இருக்கு,
சொல்லாதே!
சோற்றுக்குள்ளே சத்து இருக்கு,
சொல்லாதே!'

- இப்படி கவிதை நீள்கிறது. முடிவில்,

'நாமிப்போது பேசியதை யெல்லாம் நீ
நாலுபேர்கள் காதுகேட்கச் சொல்லாதே!'

- என்று நகைச்சுவையோடு கவிதைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறார்.

மெத்தப் பெரிய கண்ணாடி
வீட்டில் என்னிடம் இருக்கிறது.'

- என்று கண்ணாடியைப் பற்றிய ஒரு பாடலில்,

'கொன்றிடு வேன்' என விரலைநான்
கோபமாய் எதிரே நீட்டிடுவேன்.

'நானும் அப்படித் தான்' என்றே
நன்றாய்த் திருப்பிச் செய்திடுமே!'

- என்று கண்ணாடியின் தன்மையைக் கூறி, இறுதியாக,

'நன்மை செய்தால் நன்மைதான்
நம்மை நாடி வந்திடுமே.
தீமை செய்தால் தீமைதான்
திரும்பி வந்து சேர்ந்திடுமே!'

- என்று குழந்தைகளுக்கு நீதி புகட்டு கிறார். இவ்வாறு கவிஞரின் ஒவ்வொரு பாடலுமே இனிக்கும் கற்கண்டுகளாய்; இதயத்துக்கும் இதமூட்டுபவையாக இருப் பதை நாம் பார்க்கிறோம்.

'தோலை உரித்த பிறகுதான்,
சுளையைத் தின்று பார்க்கலாம்.
ஓட்டை உடைத்த பிறகுதான்,
உள்ளே பருப்பைக் காணலாம்.
உலையில் அரிசி வெந்துதான்,
உண்டு பசியைப் போக்கலாம்.
துணியைத் தைத்த பிறகுதான்,
சொக்காய் போட்டு மகிழலாம்.
எழுத்தைக் கற்ற பிறகுதான்,
ஏட்டைப் படித்து அறியலாம்.
பாடு பட்ட பிறகுதான்
பலனைக் கண்டு மகிழலாம்.'

- என்று உழைப்பின் உயர்வைச் சொல்லாமல் சொல்கிறார்.

மலரைப் பற்றி ஒரு பாடல். மலரின் மணம், வண்டு ரீங்காரம், பூசைக்கு உதவிடும், ஆசையாகச் சூடிக் கொள்ளல் - என்று மலர்களின் மாண்பினைக் கூறி,

'மலர் என உள்ளம் - நமக்கு
மலர வேண்டுமடி,
பலரும் போற்றிடவே - உலகில்
பண்புடன் வாழ்வோமடி.'

- என்று முடிக்கிறார். மலர்ந்த முகம் வேண்டும் என்பதை நாசூக்காகப் பிஞ்சு மனத்தில் பதிய வைக்கும் அழகே அழகு!

படிக்கும் பழக்கம் இளமை முதலே வரவேண்டும், படிப்படியாய் அது வளர வேண்டும். நல்ல நூல்களை வாங்க வேண்டும்; நல்ல நூல்களைத் தேடிப் போக வேண்டும். இப்படியெல்லாம் சொன்னால் அடம் பிடிக்கும் குழந்தை களைக் கவர முடியுமா? அதனால்தான் பாட்டுப்பாடி பக்குவமாய்த் தம் பக்கம் இழுக்கிறார் கவிஞர்.

'தேனி ருக்கும் இடத்தினைத்
தேடி மொய்க்கும் வண்டுபோல்,



சீனி யுள்ள இடத்தினைத்
தேடி ஊரும் எறும்புபோல்,

பழம் நிறைந்த சோலையைப்
பார்த்துச் செல்லும் கிளியேபோல்,
வளம் நிறைந்த நாட்டிலே
வந்து சேரும் மக்கள்போல்,

பள்ள மான இடத்தினைப்
பார்த்துப் பாயும் வெள்ளம்போல்,
நல்ல நல்ல நூல்களை
நாடி நாமும் பயிலுவோம்!'

– 'மனிதனுக்குப் பெருமை எப்போது வருகிறது?' இந்த வினாவுக்கு விடையை ஒரே வரியில் சொல்லிவிடாமல்,

'சோலை மகிமை பெறுவதே
சுகந்த முள்ள மலர்களால்

நாடு மகிமை பெறுவதே
நன்கு பெருகும் வளத்தினால்

நூல்கள் மகிமை பெறுவதே
நுட்ப மான கருத்தினால்.'

– அதைப் போல,

'மனிதன் மகிமை பெறுவதே
மாண்பு மிக்க அறிவினால்!'




– என்று முடிவில் அந்த வினாவுக்குரிய விடையைக் கூறுகிறார். அதனால்தானே பாரதியும் 'அறிவே தெய்வம்' என்றார்!

மனிதனுக்கு அறிவு எவ்வாறு அவசியமோ அதைப்போல, அன்பும் அவனுக்கு அவசியமாகிறது. அதனால்தான் திருவள்ளுவரும் 'அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்?' என்றார். 'அன்பே சிவம்' என்றார் திருமூலர். இப்படி அன்பின் மகத்துவத்தைப் பெரியவர்கள் சொல்லி வைத்தார்கள்.

'இனிப்பில் லாத கரும்பினை
எவரும் விரும்பித் தின்பாரோ?

இசையில் லாத பாட்டினை
எவரும் விரும்பிக் கேட்பாரோ?

மணமில் லாத மலரினை
மகிழ்ந்து எவரும் அணிவாரோ?'

– என்று கேள்விகள் கேட்டுக் கொண்டே போய் அதைப்போல,

'அன்பில் லாத மனிதரை
யார்தான் விரும்பப் போகிறார்!'

– என்று அன்புடன் பதில் கூறுகிறார் கவிஞர். இதை வலியுறுத்தும் இன்னொரு பாடல்தான்,

'பட்டை போடப் போடத்தான்
பளப ளக்கும் வைரமே.

மெருகு கொடுக்கக் கொடுக்கத் தான்
மினுமி னுக்கும் தங்கமே

அரும்பு விரிய விரியத்தான்
அளிக்கும் மணத்தை மலருமே.

அன்பு பெருகப் பெருகத்தான்
அமைதி அடையும் உலகமே!'

– உலக அமைதிக்கு அன்புதான் அடித்தளம் என்பதை அழகாக உணர்த்துகிறார் கவிஞர்.

நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்ட உத்தமர் அண்ணல் காந்தியடிகள், தம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் நாட்டுக்காகத் தத்தம் செய்தவர். அவரது அறிவுரைகள், அனுபவங்கள் எல்லாம் உலக மக்கள் வாழ வழிகாட்டுபவை யாகும். அகிம்சை, வாய்மை இரண்டையும் இரு கண்களாகப் பாவித்து, வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்து ஒழுகியவர். காந்தி வழி வாழ்ந்தால் உலகில் அமைதி ஏற்படும், சண்டை ஒழியும், கருணை வெள்ளம் பெருகும் என்பதனை விளக்கிட,

'காந்தி சொன்ன வழிகளைக்
கடைப் பிடித்து நடந்திடின்,
சாந்தி எங்கும் நிலவிடும்,
சத்தி யந்தான் வென்றிடும்'

– என்று தொடங்கும் பாடலின் இறுதி வடிவமாக, காந்தி வழி சென்றால்,

'உலகில் அமைதி ஏற்படும்;
யுத்தம் யாவும் ஒழிந்திடும்;
கலகம் நீங்கி எங்குமே,
கருணை வெள்ளம் பெருகிடும்'

– என்று நம்பிக்கை தெரிவிக்கின்றார் கவிஞர்.

கதைப் பாடல்கள் (Story Poems) கவிஞருக்குக் கைவந்த கலை. 'குழந்தைக் கவிஞரின் கதைப் பாடல்கள்' என்ற பெயரிலே ஒரு நூல்கூட வெளிவந்துள்ளது. 'மலரும் உள்ளம்' கவிதைத் தொகுதியில் வரும் 'பூனைக் கல்யாணம்' ஒரு நல்ல நகைச்சுவை. 'நல்லவனும் கெட்டவனும்' நமக்கெல்லாம் நல்ல பாடம். கெட்டவன் என்று உடனே பெயரெடுக்கலாம். ஆனால் நல்லவன் என்ற பெயர் பெற நாட்கள் மிக ஆகும் என்று உணர்த்துகிறது இப்பாடல். இப்படி ஏராளமான கதைப் பாடல்கள் எழுதிய கவிஞர், வேடிக்கைப் பாடல்களையும் எழுதியுள்ளார். 'ஒட்டைச் சிவிங்கி' என்பது ஒரு பாடல். அதை 'நடக்கும் ஏணி' என்று வர்ணிக்கிறார் கவிஞர்.

'சிரிக்கும் பூக்கள்' கவிஞரின் மற்றொரு கவிதைத் தொகுப்பு. அருமையான பாடல்கள் இதில் புதைந்துள்ளன. கவிஞரின் எண்ணத்தில் எழுந்த எல்லாப் பாடல்களுமே இதயத்தைக் கவர்வன. எதை எடுப்பது? எதை விடுப்பது?

ஆண்டவன் தந்த கை எதற்கு?

அள்ளிச் சோறு தின்பதற்கு, அழுக்குத் தேய்த்துக் குளிப்பதற்கு, ஆடை ஒழுங்காய் அணிவதற்கு, அழகாய் எழுதிப் படிப்பதற்கு, அனுதினம் வேலை செய்வதற்கு என்று சொல்லிக் கொண்டே போய், அனைவருக்கும் உதவி செய்வதற்கு என்று கோடிட்டுக் காட்டும் கவிஞர்,







# திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் விமானம் மூலம் விதை தூவும் பணி

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் நத்தம், அழகர்கோவில், கன்னிவாடி காப்புக் காட்டுப் பகுதிகளில் 25 ஆயிரம் எக்டேர் காடுகள் வன வளம் இழந்து இருந்தது. இந்த வன வளம் இழந்த பகுதிகளில் மீண்டும் காடுகளை வளர்க்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் மத்திய அரசின் தரிசு மேம்பாட்டு வாரியம் விமானம் மூலம் விதை தூவும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

இம்மாவட்டத்தில் 1989-ஆம் ஆண்டு முதல் ஒட்டன்சத்திரம், கன்னிவாடி, சிறுமலை, வத்தலக் குண்டு பகுதிகளில் கடந்த நான்கு ஆண்டுகளாக 11 ஆயிரம் எக்டேரில் விமானம் மூலம் விதை தூவப்பட்டுள்ளது. இவ்விதை தூவப்பட்ட பகுதி களில் மரங்கள் முளைத்து நல்ல பயன் கொடுத்து வருகின்றன.

எனவே, இந்த ஆண்டும் பருவமழை தொடங் கிய இந்நேரத்தில் 3 ஆயிரத்து 500 எக்டேரில் விமானம் மூலம் விதை தூவப்பட்டுள்ளது. ஒரு எக்டேரில் விமானம் மூலம் விதை தூவ சுமார் ரூ.650 செலவு செய்யப்படுகிறது. ஒரு எக்டேரில் மருந்து பூசப்பட்ட 10 கிலோ விதை தூவப் படுகிறது. இதற்காகச் சுமார் ரூ.23 இலட்சம் இந்த ஆண்டு செலவு செய்யப்பட்டுள்ளது.

மூங்கில், புளி, வேம்பு, உடை, முள் மரங்கள் போன்ற 17 வகையான மர விதைகள் தூவப் பட்டுள்ளன. இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் இந்த ஆண்டு 13 கோட்டங்களாகப் பிரிக்கப் பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த 13 கோட்டங்களில் திண்டுக்கல்-அண்ணா மாவட்டக் கோட்டத்தில் தான் அதிக நிலப்பரப்பு 3,500 எக்டேர் பரப்பில் விதை தூவப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு இம்மாவட்டத்தில் நத்தம், அழகர்கோவில், கன்னிவாடி ஆகிய காப்புக் காட்டுப் பகுதிகளில் விமானம் மூலம் விதை தூவப்பட்டுள்ளது.

- எம். பிச்சையா
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்

ஆண்டவன் தந்த கை எதற்கு? அவரை
நன்றாய்த் தொழுவதற்கு

என்று முடிக்கிறார். இறைவனை இரு கை கூப்பி வணங்க வேண்டும் என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார்.

'கோடி கோடி பேர்கள் என்றன்
கூடப் பிறந்தவர்
குமரி முதலாய் இமயம் வரையில்
வாழ்ந்து வருபவர்'

– என்று தொடங்கும் 'கூடப் பிறந்தவர்' பாட்டு, ஒருமைப்பாட்டை உணர்த்தும் ஓர் உன்னதப் பாடல்.

சிறுவர்க்கான பத்திரிகைகளாகட்டும், புத்தகங்களாகட்டும் அவை படங்களோடு வெளிவர வேண்டும். வெறும் எழுத் துக்கள் அடைத்துக் கொண்டிருந்தால் வெறுப்பைத் தான் தரும். ஒரு சிறுவர் பத்திரிகை எப்படி இருக்க வேண்டும் என்று, சிறுவர் பத்திரிகை பலவற்றை நடத்திய குழந்தைக் கவிஞர் கூறுவதுதான் பொருத்தமானதாக இருக்கும். அவர் கூறுகிறார்:

'சிறுவருக் கான பத்திரி கைகள்
நிறைய வேண்டும்
சித்திரம் எல்லாப் பக்கங் களிலும்
திகழ வேண்டும்
அருமை யான கதையும் பாட்டும்
இருக்க வேண்டும்
அறிவைப் புகட்டும் கட்டுரை பலவும்
அமைய வேண்டும்'

– கவிஞரின் ஆசையை நிறைவேற்றுவது நம் கடமை!

மத்திய அரசின் பரிசு பெற்ற 'பாட்டிலே காந்தி' முழுவதும் கவிதை வடிவம் கொண்டது. பொதுவாக, குழந்தைக் கவிஞரின் புத்தகங்கள் என்றால் அதில் படங்கள் நிறைய இருக்கும். அதைப்போல இந்தப் புத்தகத் திலும் படங்களுக்குக் குறைவில்லை.

காந்தி பிறந்த நாளைக் குறிப்பிடு கையில்,

'சத்தியமே குழந்தையாக
வந்து தித்த நாள்!'

என்கிறார். அவரது மறைவைக் குறிக்கும்போது,

'அறவழி காட்டிய பேரொளியை,
அன்பு வடிவாம் மாமணியை,
குறளிலே கூறிய பண்பனைத்தும்
கொண்டவர் தம்மைக் கொன்றுவிட்டான்!'

—என்று கண்ணீர் சிந்துகிறார்.

குழந்தைக் கவிஞரின் பாடல்கள் குழந்தைகளின் உள்ளத்திலே நல்ல பண்புகளைப் பதிய வைத்தன. நாட்டுப் பற்று, மொழிப்பற்று, அன்பு, அடக்கம், அறிவு முதலான நற்பண்புகள் வளர வழி வகுத்தன. எல்லாவற்றுக்கும் மேலாக, குழந்தைகள் மகிழ்ச்சியோடு ஆடிப்பாட அவை உதவின. பெரியவர்கள்கூட அவர் பாடல்களைக் குழந்தைகளைப் போலப் பாடினார்கள். தம் பிள்ளைகளை 'இப்படித் தான் வளர்க்க வேண்டும்' என்றும் – அந்தப் பாடல்கள் வாயிலாக அவர்கள் கற்றுக் கொண்டார்கள். அதுவே அவருக்குத் தாம் மேற்கொண்ட பணிக்குக் கிடைத்த வெற்றிதானே!

- பி.வி. கிரி



# டாக்டர் புரட்சித் தலைவி பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

**பெ**ண்கள் முன்னேற்றம் மற்றும் பெண் குழந்தைகளின் பாதுகாப்பு ஆகியவற்றைத் தலையாய நோக்கமாகக் கொண்டு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், ''டாக்டர் புரட்சித்தலைவி பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தை''ச் செயல் படுத்த ஆணையிட்டுள்ளார்.

வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பத்தைச் சேர்ந்த பெண் குழந்தைகள் இந்தத் திட்டத்தின் கீழ் பயனடைவார்கள். ஆண் குழந்தைகள் இல்லாமல் ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே பெற்று, பெற்றோர்களில் ஒருவர் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட குடும்பங்களில் உள்ள பெண் குழந்தைகளில் ஒருவர், இத்திட்டத்தினால் பயனடைவார்.

இத்திட்டத்தில் பயன்பெறும் குடும்பத்தில் ஒரு பெண் குழந்தையின் பெயரில் தமிழக அரசின் சார்பில் 2,000 ரூபாய் முதலீடு செய்யப்படும். அப்பெண் குழந்தையின் முதல் பிறந்த நாளன்று 250 ரூபாயும், பள்ளியில் சேரும்போது 250 ரூபாயும், ஆறாம் வகுப்பிற்குச் செல்லும்போது 500 ரூபாயும் அரசு அந்தப் பெண் குழந்தைக்கு வழங்கும்.

மேலும் 9, 10, +1, +2 வகுப்புகளில் படிக்கும் போது, ஆண்டில் பத்து மாதங்களுக்கு, மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய் வீதம் கல்வி உதவித்தொகை அளிக்கப்படும். பெண் குழந்தை 20 வயதை அடையும்போது, அப்பெண்ணின் திருமணத்திற்கு அல்லது மேல்படிப்புக்கு 10,000 ரூபாய் மொத்தமாக அளிக்கப்படும்.

இந்த மாபெரும் திட்டத்தினால் ஆண்டொன்றுக்கு 20,000 ஏழைப் பெண் குழந்தைகள் ஒளிமயமான எதிர்காலத்தைப் பெறுவார்கள்.

## வேண்டாத பெண் குழந்தைகளை அரசே வளர்க்கும்

கருவில் இருக்கும் பெண் குழந்தைகள் கொல்லப்படுவதைத் தடுக்க தமிழக அரசு புதிய திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது. இதன்படி, பெண்குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை அரசே ஏற்றுக் கொள்ளும்.

கருவில் இருப்பது பெண் குழந்தை என்று தெரிந்தால் சிலர் அக்குழந்தையைக் கருவிலேயே அழித்து விடுகின்றனர். இந்தக்கொடியபழக்கத்தை முழுமையாக ஒழித்துவிட, தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பிறந்த பெண் குழந்தையைவேண்டாமென்று நினைக்கும் பெற்றோர்கள் அக்குழந்தையைச் சமூக நலத்துறை நடத்தும் நல இல்லங்களில் ஒப்படைத்தால், அக்குழந்தையை வளர்க்கும் பொறுப்பை அரசே ஏற்றுக் கொள்ளும். இந்தத் திட்டத்துக்கு 'கில்ட் ஆப் சர்வீஸ்' அமைப்பும் ஒத்துழைப்புத் தரும்.

கர்ப்பிணிப் பெண்ணின் கருவில் இருப்பது பெண் குழந்தைதான் என்று மருத்துவப் பரிசோதனைக்குப் பிறகு தெரியவந்தால், அப்பெண்ணைக் கொடுமைப்படுத்துவதாகவும்,

இந்தக் கொடுமை தாங்காமல், சிலர் தற்கொலை செய்து கொண்டதாகவும் அடிக்கடி செய்திகள் வெளியாகின்றன. இத்தகைய பெண்களின் துயரைத் தீர்க்கவும், அந்தப் பெண்களுக்கு வாழ்வளிக்கவும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஒரு உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இதன்படி, மருத்துவப் பரிசோதனைக்கு பிறகு கருவில் இருப்பது பெண் குழந்தை என்று தெரிய வந்தால் அந்த கர்ப்பத்தைக் கலைக்க யாரும் முயற்சி செய்ய வேண்டாம். அப்படிப்பட்ட தாய்மார்கள் நேரடியாக சேலம், உசிலம்பட்டி ஆகிய இடங்களில் உள்ள சமூக நலத்துறை நடத்தும் இல்லங்களுக்கு (விடுதி) வந்து விடலாம். அவர்கள் பிரசவம் முடியும்வரை அவர்களைப் பராமரிக்கும் பொறுப்பை சமூக நலத்துறையும், 'கில்டு ஆர் சர்வீஸ்' அமைப்பும் ஏற்றுக் கொள்ளும். குழந்தை பிறந்த பின்பு அந்த குழந்தையை விடுதி நிர்வாகத்திடம் தந்துவிட்டு அந்த பெண் தன்னுடைய வீட்டுக்குச் சென்று விடலாம். அந்தப் பெண் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை அரசே ஏற்றுக் கொள்ளும்.

நமது மாநிலத்தில் சேலம் மாவட்டத்தில் பிறக்கும் பெண் குழந்தைகளைக் கொன்றுவிடும் நிலை அதிகமாகக் காணப்படுவதால் அதைத் தடுக்க புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த மாவட்டத்தில் பெண் சிசுக்கள் அதிகமாகக் கொல்லப்படும் பகுதிகளிலுள்ள 6 குழந்தைகள் நல மையங்களின் வெளியே தொட்டில்கள் கட்டப்பட்டிருக்கும். தங்களுக்கு பிறந்த பெண் குழந்தையை வேண்டாம் என்று நினைக்கும் பெற்றோர்கள், அக்குழந்தையை அந்த தொட்டில்களில் போட்டுவிட்டு சென்றுவிடலாம். இதுபோன்று தொட்டில்களில் போடப்படும் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை அரசே ஏற்று நடத்தும்.

சமூக நலத்துறை, 'கில்ட் ஆப் சர்வீஸ்' ஆகியவை இணைந்து மேற்கொள்ளும் இத்திட்டங்கள் பெண் குழந்தைகள் கொலை அதிக அளவில் நடக்கும் சேலம், உசிலம்பட்டி பகுதிகளில் அமல்படுத்தப்படும். மற்ற இடங்களை சேர்ந்தவர்களும் இங்குள்ள விடுதிகளுக்கு வர அனுமதிக்கபடுவர்.

இந்தத் தகவலை, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் புலவர் இந்திர குமாரி அவர்கள் அண்மையில் சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## பெண் சிசுக் கொலையைத் தடுக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை

சேலம் மாவட்டத்தில் சில வட்டாரங்களில் அண்மைக் காலமாக, பெண் சிசுக் கொலைகள் அதிக அளவில் நடைபெற்று வருவது மத்திய, மாநில அரசுகளைக் கவலைக்குள்ளாக்கியிருக்கிறது. இந்தப் போக்கைத் தடுக்க மத்திய-மாநில அரசுகள் கூட்டாக ஒரு தற்காலிகத் திட்டத்தைத் தயாரித்திருக்கின்றன. இந்த மாவட்டத்தில் ஐந்து வட்டாரங்களில் பெண்சிசுக்கொலைகள் பரவலாக நடைபெறுவதை உறுதி செய்த பிறகே இந்தத் தற்காலிகததிட்டம் தயாரிக்கப்பட்டது.

இதன்படி, 11 அம்ச திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, இதை மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையும் தமிழ்நாடு அரசும் இணைந்து செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

பெண்களின் உரிமைகள், அந்தஸ்து குறித்து மக்கள் தொடர்புச் சாதனங்கள் மற்றும் பொது மக்கள் சந்திப்பு மூலம் பொதுமக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல், சேலம் மாவட்டத்தில் பெண் சிசுக் கொலைகள் அதிகமாக நடைபெறும் பகுதிகளில் பெண்களுக்குக் கல்வி மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல், மத்திய அரசு நிதியுதவியுடன் மாநில அரசு இந்த மாவட்டம் முழுமைக்கும் வேலை வாய்ப்பினைப் பெருக்குதல் போன்றவை இந்தத் திட்டத்தில் அடங்கும்.

குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தை சேலம் மாவட்டம் முழுமைக்கும் விரிவுபடுத்துதல், குழந்தைகள் பாதுகாப்பு இல்லங்களை அமைத்தால், இம்மாவட்டத்தில் வேலை வாய்ப்பினைப் பெருக்குதல் போன்ற நடவடிக்கைகளைத் தமிழக அரசு ஏற்கெனவே தொடங்கியிருப்பதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை செயலர் அண்மையில் புதுடெல்லியில் செய்தியாளர்கள் கூட்டத்தில் தெரிவித்தார்.

### பெண் சிசுவை அழித்து விடாதீர்கள்!

கருவில் வளரும் குழந்தை பெண் என்று அறிந்து அதனை வேண்டாமென்று எண்ணும் பெற்றோர்கள், தயவுசெய்து அந்தச் சிசுவை அழித்து விடாதீர்கள். அவர்களை வளர்த்துக் காக்க எங்கள் அரசு இருக்கிறது.

''உங்களுக்கு வேண்டாத அந்தப் பெண் குழந்தை அரசுக்கு வேண்டும். தமிழகத்துக்கு வேண்டும். ஏனெனில் தாயாக ஒரு பெண் வேண்டும். தாரமாக ஒரு பெண் வேண்டும். பெண் குழந்தை வேண்டாமென்றாலும் நல்லதொரு சமுதாயத்தை நாளை உருவாக்க, அவர்கள் எங்களுக்குத் தேவை. இந்நாட்டுக்குத் தேவை. எனவே, அவர்களை ஏற்று, வளர்த்து, காக்கும் பொறுப்பை அரசே ஏற்று கொண்டுள்ளது.

''பெண் சிசுக்களின் பெருங்கொலை என்பது நாகரீகத்தின் சீரழிவு, பண்பாட்டுப் படுகொலை, தர்மத்தின் பேரழிவு. எனவேதான், மனிதாபிமான கண்ணோட்டத்தில் நான் இந்தப் புதிய முயற்சியில் ஈடுபட்டுள்ளேன்''.

-21.10.92 அன்று சிவகங்கையில் நடந்த ரூ.62 கோடி நலத்திட்ட அடிக்கல் நாட்டு விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பேசிய உரையிலிருந்து.



# சாதனைகள் புரியும் தமிழ்நாடு காவல் துறை

**மா**ண்புமிகு முதல்வர் அவர்களின் கொள் கைக்கிணங்க, 1991 ஜூலைத் திங்கள் முதல் 1992 ஜூன் வரையிலான ஓராண்டுக் காலத்தில் அனைத்து வகையிலும் தமிழ்நாடு காவல் துறை யினரின் திறமைக்குத் திருப்தியளிக்கக்கூடிய வகையில் மகத்தான வெற்றியைத் தந்த காலமாக அமைந்திருந்தது.

தமிழ்நாடு காவல்துறை ஒவ்வொரு பிரிவிலும் சிறப்பான சாதனைகளைப் புரிந்திருக்கிறது. முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் படுகொலைக்குக் காரணமாக விளங் கிய வெளிநாட்டுத் தீவிரவாதிகளின் பயங்கர வாதத் திட்டங்கள் ஒடுக்கப்பட்டு, தமிழகம் இன்று பாதுகாப்பு நிலவுகின்ற அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது. மிகவும் பரபரப் பான சிக்கலான வழக்குகளும் மிகச் சுலபமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

## சட்டம் ஒழுங்கு நிலைமை

தமிழ்நாட்டில் நடந்த மிகப் பெரிய துயரமான தொரு தருணத்தில், மாண்புமிகு புரட்சித்தலைவி யின் அரசு பதவியேற்றது. பொதுமக்களின் மனதில் நியாயமானதொரு பயம் ஏற்பட்டிருந் ததைப் போக்குவது தலையாய கடமை என்று கருதிய, மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கும் மாநிலக் காவல் துறையினர் எடுத்த நடவடிக்கை மிகுபயன் தந்தது.

நமது கடல் எல்லையோரப் பகுதியைத் தீவிர மாகக் கண்காணித்த காவல் துறையினர் 150 விடுதலைப் புலிகளையும், அவர்களது பற்றாளர் களையும் கைது செய்ததோடு, ஏ.கே.47 தானியங் கித் துப்பாக்கிகளையும் மற்றும் 146 வகையான பயங்கர ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும் ரகசியமாகப் பயன்படுத்தி வந்த தகவல் தொடர்புச் சாதனங்களையும், வண்டிகளையும், படகுகளை யும் மற்றும் போலி ஆவணங்களையும் கைப் பற்றினர்.

எரிபொருள் மற்றும் மருந்துகளைக் கடத்தி வந்த தடங்கள் வெற்றிகரமாக மூடப்பட்டது, போராளிகளுக்குப் பெருத்த அடியாக அமைந்தது. பதிவு செய்து கொள்ளாத இலங்கைத் தமிழர்கள் அகற்றப்பட்டு, பல்வேறு மாவட்டங்களிலுள்ள சிறப்பு முகாம்களில் சேர்க்கப்பட்டனர். அவர் களுக்கு மறுவாழ்வளிக்கின்ற பணியும் தொடர்ந்து

# சென்னையில் மேலும் இரண்டு இடங்களில் மகளிர் காவல் நிலையங்கள் தொடங்கப்படும்!

## —முதல்வர் அறிவிப்பு

காவல் துறையின் பணிகளை ஆய்வு செய்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், கிராமப்புற மக்கள், காவல் துறை மேல் அதிகாரிகளைச் சந்திக்க வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தர வேண்டும் என்றும், காவல் துறை மேல் அதிகாரிகள் பொதுமக்களை, சில குறிப்பிட்ட நாட்களில் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டு, நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக, மக்கள் குறை தீர்க்கும் நாளைக் காவல் துறை நடத்த ஆணையிட்டுள்ளார்.

இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் (Superintendent of Police) ஒரு குறிப்பிட்ட உட்கோட்ட (Sub-Division) தலைமையிடத்திற்குச் சுழல் முறையில் சென்று, அங்கு பொதுமக்களைச் சந்தித்து மனுக்களைப் பெற்று, நேரில் அவர்களின் குறைகளைக் கேட்டு, அவற்றை தீர்க்க உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்வார்கள்.

அந்த இடத்திலேயே தீர்வு காணக் கூடிய பிரச்சினைகளுக்கு அங்கேயே முடிவு எடுக்கப்படும். இதர மனுக்கள் விசாரிக்கப்பட்டு 15 தினங்களுக்குள் மனுதாரருக்குப் பதில் அனுப்பப்படும்.

மேலும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், காவல்துறை மேல் அதிகாரிகளான காவல் துறை இயக்குநர் மற்றும் இணை இயக்குநர்கள் மாநிலத்திலுள்ள பல்வேறு காவல் நிலையங்களுக்கும் முன்னறிவிப்பின்றி திடீர் சோதனை செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

சில மாதங்களுக்கு முன்பு சென்னை நகரில் தொடங்கப்பட்ட 'அனைத்து மகளிர் காவல் நிலையம்', மகளிர் மத்தியில் நல்ல வரவேற்பினை ஏற்படுத்தியிருக்கின்ற காரணத்தினால், சென்னையில் மேலும் இரண்டு இடங்களில், வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில், அனைத்து மகளிர் காவல் நிலையங்களை ஏற்படுத்தவும் ஒவ்வொரு காவல் மாவட்டத் தலைமையிடங்களில் ஒரு 'அனைத்து மகளிர் காவல் நிலையம்' அமைக்க வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

---

நடைபெற்று வருகின்றது. காவல் துறையினரின் கடுமையான நடவடிக்கையால் விடுதலைப்புலிகளின் முதுகெலும்பு முறிக்கப்பட்டுவிட்டதோடு, அவர்களின் ஆதரவாளர்களும் செயலிழந்து விட்டார்கள் என்பதை உறுதியாகக் கூறமுடியும்.

### ஆயுதப்படைக் காவல்பிரிவின் பாராட்டத்தகு பணி

இந்த ஆண்டில் கடலோரப் பகுதிகளில், போராளிகள், அவர்களுடைய ஆதரவாளர்களின் நடவடிக்கைகளைத் துப்பாக்கி ஏந்திய 10 கம்பெனிக் காவலர்கள் கண்காணிக்க ஈடுபடுத்தப்பட்டார்கள். முக்கியமான 34 இடங்களில் கண்காணிப்புச் சுங்கச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு, வாகனங்கள் செல்லமுடியாத மீன்பிடிக்கின்ற கிராமங்களிலும், காவலர்கள் கால்நடையாகச் சென்று, போராளிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கின்ற பணியை மேற்கொண்டு வருகிறார்கள்.

### அரசியல் கட்சியின் போராட்டங்கள்

தமிழ்நாட்டில் நடைபெற்ற பல்வேறு அரசியல் கட்சிப் போராட்டங்கள் மிகவும் சாமர்த்தியமாக, புத்திக் கூர்மைச் செயலோடு, எத்தகு குற்றச் சாட்டோ, பிரச்சினைகளோ, அசம்பாவிதங்களோ எழாத வண்ணம் சமாளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### குற்றங்கள்

கொலைக் குற்றங்களைக் கணக்கிடுகின்ற போது 1990-இல் 1,654 கொலைகளும், 1991-இல் 1,624 கொலைகளும் நடந்துள்ளன. திருட்டுத் தொடர்பான குற்றங்கள் 1.1.91 முதல் 30.9.91 வரையில் 26,609 குற்றங்களும், 1.1.92 முதல் 30.9.92 வரையில் 25,609 குற்றங்களும் நடந்துள்ளன.

அ) தருமபுரி மாவட்ட பெண்ணாகரத்தில் நடைபெற்ற வங்கிக் கொள்ளை முயற்சியில் சம்பந்தப்பட்ட வீரப்பன் கூட்டத்தைச் சேர்ந்த 8 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஆ) ரூ.50,000 தராவிட்டால் குழந்தை நட்சத்திரம் ஷாமிலியைக் கொலை செய்து விடுவதாக மிரட்டிய 19 வயது இளைஞன் திருப்பூர் அருகில் கைது செய்யப்பட்டான்.

இ) அவினாசி தேவராயம்பாளையத்தைச் சேர்ந்த ஈஸ்வரமூர்த்தியிடமிருந்து ஏராளமான எரிசாராயம், 11 ஊர்திகள், 100 ஜில்லட்டின் குச்சிகள் மற்றும் ரூ.14,09,150 ரொக்கமும் கைப்பற்றப்பட்டன.

ஈ) சேலத்தில் அங்கீகாரம் பெறாத ஒரு நிதி நிறுவனத்தைச் ,சார்ந்த 72 பேரைக் கைது செய்து ரூ.1,53,92,118 கைப்பற்றப்பட்டது.

போதை மருந்துகளைப் பொறுத்தவரை 675 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 57,325 கிலோ எடையுள்ள ரூ.11,57,64,440 மதிப்புள்ள கஞ்சா கைப்பற்றப்பட்டது.

### அத்தியாவசியப் பண்டங்கள் விநியோகக் கண்காணிப்புப் பணி

பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பண்டங்கள் அரிசி, கோதுமை, சமையல் எண்ணெய்,

சர்க்கரை, மண்ணெண்ணெய் ஆகியவற்றைப் பதுக்கியும், கடத்தியும் உணவுப் பொருள்களில் கலப்படம் செய்தும், பொதுமக்களுக்கு அல்லல்களை உருவாக்குகின்றவர்களைக் கண்டுபிடித்து பொருட்களைக் கைப்பற்றுவதோடு இத்தகு செயல்களைச் செய்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கின்ற பணியை உணவுப் பொருள் விநியோகக் கண்காணிப்புக் காவல்துறை பாராட்டத்தக்க வகையில் மேற்கொண்டு வருகிறது.

இக்கண்காணிப்புக் காவல் பிரிவு மாநிலம் முழுவதும் 5,900 திடீர் சோதனைகளை நடத்தி 4,290 குற்றங்களைக் கண்டுபிடித்திருக்கிறது. இதில், 509 பதுக்கல் குற்றங்கள், 842 கடத்தல் குற்றங்கள், 931 உணவுப் பொருள்கள் கலப்படக் குற்றங்கள் அடங்கும். 501 வாகனங்கள் கைப்பற்றப்பட்டதோடு 513 பேர் கைது செய்யப்பட்டனர். 2,22,83,047 ரூபாய் மதிப்புள்ள அத்தியாவசியப் பண்டங்கள் கைப்பற்றப்பட்டன. இதில் ரூ.77,25,969 மதிப்புள்ள அரிசியும், ரூ.48,06,323 மதிப்புள்ள நெல்லும் அடங்கும்.

## வனப்பாதுகாப்பு


வனச் சொத்தைப் பாதுகாக்க வனப்பாதுகாப்புக் கண்காணிப்புக் காவல் பிரிவு மகத்தான பணியை ஆற்றிக்கொண்டுள்ளது. கடந்த ஆண்டில் 96 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ.63,50,456 மதிப்புள்ள சந்தன மரங்களும், ரூ.5,63,956 மதிப்புள்ள பிற மரங்களும் கைப்பற்றப்பட்டன.

## மதுவிலக்குக் கண்காணிப்பு

தமிழகத்தில் மதுவிலக்குக் கொள்கை தீவிரமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருவதையொட்டி, மதுவிலக்குக் கொள்கையை நிறைவேற்றிடவும், திருட்டுத்தனமாக மதுவினைக் காய்ச்சி விற்பவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள மதுவிலக்குக் கண்காணிப்புக் காவல் பிரிவு அயராத பணியை மேற்கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டில் தமிழகம் முழுவதும் திடீர்ச் சோதனையை நடத்தி 4,05,728 குற்றங்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 1,59,77,931 லிட்டர் ஊறல் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது. மேலும், 35,08,932 லிட்டர் சாராயம் 1,80,008 லிட்டர் எரிசாராயம் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

## போக்குவரத்துக் கண்காணிப்பு

சாலைப் போக்குவரத்து விதிகள் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டைக் காட்டிலும்



1,85,567 வாகனங்கள் கூடுதலாகச் சாலைகளில் போக்குவரத்திற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

## நிர்வாகச் சீரமைப்பு

இந்த அரசு பதவியேற்ற நேரத்தில் மிகுந்த நிதிநிலை நெருக்கடி இருந்தது. இருப்பினும், காவல்துறையின் மனித ஆற்றலை மேம்படுத்தவும், காவல் துறையை நவீனப்படுத்தவும் தமிழக அரசு முனைப்போடு செயல்பட்டது. 1992-93-ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் சென்ற ஆண்டை விட 9 சதவிகிதம் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இப்பிரிவின் சிறப்புப்பாதுகாப்புக் குழு (Special Security Group) பிரபலமானவர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒரு டி.ஐ.ஜி.யின் தலைமையின் கீழ் இயங்கும் இப்பிரிவில் அறிவாற்றல் மிக்க இளைய அலுவலர்கள் 90 பேரும், 250 நபர்களும் மிகக்குறுகிய காலத்தில் மிகச் சிறப்பான பயிற்சிகளைப் பெற்று பாதுகாப்புத் தகுதிகளை முழுவதுமாக அறிந்து பணியாற்றுகிறார்கள்.

தமிழகத்திலுள்ள 1,075 காவல் நிலையங்களுக்கும் ஒரு காவல் நிலையத்திற்கு ஒரு ஜீப் என்கிற வகையில் வழங்க தமிழக அரசு முடிவு செய்து இதுகாறும் 331 வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன. தற்போது காவல்துறையில் 3,980 வாகனங்கள் உள்ளன.

## மகளிர் பாதுகாப்பு

ஆண்களைவிடப் பெண்களுக்கு மிகுந்த பாதுகாப்பு தேவைப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு ஆயிரம் விளக்கில் முழுவதும் பெண் காவலர்களே பணிபுரிகின்ற காவல் நிலையம் தோற்றுவிக்கப்பட்டு மிகச் சிறப்பாகப் பணி

**வலிமை என்பது என்ன?**

வலிமை என்பது அசைக்க முடியாத மன உறுதியிலிருந்து வருகிறது. மனத்தின் தூய்மை அதிகம் இருந்தால், நமது வலிமையும் அதிகமாக இருக்கும்.

—அண்ணல் காந்தியடிகள்

யாற்றிக் கொண்டிருக்கிறது. பெண் காவலர்களின் பணி மிகவும் தேவைப்பட்டதாகக் கருதப்படுவதால், அவர்களைக் காவல்துறையில் பயன்படுத்திக் கொள்வதில் மிகுந்த அக்கறை காட்டப்பட்டு வருகிறது. பணியிலுள்ள பெண்காவலர்கள் பயன்படுத்துவதற்கான சீருடைகள் தைத்துத் தரப்பட்டுள்ளன.

### காவல்துறையினருக்கு உதவி

சமுதாயத்தில் ஏற்படும் வன்முறைகள், குற்றங்களிலிருந்து பொதுமக்களைக் காப்பாற்றுகின்ற மகத்தான பணியைக் காவல்துறையினர் மேற்கொண்டுள்ளனர். அத்தகைய காவல்துறையில் பணிபுரிகின்றவர்களின் நலனை அரசு மிகுந்த அக்கறையோடு பரிசீலித்து செயல்படுத்திக் கொண்டு உள்ளது. 50 ஆண்டுகளுக்கு முன்பு காவல் பணியிலிருந்து இறந்து போன கும்பகோணத்தைச் சேர்ந்த ஆய்வாளரின் மனைவிக்கு ஒய்வூதிய தொகையை 15 நாட்களுக்குள், பரிசீலித்து மாண்புமிகு முதல்வர் நேரில் வழங்கியது நினைவு கூரத்தக்கதாகும்.

பணிபுரியும் காலத்தில் மரணமடையும் காவல் துறையினருக்கு வழங்கப்படுகின்ற உதவித் தொகை ரூ.10 ஆயிரத்திலிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இது தவிர, இறந்துபோன நபர் வாங்கிய கடைசிச் சம்பளத்தொகை, அவர் உயிரோடிருந்தால் ஓய்வுபெறும் நாள் வரை கணக்கிட்டு அவரது குடும்பத்தாருக்கு வழங்கப்படும். அதைப்போல பணிக்காலத்தில் நிரந்தர இழப்புகளைப் பெற்றவருக்கும், படுகாயமடைந்தவர்களுக்கும் வழங்கப்படும் உதவித்தாகை ரூ.5,000-லிருந்து ரூ.20,000-மாகவும், ரூ.3,000-லிருந்து ரூ.5,000 மாகவும் வழங்கப்படவுள்ளது.

காவல்துறையினரின் நல உதவிக்கு (Police Benevolent Fund) அரசு வழங்கும் உதவித்தொகை ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. காவல் துறையினருக்கு வழங்கப்படும் அரிசி, கோதுமை, சர்க்கரை, மாவு, பாமாயில் ஆகிய அத்தியாவசிய உணவுப் பண்டங்கள் பாதி விலையில் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. காவல் துறையினரின் வீட்டுவசதி நிறுவனம் 27.11.91 முதல் வீடு கட்டுகின்ற பணியை மேற்கொண்டிருக்கிறது.

**(மாண்புமிகு முதல்வர் அவர்கள் 14.10.1992 அன்று நடத்திய காவல்துறை ஆய்வுக் கூட்டத்தில் கொடுக்கப்பட்ட தகவல் தொகுப்பு).**

## செம்பாக்கத்தில் சீரிய பணிகள்!

**டா**க்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழக முதல்வராக இருந்தபோது தான், 'ரோட்டரி சங்கம்' (Rotary Club) போன்ற அமைப்புகளில்- மக்கள் நலத் திட்டங்களைப் பரவலாக நிறைவேற்றும் பொருட்டு இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களும்- (I.A.S. Officers) பங்கேற்க அனுமதிக்கப்பட்டது.

தமிழகமெங்கும் அவ்வமைப்பினர் நல்ல வண்ணம் செயல்பட்டு வருகின்றனர். அண்மையில், சென்னையை அடுத்துள்ள செம்பாக்கம் கிராமத்தில் (19.9.92) நடைபெற்றது ரோட்டரி சங்கத்தாரின் ஒரு சிறப்பான நிகழ்ச்சி. இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களான திரு. வி. சுந்தரம் (அரசுச் செயலர், பொதுப்பணித் துறை)- திரு. சி.என். ராம்தாஸ் (முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர்) ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.

காமராஜபுரம் குடியிருப்புப் பகுதிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில், ராஜகீழ்ப்பாக்கம்- ஆலவட்டம்மன் கோயில் அருகே ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைத்து, அதில் 5HP சப்மர்ஷன் மின் மோட்டார் பொருத்தி குடிநீர் வழங்கும் ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டம் துவக்கி வைக்கப்பட்டது.

அதேபோல, சிவகாமிநகர் பகுதியில், சென்னை ரோட்டரி சங்கத்தார் அன்பளிப்பாக வழங்கிய மேனிலை நீர்த் தேக்கத் தொட்டியிலிருந்து 'பைப் லைன்' அமைத்து- அப்பகுதிக்குக் குடிநீர் வழங்கும் ரூ.50 ஆயிரம் மதிப்பீட்டிலான திட்டம் துவக்கி வைக்கப்பட்டது.

சென்னை ரோட்டரி சங்கத் தலைவர் திரு. எஸ். கிருஷ்ணன் வரவேற்புரையோடு- தொடங்கிய இக்கூட்டத்தில்- தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.எம். கிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. சி.சுப்பிரமணியம்- மற்றும் திருமதி இந்திரா சுப்ரமணியம், திருமதி எலிசபெத், பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி மணிமேகலை, திரு. ஆர்.பி. ரங்கநாதன் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசினார்கள்.

திரு.எம்.பாலாஜி நன்றி கூறினார்.

கிராம மக்கள் சிலருக்கு இந்நிகழ்ச்சியின் போது புகையா அடுப்புகள் வழங்கப்பட்டன.

—பி.எல்.ஆர்.

# பல்கலைப் புலவர் கா.சு. பிள்ளை

- காஞ்சி சுந்தரம்



திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலி என்று திருஞான சம்பந்தரால் புகழ்ந்து பாடப்பெற்ற பதியாம் திருநெல்வேலியின் மேற்கே, திருக்குற்றாலத்துக்கு வடக்கே சங்கரனாயனார் கோயிலுக்குப் போகும் சாலைகள் பிரியும் இடத்தில், தொண்டர்கள் நாயினார் கோயில் உள்ளது. அதற்கு மிக அண்மையில் உள்ளது 'புட்டாபரத்தியம்மன்' கோயில். அந்தக் கோயிலை அடுத்துள்ள தெரு புட்டாபுரத்தியம்மன் கோயில் தெருவாகும். அங்கே பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் 'பி.ஏ. பிள்ளை' என்னும் பெரியார் வாழ்ந்திருந்தார்.

அவருடைய இயற்பெயர் காந்திமதிநாதப் பிள்ளை. பட்டம் பெற்ற பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே பணியாற்றி வந்தார். அவரது துணைவியார் மீனாட்சி. இவர்களது மகவுதான், கா.சு. பிள்ளை என்று அழைக்கப்பெற்ற கா. சுப்பிரமணிய பிள்ளை.

திருநெல்வேலிக்கு மேற்கே இருப்பது சி.எம். கல்லூரி. இக்கல்லூரிக்கு, மேற்குக் கிளை என்றும் கிழக்குக் கிளை என்றும் இரண்டு பள்ளிகள் நடந்து வந்தன. அதில் கிழக்குக் கிளைப் பள்ளியில் தான் சுப்பிரமணிய பிள்ளை படித்து வந்தார். 1899- இல் நான்காவது வகுப்பில் முதல் மாணவராகத் தேறினார். 1902- இல் நடுத்தரத் தேர்விலும் மாகாணத்தில் முதல் மாணவராகத் தேறினார்.

பின்னர், சென்னையில் உள்ள மாநிலக் கல்லூரியில் சேர்ந்து பி.ஏ. வகுப்பில் இவர் சிறப்புப் பாடமாக எடுத்துப் படித்தது வரலாறு. 1910-இல் இவர் முதன்மை பெற்று பி.ஏ. பட்டம் பெற்றார். 1913-இல் ஆங்கிலத்திலும் 1914-இல் தமிழிலும் ஆக இவர் முதல் மாணவராகத் தேறி இரண்டு மொழிகளிலும் 'கலைப் பேரறிஞர்' (Master of Arts) என்ற பட்டமும் புகழும் பெற்றார். அதுவும் போதாதென்று சட்டப் பேரறிஞர் தேர்வும் எழுதி, எம்.எல். (Master of Laws) பட்டமும் பெற்றார். சட்டத் துறையில் பிள்ளை எடுத்துக் கொண்ட பாடம் (Laws of Property) உடைமைச் சட்டம். இவர் பெற்ற தகுதியைக் கண்டு, நண்பர்களும், உறவினர்களும் இவரை 'எம்.எல். பிள்ளை' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கத் தொடங்கினர்.

மாணவராக இருந்தபோது சென்னை விக்டோரியா விடுதியில் இருந்தார். அதனைவிட்டு விட்டு, சென்னை திருவல்லிக்கேணி பெரும் வழியில் இருந்த ஒரு வீட்டில் வாழ்ந்து வந்தார். அவர் தங்கியிருந்த வீட்டிலேயே 'நண்பர் சங்கம்' தொடங்கினார். அதில் உறுப்பினர் நால்வரே! இவரே அதன் தலைவர்! தமிழில் ஏதாவது ஓர் அரும்பொருள் பற்றி டாக்டர் இரா. பி. சேதுப்பிள்ளை பேசுவார்! புலவர் சண்முக நயினார் பிள்ளை, ஏதாவது ஓர் அரும்பொருள் பற்றி ஆங்கிலத்தில் பேசுவார்! மற்றொரு நண்பர் பஞ்சாபகேச ஐயர், 'வாரச் செய்திகள்' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில், அவ்வாரத்தில் நிகழ்ந்த முதன்மையான செய்திகளை எடுத்து மொழிவார். தலைவராகிய சுப்பிரமணிய பிள்ளை அவர்களோ, அந்நிகழ்ச்சிகளைப் பற்றிய கருத்துகளை, எடுத்து முடிவுரை நிகழ்த்துவார்.

எம்.எல். பட்டம் பெற்ற சுப்பிரமணிய பிள்ளை, வழக்குரைஞராகப் பணிபுரிய விரும்பவில்லை. எனவே, சென்னை எழும்பூரில் வாழ்ந்து வந்த நீதிபதி சேஷகிரி ஐயரைக் கண்டு சட்டக் கல்லூரியில் ஓர் ஆசிரியர் வேலைக்கு (Lecturer) உதவிடுமாறு வேண்டிக் கொண்டார். அவர் விருப்பத்தை அறிந்த நீதிபதி சேஷகிரி ஐயர் உதவியால் சட்டக் கல்லூரியில் ஆசிரியர் பணியில் சேர்ந்தார் சுப்பிரமணியப் பிள்ளை.

சிறந்த கவிதைக்காக, நோபல் பரிசு பெற்ற வங்கக் கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் அவர்கள் குடும்பத்தின் பேரில், கல்கத்தா பல்கலைக் கழகம், சட்டத் துறையில், சட்டக் கலை பற்றி கொடுக்கப்பெறும் மூன்று பொருள் பற்றி கட்டுரைப் போட்டி நடத்தி அதில் வெற்றி பெறும் ஒருவருக்குப் பரிசும் பாராட்டும் அளிக்கப்பட்டு வந்தது. இந்தியா முழுவதிலும் இருந்த சட்டக் கல்வி பயின்ற அனைவரும் கட்டுரை எழுதி அனுப்பி இருந்தார்கள். சுப்பிரமணியப் பிள்ளையும் எழுதி அனுப்பியிருந்தார். 'குற்றங்களின் நெறிமுறைகள்' (Principles of Criminalogy) பற்றிய சுருக்கத்தை அனுப்பியிருந்தார். பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் சர். அசுடோஷ் முகர்ஜி (Sir Asutosh Mukerji) அவர்கள் ஆராய்ந்த கட்டுரைகளில், சுப்பிரமணியப் பிள்ளையின் கட்டுரையைத் தேர்ந்தெடுத்தார். கல்கத்தாவுக்குச் சென்று அக்கட்டுரையின் பன்னிரண்டு பகுதிகளையும் விவரித்துச் சொற்பொழிவாற்றினார். பத்தாயிரம் வெண்பொற்காசும் 'தாகூர் சட்ட விரிவுரையாளர்' என்ற பட்டமும் பெற்றார். இந்தியா மட்டுமின்றி உலகின் பல திசைகளிலும் அவரைப் பாராட்டிச் செய்திகள் வந்து குவிந்தன.

சுப்பிரமணியப் பிள்ளை திருவள்ளுவர் கழகம் கண்டார். திருக்குறள் பற்றி அரும்பெரும் சொற்பொழிவுகள் ஆற்றி வந்தார். நீதிபதி சதாசிவ ஐயர் போன்றவர்கள் வந்து கேட்டு வியந்து பாராட்டி மகிழ்வார்கள். அந்நாளில் தான் உலகில் புகழ்பெற்ற நோபல் பரிசுக் கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் அவர்கள் சென்னைக்கு வந்து பல இடங்களில் சொற்பொழிவாற்றினார். தம் குடும்பப் பெயரில் பரிசும் பாராட்டும் வழங்கப் பெற்ற திரு. கா.சுப்பிரமணியப் பிள்ளை அவர்களை இல்லத்தில் கண்டு அளவளாவி புகைப்படமும் எடுத்துக் கொண்டார்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக விளங்கிய தமிழவேள் த.வே. உமாமகேசுவரன் பிள்ளை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குத் தமிழ்ப் பேராசிரியரைத் தேர்ந்து அமைப்பதற்கான உட்கழகத்தின் தலைவர் பொறுப்பில் இருந்தார். அவர், கா. சுப்பிரமணியப் பிள்ளையைத் தேர்ந்தெடுத்தார்.

1929-30-இல், இவர் அண்ணா

மலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

1934-ஆம் ஆண்டில், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. இச்சங்கத்தில் 62 உறுப்பினர்கள் இடம் பெற்றார்கள். சங்கத்தின் தலைவர் பொறுப்பில் கா.சுப்பிரமணியப் பிள்ளை இருந்தார். தமிழர் மாநாடும் புலவர் மாநாடும் 15.12.1940-இல் நடத்தினார்.

காஞ்சிபுரத்தில் சில காலம் வாழ்ந்து வந்தார் கா. சுப்பிரமணியப் பிள்ளை. பழந்தமிழர் நாகரீகம் அல்லது பொருளதிகாரக் கருத்து எனும் சிறந்த ஆராய்ச்சி நூலும் .வான நூலும் இவரால் இங்கே தான் இயற்றப்பட்டன.

காஞ்சிபுரத்தில் இருந்த நாட்களில் கா. சுப்பிரமணியப் பிள்ளையைப் பற்றிய வாத நோய், சென்னையில் உள்ள தியாகராய நகரில் வாடகை வீட்டில் தங்கியிருந்தபோதும் தொடர்ந்தது; வறுமையும் தொடர்ந்தது. இந்த நிலையை பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், அண்ணாமலை அரசரிடம் எடுத்துச் சொன்னார். அதுகேட்ட நாளன்றே தமிழ்ப் பேராசிரியராக 1940-ஆம் ஆண்டு அமர்த்தப் பெற்றார்.

ஆசிரியர் மூவகையினர் என்று இலக்கணம் கூறும். 1. நூலாசிரியர், 2. உரையாசிரியர், 3. போதகாசிரியர்.

கா.சு. பிள்ளை, இம்மூவகை ஆசிரியராக இருந்ததோடு பத்திரிகை ஆசிரியராகவும் கவிராயராகவும் விளங்கி இருக்கிறார்.

கல்லூரிப் பேராசிரியராகவும்; 'தமிழ் மாணவன்' என்று தம்மைக் கூறிக் கொள்வதிலே பெருமை பாராட்டிய ஆங்கிலக் கவிஞராகிய டாக்டர் ஜி.யு. போப்பையர்,தமிழ்ப் பெருநூலாகிய திருக்குறளையும் திருவாசகத்தையும் ஆங்கிலத்திலே மொழி பெயர்த்து எழுதினார். அவ்விரு நூல்களுக்கும் இவர் பொழிப்புரை எழுதிப் போற்றினார். ஆதலின் உரையாசிரியராகவும்; வரலாற்று நூல்; ஆராய்ச்சி நூல்கள், கதைகள்; கலை நூல்கள்; பதிப்பு நூல்கள்; ஆங்கில மொழிபெயர்ப்புகள்; ஆங்கிலக் கட்டுரைகள் போன்றவற்றை யாத்துள்ளதால் நூலாசிரியர் என்ற பெருமையும் பெற்று விளங்கினார்கள். 'எம்.எல். பிள்ளை' என்று அழைக்கப் பெற்று வந்த பல்கலைப் புலவர் கா.சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள். 30.4.1945 அன்று, காலமானார்.

**(கா.சு. பிள்ளை பிறந்த நாள்: 5.11.92).**

## குமரி மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல்வர் உதவி

குமரி மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்துக்குத் தலா ரூ.10 ஆயிரம் வழங்கும்படி மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட திடீர் வெள்ளச் சேதம் மற்றும் வெள்ளப் பெருக்குக் காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமைகளை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பரிசீலனை செய்தார். இங்கு ஏற்பட்டுள்ள சேதங்களை நேரில் கண்டு தேவையான நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுவதற்காக மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் மற்றும் தமிழக அரசின் வருவாய்த்துறை நிர்வாக ஆணையாளர் திரு. சி.என். இராமதாஸ் ஆகியோரை உடனடியாகக் குமரி மாவட்டத்துக்குச் செல்லும்படி மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் இந்த மாவட்டத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தின் காரணமாகப் பலியானவர்களின் குடும்பத்துக்குத் தலா ரூ.10 ஆயிரம் தமிழக அரசின் சார்பில் வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

## கல்வியமைச்சருக்குக் கூடுதல் பொறுப்பு

தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகத்துக்கு அமைச்சரவையில் கூடுதல் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்த தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை, மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சரிடம் ஏற்கெனவே, கல்வி, தொழில்நுட்பக் கல்வி, விஞ்ஞானம், தொழில் நுட்பம், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறைகள் உள்ளன.

8-ஆம் பக்கத் தொடர்ச்சி

**உலக அளவில் உயர் தொழில்நுட்பப் பொருட்கள் தயாரிக்கத் தேவையான, 96 சதவிகிதத்திற்கு மேலான செறிவூட்டப்பட்ட கிராபைட் தயாரிப்பதற்கு, மேலைநாட்டுத் தொழில் நுட்ப நிறுவனங்களுடன் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும், இத்திட்டம் ஆக்கப்பூர்வமான முன்னேற்றம் ஏதும் இல்லாமல், தேக்க நிலையிலேயே, நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபொழுது கிடந்தது. மிகவும் பிற்பட்ட மாவட்டமாகிய பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திற்கு, இத்திட்டம் ஒன்று தான் நிரந்தரமாக உயர்வினை அளிக்க முடியும். இப்பகுதி மக்களின் பொருளாதார நிலையைச் சீர்செய்ய முடியும். என்று நான் நன்கு அறிந்ததனால், இத்திட்டத்திற்கு உடனடியாகச் செயல்வடிவம் கொடுக்க வேண்டுமென்று ஆணையிட்டேன்.**

இடைப்பட்ட காலத்தில், 1988-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில், இத்திட்டத்திற்கு மறைந்த முன்னாள் பாரதப் பிரதமர், மதிப்பிற்குரிய திரு. ராஜீவ்காந்தி அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

அன்றைய தினம், ஜெர்மனிய நாட்டுத் தொழில்நுட்ப உதவியுடன், செயல்படுத்துவதாக இருந்த இந்தத் திட்டம், தற்போது நமது நாட்டின் தொழில்நுட்ப உதவியுடனேயே, செயலாக்க முடிவு செய்து, இன்று முதல் கிராபைட் சுரங்கப் பணிகளும், ஆலை கட்டுமானப் பணிகளும் தொடங்குகின்றன.

ஏறத்தாழ 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்படும் இத்திட்டம். இன்னும் 18 மாதங்களில் முழுமையாக நிறைவு பெறும் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தில் தயாரிக்கப்படும் கிராபைட், 96 சதவிகிதத்திற்கு மேற்பட்ட கரிச்சத்து செறிவூட்டப்பட்டதாகவும் ஒரே சீரான தரமான பெரிய செதில்கள் கொண்டதாகவும் இருக்கும். இத்திட்டத்தை நிறைவேற்றும் பணியை இயந்திரவியல், மின்னியல் மற்றும் கட்டடவியல் சிறப்புப் பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டுள்ள, குறிப்பிட்ட காலத்திற்குள் பணியைச்செய்து முடிக்கும் திறமை கொண்ட, உலக அளவில் பெயர் பெற்ற ஒரு நிறுவனத்திடம் ஒப்படைத்து உள்ளோம். எனவே இப்பணி, கண்டிப்பாக 1994-ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்களில் நிறைவு செய்யப்பட்டு, உற்பத்தி தொடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



சிவகங்கை கிராபைட் திட்டம், 22 கோடி ரூபாய் செலவில் அரசால் செயல்படுத்தப்பட்டாலும், இதில் தயாரிக்கப்படும் உயர் ரக கிராபைட்டைப் பயன்படுத்தி, பல உயர் தொழில் நுட்பப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், அமைய உள்ளன. அவற்றின் மதிப்பீடு, ஏறத்தாழ 200 கோடி ரூபாயிலிருந்து, 800 கோடி ரூபாய் வரை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த வகையில் இத்திட்டம் இப்பகுதியின் முன்னேற்றத்திற்குப் பேருதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

எக்காரணத்தைக் கொண்டும் இத்திட்டம் தாமதப்படவோ, தடைப்படவோ கூடாது என்ற உறுதியான முடிவின் அடிப்படையிலும் விரைவில் இத்திட்டத்தின் பயன் இப்பகுதி மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்திலும், அரசு அனைத்து ஆக்கப்பூர்வமான துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு, இன்று இப்பணியைத் தொடங்கி உள்ளது. இப்பகுதி மக்களின் மனம் நிறையும் வண்ணம், இன்று இப்பணியைத் தொடங்கி வைக்கும் வாய்ப்பு, எனக்குக் கிடைத்ததை எண்ணிப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**பச்சை விளக்கு**

தமிழகத் தொழில் முன்னேற்றம் மஞ்சள் விளக்காக இருக்கிறதென்றும், அதனைப் பச்சை விளக்காக மாற்ற வேண்டுமென்றும் சகோதரர் ப. சிதம்பரம் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார். நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே மூடிக்கிடந்த பல தொழிற்சாலைகளை எங்கள் முயற்சியால் திறந்து வைத்து அப்போதே மஞ்சள் விளக்கைப் பச்சை விளக்காக மாற்றிவிட்டோம். தமிழகத்தில் எரிந்து கொண்டிருக்கும் பச்சை விளக்கை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தமிழகத் தொழில் முன்னேற்றத்திற்கு உதவுவதாகத் தெரிவித்த சகோதரர் ப. சிதம்பரத்தின் கருத்துக்களை வரவேற்கிறேன். தமிழகத்தின் தொழில் வளர்ச்சி பச்சை விளக்காக எரிந்து கொண்டிருப்பதால்தான், இன்று இந்த கிராபைட் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இனி என்றென்றும் தமிழகத்தில் பச்சை விளக்கு தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கும் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே போக்குவரத்துத் துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளது நம் அரசு. இன்று, 52 வழித்தடங்களில் புதிதாகப் பேருந்

துகள் இயங்கத் தொடங்குகின்றன. இவற்றால் இப்பகுதி மக்கள் கூடுதலாகப் போக்குவரத்து வசதிகளைப் பெறுகின்றார்கள்.

இந்த மாவட்டம் புதிதாக அமைக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும், இம் மாவட்டத்திற்கான மாவட்ட நீதிமன்றம், சமீபகாலம்வரை, மதுரை யிலேயே தான் இயங்கி வந்தது. இதனை அறிந்த நான், உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியுடன் தொடர்பு கொண்டு, உடனடியாக இம் மாவட்ட நீதிமன்றத்தை மதுரையிலிருந்து மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அதற்குத் தேவையான கட்டடங்கள் மற்றும் இதர வசதிகளை உடனடியாகச் செய்துதர வேண்டும் என்றும், அரசு அலுவலர்களுக்கு ஆணையிட்டேன். அதன் படி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட் டத்தில் மாவட்ட நீதிமன்றம், கடந்த 28.8.1992 அன்று சிவகங்கையில் திறக்கப்பட்டது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அவ்வாறே காமராசர் மாவட்டத்தின் மாவட்ட நீதிமன்றம் ஸ்ரீவில்லிபுத்தூரிலும், இராமநாதபுரத்திலும் தற் போது திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

சிவகங்கைச் சீமை, வீரத்தின் விளைநிலம் மட்டுமல்ல, விவேகத்தின் பிறப்பிடமும் கூட, இதே மண்ணில்தான் எடுக்க எடுக்கக் குறையாத கல்விச் செல்வத்தை எம் மக்களுக்குக் கொடுப்பதே எங்கள் தலையாய கொள்கை எனத் தந்தை பெரியார் அவர்களை முடிவெடுக்க வைத்து, பெரியார் அறக்கட்டளை மூலம், கல்விப் பணிகள் தொடரக் காரணமாயிருந்த சீர்திருத்தச் செம்மல், 'சிவகங்கை இராமச்சந்திரன்' என இன்றைக்கும், நம் திராவிட இயக்கத்தினரால் போற்றிப் புகழப்படும் பெருந்தகையாளர் வாழ்ந்தார், என் பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**அசைக்க முடியாத நல்லாட்சி**

இன்றைக்குத் தமிழகத்தில், அசைக்க முடியாத நல்லாட்சி ஒன்றை நடத்தி வரும் எங்கள் இயக்கம், ஆரம்பத்தில் தமிழகத்தில் பகுத்தறிவு இயக்கமாய் அரும்பிய வேளையில், கடும் எதிர்ப்புக்களை எல்லாம் உடைத்து எறிந்து, இப்பகுதியில் பகுத்தறிவு இயக்கம் வேர் ஊன்றி வளர, வழி வகுத்துக் கொடுத்தவர் அவர்.

அப்பெருந்தகையாளருக்கு ஒரு சிறப்பினைச் செய்திட நான் முடிவு செய்துள்ளேன். சிவகங்கை நகரில் இயங்கி வரும் அரசு மாவட்டத் தலைமை யிட மருத்துவமனை, இனி பெரியவர் இராமச் சந்திரனார் அவர்களின் பெயரைத் தாங்கி, 'இராமச்சந்திரனார் அரசு மாவட்டத் தலைமை யிட மருத்துவமனை' என்று அழைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள் கிறேன். இவருக்குச் செய்யும் இச்சிறப்பை, இப் பகுதியில் வாழ்ந்த திராவிட இயக்க வரலாற்று நாயகர்கள், அனைவருக்கும் செய்த சிறப்பாகவே நான் கருதுகிறேன்.

**கண்ணதாசன் மணிமண்டபம்**

திராவிட இயக்கம் தமிழ்ச் சமுதாயத்திற்கு



வழங்கியுள்ள கொடைகள் ஆயிரம் உண்டு. அவை களில் என்றென்றும் நம் நெஞ்சில் நிலைபெற்றி ருக்கிற பெருமை, அது கவியரசு கண்ணதாசனை நமக்கு வழங்கியதுதான். அரண்மனைத் தமிழை யும், ஆலயத் தமிழையும், உயர்குடி மக்களிடம் உலாவந்த தமிழையும், பாமர மக்களிடம் கொண்டு வந்து சேர்த்த பெருமை, தமிழ்க் கவிகளில் பாரதிக்கும், பாரதிதாசனுக்கும் அடுத்து, கவியரசு கண்ணதாசன் அவர்களையே சாரும்.

ஒரு மகா கவிக்குரிய ஆளுமை, தாய்மொழி யில் அளவற்ற புலமை, நினைக்கிற கருத்துக்களை நெஞ்சுரத்தோடு சொல்லுகிற துணிவு, ஆகிய வற்றின் தொகுப்புதான் கவிஞர் கண்ணதாசன் அவர்கள். அவர் தமிழ்க் கவிதை உலகில் மட்டு மல்லாமல், திரைப்பட உலகிலும் மாபெரும் கவிப் புரட்சி செய்தவர். இன்று சாதாரண மக்களின் நாவில் நடம்புரிவது அவரது கருத்துச் செறிவான தத்துவப் பாடல்கள்தான் என்பதை நாம் அனை வரும் அறிவோம். மேலும் உரைநடை, நாடகம், சிறுகதை ஆகிய துறைகளிலும், அவர் ஆற்றியுள்ள இலக்கியத் தொண்டு மகத்தானது; மரியாதைக் குரியது.

எனவேதான், கவியரசு கண்ணதாசன் அவர் களை நினைவுகூரும் வகையில், காரைக்குடியில் ஒரு மணி மண்டபத்தை, 55 இலட்சம் ரூபாய் செலவில், தமிழக அரசு அமைத்துள்ளது.

இந்த மணி மண்டபத்தில் அவருடைய புகழைப் பறைசாற்றும் வண்ணம், அவருடைய படைப்பு களைக் கொண்ட நூலகமும், அவரது வாழ்க் கையை விளக்கும் புகைப்படக் கண்காட்சியும் அமைக்கப்பட உள்ளது. இந்த மணி மண்டபத்தில், கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு வசதியாகக் கலை யரங்கம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. ஏற்றமிகு இவ்விழாவில், கவியரசு கண்ணதாசன் அவர் களின் புகழுக்கு மரியாதை செலுத்திடும் வகையில் அவரது நினைவாகக் கட்டப்பட்டுள்ள மணி மண்டபத்தைத் திறந்து வைத்ததில், மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

**இராணி வேலுநாச்சியார் சிலை**

அடுத்ததாக - இராணி வேலுநாச்சியார் சிலை அமைப்புக் குழுவினர், சிவகங்கை அரண்மனை வாசலில் அமைந்துள்ள சிலையைத் திறந்து வைக்க

வேண்டுமென்ற கோரிக்கை வைத்துள்ளார்கள். அதனை ஏற்று பல்லாண்டுக் காலம் சிவகங்கையில் நல்லாட்சி புரிந்த வீரமங்கை இராணி வேலு நாச்சியார் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்ததில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

அண்மையில் பெண் குழந்தைகளைப் பாது காக்கும் திட்டத்தையும், பெண் குழந்தைகளை அரசே வளர்க்கும் திட்டத்தையும், அறிமுகப்படுத்தி யிருக்கிறேன். சமுதாய வீதியில் விலைபோகாமல் வீசி எறியப்படுகிற பூக்களாகப் பெண் குழந்தைகள் எத்தனைக் காலம் இந்தத்தேசத்தில் துன்பப்பட வேண்டுமோ தெரியவில்லை.

''மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா!'' என்று கவிஞர்கள் பெண்ணின் புனிதத்தைப் பறைசாற்றினாலும், எதார்த்த நிலை வேறாகவே உள்ளது. பிறக்கப் போகிற குழந்தை ஆணா, பெண்ணா என்று கண்டுபிடித்துச் சொல்லும் திறமையை, இன்று விஞ்ஞானம் பெற்றிருக்கிறது.

இது வளர்ச்சிதான் என்றாலும் அந்த அறி வியல் தகவலை அறிந்துகொண்டு, பெண் குலத் தின் ஆணிவேரையே அறுத்து எறிகிற வேதனை தொடர்கிறது. இந்தக் கொடுமைக்குச் சமூகம் மவுன சாட்சியாக இருக்கலாம். ஆனால் பெண் ணுரிமைக்குப் போராடிய தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரும் வகுத்த வழியிலே நடைபோடும் பொறுப்பான அரசு ஒரு பெண்ணையே முதல் வராகக் கொண்ட இந்த அரசு எப்படி இதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்?

**போராடி வென்ற பெண்கள்**

'வெற்றி பெறுகிற ஒவ்வொரு ஆணுக்குப் பின்னும் ஒரு பெண் இருக்கிறாள் என்பது உல கறிந்த தத்துவம். இருந்தாலும், அந்தத் தத்துவத்தை உணராத சில மக்களும், நம்மிடையே இருக்கத் தான் செய்கின்றார்கள். பெண் குழந்தையா? அது வேண்டாம். கருவிலே கலைத்துவிடலாமா? அவ் வாறு கலைக்க முடியாவிட்டால், பிறந்த பெண் சிசுவை அழித்து விடலாமா? என்ற அவல நிலை ஒரு சில் குறிப்பிட்ட பகுதிகளில் நிலவி வருகின் றது. குறிப்பாக சேலம், உசிலம்பட்டி பகுதிகளில் இந்நிலை ஒரு சில இடங்களில் தொடர்கின்றது. ஆட்சிக்குத் துணை நின்றவர்கள் என்ற அளவில் மட்டுமல்ல. ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்து, போர்க்களத்துக்கும் சென்று போராடி, வெற்றி வாகை சூடிய பெண்கள் இல்லையா?

நமது வரலாற்றில் ராணி வேலு நாச்சியார், ராணி மங்கம்மாள், ஜான்சிராணி லட்சுமிபாய் போன்ற வீரப் பெண்மணிகள், அரசு பீடம் ஏறி வெற்றிகரமாக ஆட்சி புரிந்து மக்கள் நலம் காக்க வில்லையா? அவர்கள் எல்லாம் பெண்கள் தானே?

ஏன், நமது பாரத நாட்டுப் பிரதமராக, அன்னை இந்திரா காந்தி அவர்கள் எத்தனைக் காலம் ஆட்சி நடத்தினார்? இன்று உங்கள் சகோதரியான என் கையில்தானே தமிழகத்தின் கோடானு கோடி மக்கள் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறீர்கள்? நானும் ஒரு பெண் தானே!

பெண்களைத் தெய்வமாகப் போற்றுகிற மரபு நம் மரபில்லையா? செல்வத்துக்குத் திருமகள், கலைகளுக்குக் கலைமகள் வீரத்துக்கு மலைமகள் என்று போற்றுவதெல்லாம் மேடைக்காக மட்டும் தானா அல்லது கோயில்களுக்கு மட்டும்தானா?

திராவிட இயக்கத்தின் அடித்தளமே பெண் ணுக்குச் சம உரிமை என்ற உறுதியான கொள்கை யின் அடிப்படையில் தானே அமைக்கப்பட்டது! தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் பெண்களின் உயர்விற்காகவும், உரிமைக்காகவும் எவ்வளவு பாடுபட்டனர். இத்தனை முயற்சிகள் மேற் கொண்ட பின்னரும் பெண் குழந்தைகளை அழிக்கும் எண்ணம் ஒரு சிலர் மனதில் தோன்று கின்றது என்றால் அவர்கள் எத்தனைக் கீழ்த் தரமானவர்கள்?

பெண்கள் நாட்டின் கண்கள் என்று ஒரு பக்கம் பாடம் படிப்பதும், மறுபக்கம் பெண் மகவுகளைப் பலியிடுவதும், அதற்கு வரதட்சணை போன்றவற்றைக் காரணம் காட்டுவதும் எத்தகைய மோசடிகள் என்பதைச் சம்பந்தப்பட்டவர்களின் உள்ளங்களிலே தைக்கும் அளவுக்கு, உணர்த்தும் எழுத்துக்களும் பேச்சுக்களும் இன்றைய தேவை.



இந்த மாபெரும் கொடுமைக்கு நிரந்தரமாக ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில்தான் புதியதொரு புரட்சிகர மான திட்டத்தை அரசு தீட்டியது. கருவில் வளரும் குழந்தை பெண் என்று அறிந்து அதனை வேண் டாம் என்று எண்ணும் பெற்றோர்கள் தயவுசெய்து அந்தச் சிசுவை அழித்துவிடாதீர்கள். அவர்களை வளர்த்துக் காக்க எங்கள் அரசு இருக்கின்றது. பெண் குழந்தைகளைப் பெற்றெடுங்கள். அவர் களை வளர்த்து வாழ்வு அளிக்க வசதி இல்லை

என்றால் அருகிலுள்ள சமூக நலத்துறை இல்லங்களில் ஒப்படையுங்கள் நாங்கள் அவர்களை வளர்க்கின்றோம். அவ்வாறு நேரில் வந்து ஒப்படைத்தால், அந்தப் பெண் குழந்தையின் பெற்றோர் யார் என்று தெரிந்துவிடுமே! ஊரார் முன் தலை நிமிர்ந்து நடக்க முடியாதே என்று அஞ்சுபவர்கள் கூட கவலைப்பட வேண்டாம். சேலம், உசிலம்பட்டி பகுதிகளில் உள்ள பல சமூக நலத்துறை இல்லங்களுக்கு வெளியே தொட்டில்கள் கட்டி வைக்கச் சொல்லி இருக்கின்றேன். உங்களுக்கு வேண்டாத அந்தப் பெண் குழந்தைகளைப் பிறருக்குத் தெரியாமல் அந்தத் தொட்டில்களில் போட்டுவிட்டுப் போங்கள்.

**பெண்கள் இந்நாட்டுக்குத் தேவை**

உங்களுக்கு வேண்டாத அந்தப் பெண் குழந்தை அரசுக்கு வேண்டும் தமிழகத்திற்கு வேண்டும். ஏனெனில், தாயாக ஒரு பெண் வேண்டும் தாரமாக ஒரு பெண் வேண்டும்; தமக்கையாகக் கூட ஒரு பெண் வேண்டும். ஆனால், தங்கள் குழந்தையாக ஒரு பெண் வேண்டாம் என்று எண்ணும் எத்தர்களுக்குப் பெண் குழந்தை வேண்டாம் என்றாலும், நல்லதொரு சமுதாயத்தை நாளை உருவாக்க அவர்கள் எங்களுக்குத் தேவை. இந்நாட்டுக்குத் தேவை. எனவே, அவர்களை ஏற்று வளர்த்துக் காக்கும் பொறுப்பை அரசே ஏற்றுக் கொண்டு உள்ளது. இனி எந்தப் பெற்றோரும் பெண் குழந்தைகளை அழிக்க வேண்டிய அவசியமில்லை. இத்திட்டத்தைத் தயவு செய்து தயங்காமல் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பெண் சிசுக்களின் பெருங்கொலை என்பது நாகரீகத்தின் சீரழிவு, பண்பாட்டுப் படுகொலை. தர்மத்தின் பேரழிவு. எனவேதான் மனிதாபிமானக் கண்ணோட்டத்தில் நான் இந்தப் புதிய முயற்சியில் ஈடுபட்டுள்ளேன்.

இப்படி அல்லும் பகலும் தமிழக மக்களின் நலனையே தலையாய கடமையாகக் கொண்டு செயலாற்றிவரும் இந்த அரசை - குறிப்பாக என்னைக் குறைகூறி வருபவர்களும், குற்றம்சாட்டி வருபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஜனநாயகத்தில் ஓர் அரசைக் குறை கூறுவது விமர்சனம் செய்வது தவறல்ல. அவை ஆக்கபூர்வமானதாக இருக்க வேண்டும் என்பதுதான் நம் எதிர்பார்ப்பு இதற்கும் மேலாக இன்றைக்கு மக்களது கவனத்தைத் திசை திருப்பும் முயற்சியில், அளவிலா அவதூறுகளை அள்ளி வீசுகிறவர்களும் புதிதாக முளைத்திருக்கிறார்கள்.

கோமாளிகள் கோமாளிகளாக இருப்பதில் குற்றமில்லை. அவர்கள் குழப்பவாதிகளாகவும், குடிகேடர்களாகவும் மாறி இருப்பது தான் கொடுமை. இந்த அரசியல் அநாதைகளை அடையாளம் கண்டு ஒதுக்க வேண்டியது உங்கள் கடமை.

இந்த அரசியல் கோமாளிகள், ஆக்கபூர்வமான காரியங்கள் நிறைவேற்றப்படுவதைப் பொறுக்க மாட்டார்கள். ஏழை எளியோர் ஏற்றம் பெறுவதைத் தாங்கிக் கொள்ளமாட்டார்கள். தன் பெண்டு, தன் பிள்ளை, தன் வீடு என்ற குறுகிய வட்டத்திலேயே வாழ்ந்து, அந்தச் சுயநலச் சுவர்களுக்கு உள்ளேயே தங்களது அரசியல் வாழ்க்கையை முடித்துக் கொள்ள முற்படுபவர்களுக்கு வேறு வகையில் சிந்திக்கத் தெரியாயாது.

இப்படிப்பட்டவர்களுக்குத் துணை போகின்றவர்களும் தமிழகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள்தான் மக்களை நம்பாது மகஜர்களை நம்புகின்ற கூட்டம். தங்களது பொய்யான அறிக்கைகளால் பூகம்பத்தை ஏற்படுத்திவிட முடியும் என்று பகல் கனவு காணும் அரசியல் புல்லுருவிகள். அத்தகையோரின் ஆர்பாட்டங்களை யாரும் பொருட்படுத்தத் தேவை இல்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை மாய்மாலத்தால் வீழ்த்தலாம் என்று வீண் கனவு காணும் வீணர்கள் இவர்கள். உங்களுக்கு இவர்களைப் பற்றி மிகவும் நன்றாகவே தெரியும்! இந்த வீணர்கள் உங்களை ஏமாற்றவே முடியாது என்பதும் எனக்குத் தெரியும். உங்களை ஏமாற்ற நினைக்கும் இந்த அரசியல் கோமாளிகள் விரைவில் ஏமாறத்தான் போகின்றார்கள். ஏற்கெனவே முகவரி அற்றுப் போய், மூலையில் முடங்கிக் கிடந்து எப்போதாவது தங்கள் தலையை நீட்டும் இந்தச் சந்தர்ப்பவாதிகள், அரசியல் களத்திலிருந்தே அப்புறப்படுத்தப்படுவார்கள் என்பது உறுதி.

நாங்கள் நடந்து செல்லும் பாதை பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த பாதை. இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நடந்து வந்த பாதை, அவர்கள் அடியொற்றி வழி நடக்கும் நாங்கள்தான். இன்று திராவிட இயக்கத்தின் திருவிளக்கை ஏந்திச் செல்ல வேண்டியவர்கள் என்று உங்களால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் என்பதை நாங்கள் ஒருகணமும் மறவோம். எங்கள் கவனத்தைத் திசைதிருப்பி எங்கள் உணர்வுகளைத் தூண்டிவிட்டு, எங்கள் மீது களங்கம் சுமத்த வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளோரின் எண்ணம் ஈடேறப் போவதில்லை.

**நான் சட்டத்தை மீறவில்லை**

நாட்டுக்கு உழைக்கும் நல்லவர்களையும் ஏழை எளியோரின் இதயத்தில் இடம்பிடித்துள்ள மக்கள் தொண்டர்களையும் எவராலும் என்றைக்கும் அசைக்க முடியாது என்பதுதான் உண்மை. என் மீது எத்தனை எத்தனையோ குற்றச்சாட்டுகளையும் குறைபாடுகளையும் சிலர் திட்டமிட்டே கூறி வருகிறார்கள். அவற்றில் எள் அளவும் உண்மை இல்லை என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களுக்குப் பணிபுரிய நானும், என் மீது நம்பிக்கை வைத்து அன்பும் ஆதரவும் காட்டும் நீங்களும் நிலையாக இருப்பதைப் பொறுக்காத சில பொய்யர்களின் புலம்பல்களை, நீங்கள் நம்ப வேண்டாம். உங்கள் அன்புச் சகோதரியாகிய

நான் எந்தச் சட்டத்தையும் எந்தத் தருணத்திலும் மீறவில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம், இந்த இனிய விழாவில் நான் கலந்து கொள்ளும் இந்த நல்ல நேரத்தில் வறட்சியே வாடிக்கையாகிவிட்ட இந்த பசும்பொன் பூமி ஈரப்பசையுடன் காட்சி அளிக்கிறது. செம்மண்ணின் சிவந்த பரப்பில் பசுமைப் பொலிவுகளைப் பார்க்கின்றேன். உங்கள் சகோதரியின் ஆட்சியை வாழ்த்தும் வகையில் வானத்தின் நன்கொடையாக மழை பொழிந்திருக்கிறது. உங்கள் மனமும் நிறைந்திருக்கிறது. இந்தப் பசுமை இங்கே நிரந்தரமாக நிலைத்திட வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. அந்த வகையில்தான் இன்று சிவகங்கை கிராபைட் சுரங்கப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இன்று 23 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் இப்பகுதி மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. 36 கோடி ரூபாய் அளவிலான புதிய திட்டங்களுக்குக் கால்கோள் நாட்டப்பட்டுள்ளன. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், காமராசர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 1,500 பயனாளிகள் பயன் பெற 3 கோடி ரூபாய் அளவிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதி மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு ஒரு புதிய பாதையை அமைத்துக் கொடுக்கும் எங்கள் முயற்சியின் முதல் கட்டமாக இன்று மொத்தம் 62 கோடி ரூபாய் அளவிலான ஆக்கபூர்வமான பணிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய விழா, இத்தனைச் சீரும் சிறப்புமாக நடைபெற அல்லும் பகலும் கண் துஞ்சாது உழைத்த உங்கள் மாவட்டத்தையே சார்ந்த மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு. கண்ணப்பன் அவர்களைப் பாராட்டி நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். கண்ணப்பன் என்றாலே திறமையின் மறு பெயர் என்று கூறலாம். எந்தப் பணியை அவரிடம் ஒப்படைத்தாலும் அதனைச் சிறப்பாகச் செய்து முடிக்கும் வல்லமை படைத்தவர் அவர். இந்த விழாவை இங்கு ஒரு வெற்றித் திருவிழாவாக நடத்திக் காட்ட வேண்டும் என்ற அவரது நீண்ட நாள் ஆசை இன்று நிறைவேறி உள்ளது. அவருக்கு மீண்டும் என்னுடைய மனப்பூர்வமான பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவின் வெற்றிக்காக அவருடன் இணைந்து செயல்பட்ட மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் சகோதரர் திரு. செங்கோட்டையன் அவர்களுக்கும், இவர்கள் இருவருக்கும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவில் முன்னாள் மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்து உள்ளார்கள். சிவகங்கை கிராபைட் திட்டத்தை எப்படியாவது விரைவில் தொடங்க வேண்டும் என்பதில் மிக்க ஆர்வமும், அக்கறையும் கொண்டு, பல முயற்சிகள் மேற்கொண்டவர் அவர். இன்று சிவகங்கை கிராபைட் சுரங்கப் பணிகள் தொடங்குவது அவருக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கும் என்று நம்புகிறேன். இந்த விழாவில் அவரும் கலந்து கொண்டிருப்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விழாவின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் திரு. ஏ.என். தியானேஸ்வரன் அவர்களுக்கும், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தின் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம். தங்கவேலு அவர்களுக்கும், அரசு நலத்திட்ட உதவிகள் பெறப் பயனாளிகளைத் தங்கள் மாவட்டங்களிலிருந்து அழைத்து வந்த காமராசர் மாவட்ட ஆட்சித் தலைவர், திரு. வி. குணாளன் அவர்களுக்கும், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. என். ஜனார்த்தன் அவர்களுக்கும் என் பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழா சிறக்க அரும்பாடுபட்டு அனைத்து ஏற்பாடுகளையும் செய்த பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்களுக்கும் நல்ல முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொடுத்துள்ள காவல் துறையினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


இறுதியாக, ஆனால் என் இதயபூர்வமாக ஒன்றை நான் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். மதுரையிலிருந்து சிவகங்கை வரை நான் பயணம் செய்த சாலையின் இருமருங்கிலும் நீண்ட நேரமாக வழி மேல் விழி வைத்து என் வருகைக்காகக் காத்து நின்று என்னைக் கண்டவுடன் மகிழ்ந்து உணர்ச்சிப் பெருக்கோடு வாழ்த்தி வரவேற்ற பெருமக்கள் ஒவ்வொருவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கை ஆக்குகின்றேன்.

பாண்டிய நாட்டுப் பண்பு மணக்க, இன்று நீங்கள் காட்டிய அன்பும் எனக்களித்த இனிய வரவேற்பும் என்றென்றும் என் நெஞ்சில் நிலைத்திருக்கும். இந்த அன்பிற்கும், பாசமிக்க வரவேற்பிற்கும் என் இதயங்கனிந்த நன்றியை, உங்கள் ஒவ்வொருவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களின் பாசமும், பரிவும் உங்களுக்கான பணிகளை, இன்னும் வேகமாக நான் தொடர எனக்குப் புதிய ஊக்கத்தையும், உத்வேகத்தையும் அளித்துள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து விடை பெறுகிறேன்.''

- இவ்வாறு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உரையாற்றினார்.

விழா முடிவில்பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம்.தங்கவேலு, இ.ஆ.ப., நன்றி கூறினார்.

**(21.10.92-இல், சிவகங்கை விழாவில் ஆற்றிய உரை.)**



# மத்திய ரிசர்வ் போலீஸ் படைப் பிரிவு விழாவில் மாண்புமிகு முதல்வர்!

சென்னையை அடுத்துள்ள செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் ஆவடியில் உள்ள மத்திய ரிசர்வ் போலீசாரின் அணிவகுப்புத் திடலில் 24.10.92 அன்று நடைபெற்ற விழாவில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். அவரைக் கேரள பாணியில் உடையணிந்திருந்த சிறுமிகள் மலர் தூவி வரவேற்றார்கள்.

மத்திய ரிசர்வ் போலீசார் (சி.ஆர்.பி.எஃப்) 252 பேர்களும், 37 உதவி ஆய்வாளர்களும் தமது பயிற்சி முடிந்து படையில் இணைவது குறித்து நடத்தப்பட்ட இவ்விழாவில் கலந்துகொள்ள வருகை தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களை - ரிசர்வ் போலீஸ் டைரக்டர் ஜெனரல் திரு. டி.பி.என். சிங், மற்றும் உயர் அதிகாரிகளான திரு. கார்த்திகேயன், திரு. துபே ஆகியோர் வரவேற்றார்கள்.

இந்த விழாவில் கலந்துகொண்டு பயிற்சிக் காலத்தில் சிறந்த முறையில் தேர்வு பெற்ற உதவி ஆய்வாளர்கள் - திரு. சுரேஷ், திரு. கோபால் குமார், திரு.அஜய் குமார் ஆகியோருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெள்ளிக்கோப்பைகள் வழங்கினார். தனிச் சிறப்புக்குரிய வகையில் தொண்டாற்றிய 35 அதிகாரிகளுக்கு பதக்கங்கள் அணிவித்துப் பாராட்டினார்.

உயர் அலுவலர்கள் கூறிய உறுதிமொழி, அணிவகுப்பில் நின்ற அனைத்துக் காவல்துறையினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்பின், தேசியக் கொடிக்கும் இளம் நீலவண்ண ரிசர்வ் போலீசார் படைக் கொடிக்கும் மரியாதை செலுத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து, பாண்டுவாத்தியம் முழங்க, பயிற்சி- முடித்த வீரர்களின் பாங்கான அணிவகுப்பு ஏழிலுற நடைபெற்றது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அணிவகுப்பு மரியாதையை 'சல்யூட்' அடித்து ஏற்றுக்கொண்டார்.

அடுத்ததாக-டைரக்டர் ஜெனரல் திரு.டி.பி.என். சிங் வரவேற்புரையாற்றிவிட்டு, மத்திய ரிசர்வ்



போலீஸ் சார்பில் முதல்வருக்கு நினைவுப் பரிசு வழங்கினார்.

அப்படையினர் பணியினைப் பலபடப் பாராட்டி மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

நிகழ்ச்சியின் முடிவில், திரு. கார்த்திகேயன் ஐ.ஜி. அவர்கள் - தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய 3 மொழிகளிலும் நன்றி கூறினார்.

முடிவில் - எட்டுப் பிரிவாக அணிவகுத்து நின்ற மத்திய ரிசர்வ் போலீஸ் படையினர், துணை கமாண்டர் ரவிதீப் சிங் சாஹி - ''ஜெயலலிதா கி...'' என்று உரத்த குரலில் சொல்ல - அத்தனை வீரர்களும் ஒருமித்த குரலில் 'ஜே!... ஜே!... ஜே!...'' என மும்முறை கூறி வாழ்த்தொலி முழக்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் - மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பேசியதாவது:

மத்திய ரிசர்வ் போலீஸ் படைக்கான பயிற்சி முடிந்து செல்பவர்களின் அணிவகுப்பில் கலந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்த சிறந்த அணிவகுப்பில் கலந்துகொண்ட அதிகாரி களுக்கும், போலீசாருக்கும் நான் பாராட்டுத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்குப் பதக்கம் பெற்றவர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று உறுதிப் பிரமாணம் எடுத்துக் கொண்டு மத்திய ரிசர்வ் போலீஸ் படையில் முழு உறுப்பினர்களாகச் சேர்வதில் சப்-இன்ஸ்பெக்டர்களும், போலீசாரும் மிகவும் பெருமை கொள்வார்கள் என்று உறுதி யாக நம்புகிறேன்.

மத்திய ரிசர்வ் போலீஸ் படைக்கு மிகவும் புகழ்வாய்ந்த பின்னணி உண்டு. இந்தப் படைக்கு உள்ள புகழ் வாய்ந்த பாரம்பரியத்துக்காக இந்தப் படையினர் பெருமை கொள்ளலாம். இந்தப் படை - தொடங்கப்பட்ட காலத்தில் இருந்தே மாநில அரசுகளுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும் சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்க உதவுவதில் சிறந்த சேவைகளைச் செய்து இருக்கிறது.

1959-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ஆம் தேதி சீனத் தாக்குதலின் போது முதலில் 10 ரிசர்வ் போலீஸ் படையினர் நாட்டுக்காகப் போராடித் தங்கள் உயிரைத் தியாகம் செய்தனர். நாடு முழுவதிலும் அக்டோபர் மாதம் 21-ஆம் தேதி, வீரமரணம் அடைந்த போலீசாருக்கு அஞ்சலி செலுத்தும் நாளாக ஆண்டு தோறும் கடைப்பிடிக்கப்படுகிறது.

1965-ஆம் ஆண்டு பாகிஸ்தான் தாக்கு தலின்போது, அதை எதிர்ப்பதில் கட்ச் பகுதியில் மத்திய ரிசர்வ் போலீஸ் படை முக்கியப் பங்கு வகித்தது. 1971-ஆம் ஆண்டு நடந்த போரின் போதும் பாகிஸ்தானை எதிர்த்துப் போராடியது. நமது நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டை யும் அச்சுறுத்தும் வகையில் செயல்பட்ட நாச சக்திகள் பிரிவினை சக்திகளை ஒடுக்குவதிலும் மத்திய ரிசர்வ் போலீஸ் படை புகழ்பெற்று இருக்கிறது.

தற்போது மத்திய ரிசர்வ் போலீஸ் படை பஞ்சாப், ஜம்மு காஷ்மீர், அசாம் மாநிலங்களில் தீவிரவாதிகளையும், வன்முறையாளர்களையும் எதிர்த்துப் போராடிக்கொண்டு இருக்கிறது.

தமிழ்நாட்டிலும், மற்ற இடங்களிலும் விடு தலைப் புலிகளின் நடவடிக்கைகளை ஒடுக்கு வதிலும், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொலை செய்தவர்களைப் பிடிக்கத் தமிழக அரசுக்கும், விசேஷ புலனாய்வுப் படைக்கும் மத்திய ரிசர்வ் போலீஸ் படையினர் ஆற்றிய உதவிகளை நாம் அறிவோம்.

பல்வேறு காரணங்களுக்காக மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் பணியை அதிக அளவில் பல மாநிலங்கள் கோரி வருகின்றன. வன்முறை யாளர்கள் மற்றும் தீவிரவாதிகளிடம் இருந்து துப்பாக்கிகள் மற்றும் ஆயுதங்களைக் கைப்பற்று வதில் மத்திய ரிசர்வ் போலீஸ் படை பெரிய வெற்றியை அடைந்துள்ளது.

இந்தப் பணியில் மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் 619 பேர்கள் உயிர் இழந்துள்ளனர். 2,336 பேர் காயம் அடைந்துள்ளனர்.

இந்தப் படையில் உள்ள 517 பேர்கள் இன்று வீரப்பதக்கங்கள், விருதுகளால் கவுரவிக்கப் பட்டுள்ளனர். இது மட்டுமல்லாமல், விளை யாட்டுத் துறையிலும், மத்திய ரிசர்வ் போலீஸ் படையினர் சிறந்து விளங்குகிறார்கள். கடந்த பல ஆண்டுகளாக, இந்தப் படையின் அதிகாரிகள் மற்றும் போலிசாருக்கு உள்ள கட்டுப்பாடு நேர்மை மற்றும் பணியில் உள்ள முழு ஈடுபாடு இவை களால் இத்தகைய பெரிய வெற்றிகளை அடைந் திருக்க முடியும்.

எனவே மத்திய ரிசர்வ் போலீஸ் படையைத் தேசிய சீருடைப் பணியில் ஒரு முன்னணிப்

படையாக மத்திய அரசாங்கம் கருதுவதில் எந்தவித வியப்பும் இல்லை. இந்தப் படையின் பணிகளை விரிவுபடுத்த மத்திய ரிசர்வ் போலீஸ் படை பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பெண் போலீஸ் பிரிவை முதன் முதலாகத் தொடங்கியது. மத்திய ரிசர்வ் போலீஸ் படைதான் என்பதையறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.

பயிற்சிக்கு இந்தப் படை அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது. எந்தச் சீருடைப்பணி என்றாலும் சரி; அதன் முறையான பணிக்குப் பயிற்சிதான் அடிப்படையான காரணமாகும். எண்ணம் மற்றும் திறமைகளைக் கூர்மைப்படுத்த இது உதவும். ஆயுதம் மற்றும் கருவிகளின் நவீன வளர்ச்சி களோடும் போலீசாருக்குத் தொடர்பு ஏற்படுத்த வும், இதனைப் பயன்படுத்த-சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்கவும் இது வழிவகைகளை ஏற்படுத்து கிறது.

இந்தப் படை பணியாற்ற வேண்டிய சமுதாயத் தின் சமூக, பொருளாதாரச் சூழ்நிலையின் பின்னணியைப் பற்றி அறியவும் இந்தப் பயிற்சி உதவும். இந்தப் படையினர் ஆற்ற வேண்டிய அனைத்துப் பணிகள் பற்றியும் விரிவான முறை யான பயிற்சி அளிக்கப்படுகிறது என்று நான் அறிகிறேன்.

இங்கு நீங்கள் பெற்ற பயிற்சி, நீங்கள் ஆயுதங் களோடு இல்லாத நேரத்திலும் சமூக விரோதி களையும், சட்டத்தை மீறுபவர்களையும் சமாளிக் கும் வகையில் உங்களுக்குத் தன்னம்பிக்கை அளிக் கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

விரைவில் நீங்கள் உங்கள் படைப் பிரிவில் சேருவீர்கள். இந்தப் பயிற்சியின்போது நீங்கள் கற்றவைகளையெல்லாம் அப்போது நடைமுறை யில் செயல்படுத்த வேண்டியது இருக்கும். தொடக்க காலத்தில் உங்கள் கடமைகளை ஆற்றும் போது பல்வேறு இடர்ப்பாடுகளை எதிர்நோக்க வேண் டிய நிலை ஏற்படலாம். இங்கு நீங்கள் பெற்ற முறை யான பயிற்சி மற்றும் இங்கு நீங்கள் கடைப்பிடித்த கட்டுப்பாடான உணர்வுகள் எவ்வித அச்சுறுத் தலையும் தைரியமாக எதிர்நோக்கவும் சூழ் நிலைக்கு ஏற்றவாறு நடந்து கொள்ளவுமான மனப்பக்குவத்தை உங்களுக்கு அளிக்கும்.

பாரபட்சமற்ற, மதச்சார்பற்ற, கட்டுப்பாடு விசுவாசமான பணிகளுக்கு, மத்திய ரிசர்வ் போலீஸ் படை பெயர் வாய்ந்தது. சேவை மற்றும் விசுவாசம் என்ற மத்திய ரிசர்வ் படையின் குறிக்கோளை நீங்கள் உங்கள் நடவடிக்கைகள் மூலம் நிறைவேற்றிக் காட்ட வேண்டும். துன்ப மான சூழ்நிலையிலும் நீங்கள் மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் பாரம்பரியத்தையும் புகழை யும் காப்பாற்றி உங்கள் பிரிவுக்குப் பெருமை சேர்ப்பீர்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.


கடின உழைப்பு, கட்டுப்பாடு ஆகியவற்றினால் மட்டுமே முன்னேற முடியும் என்பதை நீங்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். இங்கே உங்களுக்குப் பயிற்சி அளித்தவர்களெல் லாம் கடின உழைப்பினாலும் கட்டுப்பாடான வாழ்க்கையினாலும் மட்டுமே இந்த நிலைக்கு வந்துள்ளனர்.

உங்கள் வாழ்வின் இந்த முக்கியமான நிகழ்ச் சியில் உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

- இவ்வாறு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பேசினார்.

**நிகழ்ச்சித் தொகுப்பு: 'ராஜு'.**

## நேருவின் அமுத மொழிகள்



வாழ்வில் எதையும் வெறுத்துக் குறை காண் பவன் எவ்வளவுதான் அறிவுக்கூர்மை படைத் திருந்தாலும் செயல்படுவதிலே ஊக்கமும் ஆற்ற லும் இன்மையால் எப்போதும் எதுவுமே செய்யான்.

உண்மையான நம்பிக்கை மட்டுமே ஒருவனுக்கு இருக்குமாயின், அந்த நம்பிக்கையே மலைகளைக் கூட அசைத்துவிடும்.

பழைய நாகரிகங்களிலே பல சீர்மைகள் உண்டு; என்றாலும் இன்றைய தேவைகளுக்கு அவை போதியவை அல்ல என்பது தெளிவாகி விட்டது.

அடைந்த பலன்களை வைத்துத்தான் இலட் சியங்களின் சிறப்பைச் சோதிக்க வேண்டும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



**கோ-ஆப்டெக்ஸ்**
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

